
"குறட்டை
விடுகிறதா
காங்கிரஸ்?"
கல்கி
KALKI 15.8.2004 ரூ.6.00
கல்யாண
விருந்து
அழைப்பிதழ்
உள்ளே!
தண்ணீர்...
-யாருக்குச்
சொந்தம்?



Vairam Vaibhogam
அலைபாயுதே!
பிரின்ஸ் டைமண்ட் செட்டை கண்டால் என் மனம் அலைபாயுதே.
பிரின்ஸ் வழங்குகிறது பாரம்பரிய வைர நகை கலெக்ஷன்ஸ்! உயர்ந்த ரசனையுடன் உருவாக்கப்பட்ட நெக்லேஸ்கள், காதணிகள், வளையல்கள் மற்றும் பல. ஒரு பேரின்பத்துக்கு தயாராகுங்கள்!
ப்ரத்யேக டைமண்ட் பிரிவு
நம்பகத்திற்கான சான்றிதழ்
*திரும்ப பெறும் உத்திரவாதம்
தோஷம் நீக்கிய வைரங்கள்
PRINCE JEWELLERY
rubecon
NAKSHATRA
asmi
PLATINUM
ONLY AT CHENNAI: PANAGAL PARK, Tel.: 2436 3137 • G-15A, SPENCER PLAZA, PHASE-I, Tel.: 2849 5817
• Showrooms open on Sundays • Join our jewellery savings scheme • www.princejewellery.com
• Valet parking available • EMI schemes available for purchase on CITIBANK, HSBC and ICICI Bank credit cards. Conditions apply.




கவர் ஸ்டோரி -4

இதயநோய்க்கு டயாலிஸிஸ்! -22

பி. பயம். மொழி!
-கலாப்ரியா கட்டுரை -24

எம்.ஜி.ஆர். தந்த கல்லாக்கட்டை -48

மக்களுக்காக ஓர் இணையம்! -72

பெல்லாம் பெண்ணே நீ யாரோ? -84


# கல்கி

15.8.2004

# இரண்டு, மூனு விஷயம்!

## வேண்டாம் எச்சில் பழக்கம்

**மா**வட்ட பொது நூலகத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அருகில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்த பெரியவர் ஒருவர், ஒவ்வொரு பக்கத்தைத் திருப்பும்போதும், விரலால் நாக்கில் எச்சில் தொட்டுத் தொட்டு திருப்பிக் கொண்டிருந்தார். சற்று நேரம் படிப்பதை நிறுத்திவிட்டு மற்றவர் களை கவனித்தபோதுதான் தெரிந்தது... பெரும்பாலானவர்கள் பெரியவரைப் போலவே எச்சில் தொட்டு பக்கத்தைத் திருப்பிக் கொண்டிருந்தனர். பழக்க தோஷத் தால் ஏறத்தாழ புத்தகத்தின் ஒரே இடத்தில் தொட்டு பக்கத்தைத் திருப்பும் பழக்கம் உள்ள நமக்கு, மற்றவர்களின் எச்சில் மூலம் எத்தனையோ வியாதிகள் பரவும் வாய்ப் புள்ளது. படித்தவர்கள்கூட இப்படிச் செய்வதுதான் வேதனைக்குரியது.



இனியாவது இப்படிப்பட்ட பழக்கத்தை கைவிட முயற்சி செய்யலாமே?

**- சுமதி சந்திரன், திருப்பத்தூர்**

## சமர்ப்பணம்

**பெ**ங்களூரிலுள்ள சமர்ப்பணம் என்ற சமூக சேவா சங்கம், ஒரு சிறந்த பணியைச் செய்கிறது. ஒவ்வொரு வருஷமும் ஜூன் மாதத்தில் பள்ளி நிர்வாகிகளிடம் "உங்கள் மாணவர்கள் கடந்த வருடம் உபயோகித்த நோட்டுப் புத்தகங்களில், காலியாக இருக்கும் பக்கங்களைக் கிழித்து எங்களுக்குக் கொடுங் கள்" என்று வாங்கிக் கொள்கிறார்கள். அப் படிக் கிடைத்த காலி பக்கங்களை வைத்து புதிய நோட்டுகளை உருவாக்கி, ஏழை மாண வர்களுக்கு வழங்குகிறார்கள். நோட்டுப் புத்தகங்களை பைண்டு செய்வதற்கு ஒரு ஸ்தாபனம் முன்வந்து மூவாயிரத்து ஐந்நூறு ரூபாய் வழங்கியது. இதை மற்ற நகரங்களி லும் பின்பற்றினால் ஏராளமான ஏழை மாணவர்கள் பயனடைவார்களே.


**- அனிதா ராமச்சந்திரன், பெங்களூர்**

## அன்னதான திட்டம் தேவையா?

**ச**மீபத்தில் நான் இந்து சமய அற நிலை யத்துறை நிர்வாகம் செய்யும் ஒரு திருக் கோயிலுக்குச் சென்றிருந்தேன். அங்கு விசா ரித்ததில், குரு பகவான் மூலவருக்கு அபி ஷேகம் செய்ய ரூ.750/- வசூல் செய்கிறார்கள். அதில் ரூ.500ஐ முதல்வரின் அன்னதான திட்டத்திற்கு எடுத்துக் கொண்டு, மீதமுள்ள ரூ.250-ல் வேண்டிய பூஜாதிரவியங்களில் அபிஷேகம் செய்கிறார்களாம்.

ஒரு தனி நபர் தம் இஷ்டப்படி செய்யும் அபிஷேகத்திலிருந்து பணத்தைப் பிடுங்கிச் செய்யும், முதல்வர் அன்னதானத் திட்டம் தேவையா?

இவர்களுக்குத் தேவையானால் தங்கள் கட்சி செய்யும் வசூல் பணத்திலிருந்து




செய்யட்டும். இந்து கோயில்களை ஏன் இப்படி ஆட்டிப்படைக்கிறார்கள்? இதற்கு விவாதம் தேவை. கோயில்களில் அன்ன தானம் செய்ய இவர்களுக்கு யார் அதிகாரம் கொடுத்தார்கள்?

கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல் அல்லவா, நம் காரியங்கள் இருக்கின்றன!

அரசியல்வாதிகளுக்கு லஞ்சமும், பதவி யும்தான் தேவை. கடவுள்மீது உண்மையி லேயே நம்பிக்கை இருந்தால், இவர்கள் லஞ்சம் வாங்க மாட்டார்கள், பதவி ஆசை பிடித்து பேய் போல் அலைய மாட்டார்கள். அரசியல்வாதிகளின் தலையீட்டை வன்மை யாகக் கண்டிக்க வேண்டும்.

**- இந்து, தஞ்சாவூர்**



• ரெங்கநாதன் தெரு

## பாதுகாப்பானதா?

கும்பகோணம் தீ விபத்தைப் பற்றி நண்பருடன் பேசிக் கொண்டிருந்த பொழுது, சென்னை ரெங்கநாதன் தெருவைப் பற்றி பேச்சு திரும்பியது.

நண்பர், முன்பு ஒரு நாள் அங்குள்ள பெரிய கடை ஒன்றுக்கு போயிருந்ததாகவும், அன்று அந்தக் கடையின் அதிபர் இறந்துபோன தகவல் கிடைத்ததும், உடனடியாகக் கடையை மூட நேர்ந்ததாகவும், நூற்றுக் கணக்கில் உள்ளே இருந்தவர்களை வெளியே அனுப்புவதற்குள், வாசலில் விஷயம் தெரியாமல் கூடிவிட்ட கூட்டம் சேர்ந்துவிட, மிகப் பெரிய 'தள்ளுமுள்ளு' ஆகிவிட்டதாகவும் கூறினார்.

நண்பருடைய கேள்வி இதுதான். மக்கள் அதிகமாக வந்து போகும் மாலை நேரத்தில், அந்த ரெங்கநாதன் தெருவில் ஏதாவது தீ விபத்து ஏற்பட்டால், அதனை உடனடியாகச் சமாளித்து தீயை அணைக்கும் அளவுக்குப் பாதுகாப்பு உள்ளதா? அப்படி முடியாது போனால், அதன் பாதிப்பு நினைத்துப் பார்க்கவே முடியாத ஒன்று என்றார்.

நண்பரின் கேள்விக்கு என்னால் எதுவும் கூற முடியவில்லை.

- எஸ். விஜயராகவன், சென்னை


கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யுஎஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

**Bharathan Publications Private Limited,**
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

# தண்ணீர்



தேசமே குமைந்து கொண்டிருக்கிறது. நதிநீர் பங்கீடு தொடர்பாக, அண்டை மாநிலங்களுடன் செய்து கொண்ட அனைத்து ஒப்பந்தங்களையும், தன்னிச்சையாக ரத்து செய்துவிட்ட பஞ்சாப் அரசு, கர்நாடகத்துக்கு கடுகளவும் சளைத்ததல்ல எனக் காட்டியிருக்கிறது. மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர் தாவாக்களை மட்டுமல்ல, தேசிய ஒருமைப்பாட்டையும் கேள்விக்குறியாக்கியிருக்கும் இது போன்ற மாநில வோட்டு அரசியல் ஒரு பக்கம் என்றால், புவியியல் பிரச்னை, சுற்றுச்சூழல் பிரச்னை என, மக்களைத் திரட்டி போராடுகிறவர்கள் மறு பக்கம். இந்தச் சூழ்நிலையில் தேசிய நதிநீர் இணைப்பு சாத்தியமா? உண்மையில் தண்ணீர் யாருக்குச் சொந்தம்? இந்திய அரசியல் சாசனம் என்ன சொல்கிறது? தமிழகப் பொதுப்பணித்துறையின் முன்னாள் தலைமைப் பொறியாளர் சி.எஸ். குப்புராஜிடம் கேட்டோம்.






''இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்ட போது, டாக்டர் அம்பேத்கரும், பண்டித நேருவும் நாட்டின் நதிநீர் வளம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று விரும்பினார்கள். அரசியல் சட்டத்தில் மூன்று பட்டியல்கள் உண்டு. முதல் பட்டியல் மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட விஷயங்கள். இரண்டாம் பட்டியல் மாநில அரசின் அதிகாரத்துக்கு உட்பட்டவை. மூன்றாம் பட்டியல் இரு அரசுகளுக்குமே உட்பட்டவை. நேருவின் அனுமதியோடு நதி நீர் வளத்தை, மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் முதல் பட்டியலில் சேர்த்து விட்டார் அம்பேத்கர். ஆனால் மாநிலங்களிலிருந்து சென்றவர்கள்



# யாருக்குச் சொந்தம்?



பெரும் கூச்சலிட்டு இதனை எதிர்த்தனர். பழுத்த ஜனநாயகவாதியான நேரு, பெரும்பான்மையினரின் விருப்பத்திற்குப் பணிய வேண்டும் என்ற ஒரே ஜனநாயக மரபுக்காக, தமது விருப்பத்திற்கு எதிராக இருந்தபோதிலும், இதனை இரண்டாம் பட்டியலில் சேர்க்க இசைந்தார். அதன் பலனைத்தான் இன்று மாநிலத்துக்கு மாநிலம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் சிறந்த அரசியல் தீர்க்கதரிசியாக விளங்கிய டாக்டர் அம்பேத்கர், ஐம்பது ஆண்டுகள் கழித்து இத்தகைய பிரச்னைகள் உருவாகும் என்று யூகித்து, முதல் பட்டியலில் பதிவு 56 என்ற ஒரு சிறிய ஷரத்தினை ஓசைப்படாமல் சேர்த்துவிட்டார். நதிநீர் வளம் இரண்டாம் பட்டியலில் இருக்க வேண்டும் என்று கூச்சலிட்ட மாநில அரசியல்வாதிகள், இதனைக் கவனிக்கவில்லை. இந்த ஷரத்தின்படி 'ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களில் பாயும் நதிகளில், ஒன்றுக்கும் மேற்பட்ட மாநிலங்களின் நன்மைக்காக ஒரு திட்டம் செயல்படுத்த வேண்டுமானால், மத்திய அரசு பாராளுமன்றத்தின் அனுமதியுடன் இதனைச் செயல்படுத்தலாம்' என்று தேசிய நதிநீர் இணைப்புக்கு அரசியல் சட்டத்திலேயே வழி ஏற்படுத்திச் சென்றுவிட்டார். மேலும் 262ஆம் விதிப்படி 'நதிநீரினைப் பங்கிட்டுக் கொள்வதில் இரு மாநிலங்களுக்கு இடையில் தகராறு ஏற்பட்டால், மத்திய அரசு தலையிட்டு, நடுவர் மன்றம் அமைத்து அதற்குத் தீர்வு காணலாம் என்று வழி காட்டப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேதான் இன்றைக்குக் காவிரி நடுவர் மன்றம் செயல்படுகிறது.

இதைத் தவிர, நீண்ட நாள் பயன்படுத்துவோருக்கு முன்னுரிமை என்ற சட்டக் கொள்கையும் உள்ளது. இதன்படி காவிரியை கரிகால் சோழன் காலம் தொட்டு பயன்படுத்திவரும் தமிழகத்தின் டெல்டா பகுதிக்குக் கொடுத்த பின்புதான், கர்நாடகம் காவிரித் தண்ணீரைப் பயன்படுத்த வேண்டும். 999 ஆண்டுக்கால உடன்படிக்கையின்படி, 106 ஆண்டுக் காலமாக முல்லைப் பெரியாறு அணையின் தண்ணீரைப் பயன்படுத்தி வரும் மதுரை, இராமநாதபுரம் விவசாயிகளின் உரிமையை யாரும் பறித்துவிட முடியாது" என்கிறார்.

• எம்.எஸ். உதயமூர்த்தி



• சி.எஸ். குப்புராஜ்



• கே.எஸ்.ராதா கிருஷ்ணன்




அரசியல் சட்டத்தில் அழுத்தமாக கூறப்பட்டுள்ள இந்த உரிமைகளை நிலைநாட்டும் நடுவர் மன்றத்தின் ஆணைகளையோ, உச்சநீதி மன்றத்தின் உத்தரவுகளையோ மாநில அரசுகள் மதித்து நடப்பதில்லையே! எங்கே கோளாறு? மக்கள் சக்தி இயக்கத் தலைவர் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தியிடம் கேட்டோம்.

"மத்திய அரசும், உச்சநீதி மன்றமும், நடுவர் மன்றமும் ஆணையிடுவதற்குத்தான் அதிகாரம் பெற்றுள்ளனவே தவிர, அவற்றினை நிறைவேற்றுவதற்குத் தேவையான அமைப்புகளைப் பெறவில்லை. உச்ச நீதிமன்றமும், நடுவர் மன்றமும் தமது ஆணைகளைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய அமைப்புகளைப் பெற வேண்டும். பாராளுமன்றம் இதற்குரிய சட்டம் இயற்ற வேண்டும். இல்லையென்றால், சுய நல அரசியல் செய்யும் அமரீந்தர் சிங், போன்றவர்களைக் கட்டுப்படுத்த முடியாது." என்கிறார்.

இது ஒரு வழி என்றால் குப்புராஜ் ஒரு புதிய கருத்தை முன் வைக்கிறார். "மத்திய அரசு அவசரச் சட்டம் மூலமாக வங்கிகளை தேசிய மயமாக்கியது போல, நதிகளையும் தேசிய மயமாக்கிவிட்டால் நதிநீர் இணைப்பை யாரும் எதிர்க்க முடியாது. அப்படியும் எதிர்ப்பு இருக்குமானால், எந்தெந்த மாநிலங்களில் இருந்து தண்ணீர் எடுக்கிறோமோ, அவர்களுக்கு அரிசியோ, மின்சாரமோ அல்லது பணமாகவோ கொடுத்துவிடலாம். மேலும் நதிநீர் இணைப்புக்கு, அரசு பணம் செலவழிக்க வேண்டிய அவசியமில்லை. மக்கள் தங்கள் நலனுக்காகச் செய்து கொள்ளும் திட்டமாகவே இதைச் செயல்படுத்த முடியும். தென்னக நதிகள் இணைப்பு மூலம் மட்டும் மூன்றேகால் கோடி ஏக்கர் புன்செய் நிலம் நன்செய் யாகிவிடும். வளம் பெறப் போகும் அந்த நிலங்களின் சொந்தக்காரர்களான பல லட்சம் விவசாயிகளிடம் மேம்பாட்டு வரியாக வசூலிக்கலாம். நதி நீர்ப் பிரச்னையால் மெல்ல மெல்லக் குறைந்து கொண்டே வரும் தேசிய ஒருமைப்பாட்டை நதிகளை இணைப்பதன் மூலம் சரிசெய்து விட முடியும்"

ஆனால் சுற்றுச் சூழல் போராளிகளின் எதிர்மறையான பிரசாரம், அனைத்து மாநில மக்களின் மனங்களின் ஒருமித்த கருத்தை உருவாக்குமா? உதயமூர்த்தியின் கருத்துக்கு நாம் காது கொடுத்தே ஆக வேண்டும். "சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் யாருக்கும் மாறுபட்ட கருத்துகள் இல்லை. ஆனால் சுற்றுச் சூழலை மட்டுமே முக்கியப் பிரச்னையாக எடுத்துக் கொண்டு, தேசம் முழுமைக்குமான ஒரு மாபெரும் மேம்பாட்டுத் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடுவது முட்டாள்தனம். வடக்கே கடந்த இருபது ஆண்டுகளாகத் தொடர்ந்து வெள்ளம். தெற்கே தொடர்ந்து வறட்சி. இதைவிடக் கொடுமை, இந்திய நதிகளின் பல லட்சம் டி.எம்.சி. தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. பக்கத்திலிருக்கும் கேரளத்தில், பல ஆறுகள் அரபிக் கடலில் கலந்து வீணாகும் தண்ணீர் மட்டும் இரண்டாயிரம் டி.எம்.சி.! தேசிய நதிநீர் இணைப்புக்






காக பதினைந்து வருடங்கள் ஆராய்ந்து 'வாட்டர் டெவலப்மெண்ட் ஏஜென்சி, திட்டவரைவை வெற்றிகரமாகத் தயாரித்திருக்கிறது. பாதிக்கப்படும் குடும்பங்களை முதலில் வேறு இடத்திற்கு குடி பெயர்த்து அவர்களது பொருளாதார வாழ்வுக்கு வழியும் காட்டிவிட்டால் பிரச்னை தீர்ந்தது. இதற்கு நாகரித்தைப் பிடுங்கி நடுதல் என்று அபத்தமான அர்த்தம் கொள்ளத் தேவையில்லை.' என்கிறார்.

உண்மையில் மற்ற நாடுகளில் நதிநீர் இணைப்புகள் வெற்றிகரமாகச் செயல் படுத்தப்பட்டிருக்கிறதா? உதாரணங்களை அடுக்குகிறார், தேசிய நதிநீர் இணைப்புக்காக கடந்த இருபது ஆண்டுகளாக, உயர் மற்றும் உச்சநீதி மன்றங்களில் சளைக்காமல் போராடி வரும் வழக்கறிஞர் கே.எஸ். ராதா கிருஷ்ணன் :

"கட்டுப்படுத்த முடியாத வெள்ளப் பெருக்கால், சீனாவின் ஒரு பகுதி சுற்றுச் சூழலுக்கு சவாலாக விளங்கிய 'மஞ்சள் நதித் துயரம்' உலகறிந்த ஒன்று. அந்த நதியை, மக்களிடம் கடன் வாங்கி, கிராண்ட் கால்வாயுடன் இணைத்திருக்கிறது சீனா. நைல் நதி - சூயஸ் கால்வாயுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் கலிபோர்னியா, டெக்ஸாஸ் மாநிலங்களுக்கு இடையிலான நதிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. லத்தீன் அமெரிக்காவில், அமேசான் நதியை திசை திருப்பியிருக்கிறார்கள். ரஷ்யாவில் வோல்கா-இப்பர் ஆகிய இரு மாபெரும் நதிகள் இணைக்கப் பட்டன. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.




தமிழகத்தின் நிலத்தடி நீர் வளம் அடுத்த பத்தாண்டுகளில் உப்பாக மாறிவிடும். காரணம், அந்த அளவுக்கு அதிகமாக உறிஞ்சப்படுவதுதான் என்று யுனெஸ்கோ அறிக்கை எச்சரிக்கை செய்கிறது. தமிழகம் பாலைவனமாவதைத் தடுக்க வேண்டும் என்றால், தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தை உடனே தொடங்க வேண்டும். இதை உடனே செயல்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் எப்போதோ ஆணையிட்டு விட்டது. வடக்கே பாயும் நதிகளை காவிரியுடன் மட்டும் இணைத்தால் போதாது. திருச்சிக்குத் தெற்கே மேலும் முந்நூறு கிலோ மீட்டர் கால்வாய் அமைத்து வைகை, தாமிரபரணி, பழையாறு வரையில் திட்டத்தை நீட்டித்தால் தான் ஒட்டுமொத்தத் தமிழகமும் செழிக்கும். கடும் வறட்சியால் வாடும் விருதுநகர், தூத்துக்குடி, திண்டுக்கல் மாவட்டங்கள் வளம் பெற உடனடியாக அச்சன் கோவில் - பம்பை - வைப்பாறு இணைப்புத் திட்டத்துக்கு மத்திய அரசு நிதி ஒதுக்க வேண்டும். மனம் வந்துவிட்டால், மார்க்கம் தானாக வரும். இந்திய அரசியல்வாதிகள் வோட்டு அரசியலைத் தூக்கிப் போட்டுவிட்டு நாட்டைக் காக்க நதிநீர் இணைப்புக்குக் கைகோக்க வேண்டும். மக்களை நீண்ட காலம் ஏமாற்ற முடியாது'' என்கிறார்.

நமது இப்போதைய எதிர்பார்ப்பெல்லாம், குறைந்த பட்சம் தென்னக நதிகளையாவது இணைக்க முயல்வார்களா என்பதுதான்.

**- ஆர்.சி. ஜெயந்தன்**

**அட்டை படம் : ஸ்ரீஹரி**



## போக்குவரத்துத் துறை:

# பகீர் விவரங்கள்!

தமிழகத்திலுள்ள ஏழு போக்குவரத்துக் கழகங்களின் ஒட்டு மொத்த வரவு செலவு கணக்குப்படி, சென்ற நிதியாண்டில் மட்டும் முப்பத்தியிரண்டு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அதற்கு முந்தைய நிதியாண்டை ஒப்பிடுகையில், பஸ்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது. வழித் தடங்களின் எண்ணிக்கையும் இறங்கியிருக்கிறது. புதிதாக விடப்பட்ட வழித் தடங்களும் குறைந்துள்ளன. போக்குவரத்துக் கழகப் பேருந்துகளால் 7537 விபத்துகள் நடந்துள்ளன. இதில் 1446 பேர் இறந்து போயிருக்கிறார்கள்!

இந்தப் புள்ளி விவரங்களைச் சட்ட மன்றத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் நத்தம் விஸ்வநாதன் வைத்த போது, நம்மை ஆச்சரியப்படுத்திய விஷயம் ஒன்றுதான். அதாவது 2002-03ல் போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்ட நஷ்டம், சுமார் நான்கு கோடியே இருபது லட்சம் ரூபாய். ஆனால் அடுத்த ஆண்டில் (2003-04) இந்த நஷ்டம் முப்பத்தியிரண்டு கோடியாக உயர்ந்திருக்கிறது. "இப்படி திடீரென்று நஷ்டத் தொகை உயர்ந்திருக்கிறதே! இதற்கு என்ன காரணம்? யார் காரணம்?" என்பதை அறிய, போக்குவரத்துத் துறை அமைச்சரைத் தொடர்பு கொண்டோம்.

'நீங்கள் சொல்லும் புள்ளி விவரங்கள் அனைத்தும், போக்குவரத்துத் துறை பற்றிய கொள்கைக் குறிப்பு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருப்பவை. வரவு செலவு, லாப நஷ்டக் கணக்குகளைப் பொறுத்த வரை, கொள்கைக் குறிப்புப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருப்பவை, கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு முன் இடை நிலையாக (provisional) தயாரிக்கப்பட்ட கணக்குகள். அதன்படிதான் முப்பத்திரண்டு கோடி நஷ்டம் என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால் தணிக்கை செய்த பின் இறுதியாக்கப்பட்ட கணக்குகளின்படி, ஏழு போக்குவரத்துக் கழகங்களும் மொத்தமாக நாற்பத்திமூன்று லட்ச ரூபாய் லாபம் ஈட்டியிருக்கின்றன. இதை நான் சட்ட மன்றத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறேனே" என்றார் அமைச்சர்.

"கொள்கைக் குறிப்பு தயாரிப்புக்கும், தணிக்கை நடந்ததற்கும் இடையில் கால இடைவெளி மிகக் குறைவாகவே இருந்திருக்கக் கூடும். இந்த நிலையில் கோடிக் கணக்கான நஷ்டம், எப்படி நாற்பத்தி மூன்று லட்சம் லாபத்தில் வந்து முடிந்தது?"


"மத்திய அரசின் எண்ணெய் நிறுவனங்களில், பெருமளவில் டீஸல் கொள்முதல் செய்வது போக்குவரத்துக் கழகங்கள் தாம். அந்த அடிப்படையில் போக்குவரத்துக் கழகங்கள் வாங்கிய டீஸலுக்குத் தள்ளுபடி கொடுக்க வேண்டும் என்று கேட்டு வந்தோம். அந்தக் கோரிக்கையை ஏற்று எண்ணெய் நிறுவனங்கள் தள்ளுபடி கொடுக்கவே, சுமார் முப்பத்திரண்டு கோடி ரூபாய் செலவினங்களில் மிச்சப்படுத்தப்பட்டு, இறுதியாக போக்குவரத்து நிறுவனங்கள் நாற்பத்திமூன்று லட்ச ரூபாய் லாபம் ஈட்டியிருக்கின்றன'' என்று சட்டமன்றத்தில் சொன்ன விவரங்களை, மறுபடி நம்மிடம் சொன்னார் அமைச்சர்.

"அரசு எடுத்த ஆக்கபூர்வமான நட



# 'குபீர்' குறிப்பு!!

வடிக்கைகள் காரணமாக, ஆட்சிக்கு வந்த முதல் இரண்டு ஆண்டுகளில் நஷ்டம் குறைக்கப்பட்டு, மூன்றாவது ஆண்டில் போக்குவரத்துக் கழகங்கள் லாபம் ஈட்டியிருக்கின்றன. பதினெட்டு ஆண்டுகளுக்குப் பிறகு போக்குவரத்துக் கழகங்கள் லாபம் அடைந்துள்ளன" என்று பெருமைப்பட்டு முடித்துக் கொண்டார்.



• விஸ்வநாதன்



• சௌந்தர்ராஜன்

**ந**மக்குக் கொஞ்சம் குழப்பம். இறுதியாக்கப்படாத புள்ளி விவரங்களை, ஏன் கொள்கைக் குறிப்பில் வைத்துக் குழப்ப வேண்டும்? இறுதி லாப-நஷ்டக் கணக்கில், அதிரடியாக கோடிக் கணக்கில் இடம் மாறும் ஜாலம் என்ன! இது, ஏதாவது புள்ளி விவரப் பந்தாடலா? இன்னமும் கொஞ்சம் தெளிவாக்கிக் கொள்ள போக்குவரத்துத் தொழிலாளர் தலைவராக இருந்தவரும், சி.ஐ.டி.யூ.வின் மாநிலப் பொதுச் செயலாளருமான சௌந்தர ராஜனைச் சந்தித்தோம்.

"அமைச்சர் சொல்கிற டீசல் தள்ளுபடி விவகாரங்கள், ஏப்ரல் - மே மாதங்களில் (நிதியாண்டு முடிந்த பிறகு) நடந்திருக்கக் கூடும். தணிக்கை, பிறகு நடந்திருக்கும். 2003-04ல் நஷ்டம் அதிகமாக இருந்ததால், தள்ளுபடித் தொகையை சென்ற ஆண்டு கணக்கோடு சேர்த்து, லாபத்துடன் பாலன்ஸ் ஷீட்டை முடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்வளவுதான். சில சமயம் இது போன்ற தொகைகளை அடுத்த நிதியாண்டுக் கணக்குகளுக்குக் கொண்டு செல்வது உண்டு. ஆனாலும் "எங்கள் ஆட்சியில் போக்குவரத்துக் கழகங்கள் லாபமாகவே இயங்குகின்றன" என்பதை காண்பிக்கும் அவசியம் ஆட்சியாளர்களுக்கு இருக்கிறது. எனவே கூடிய மட்டில் இறுதி பாலன்ஸ் ஷீட்டில், லாபம் கொண்டுவரப் பாடுபடுவார்கள்.

ஆனால் போக்குவரத்துக் கழகங்களின் பஸ்களின் தேய்மானக் கணக்கில் காட்டப்படும் தொகைதான், நஷ்டக் கணக்கு ஏறக் காரணமாக இருக்கிறது. பஸ்களை தனியார்மயம் ஆக்கப் பார்த்தார்கள். கடும் எதிர்ப்பு வரவே, இப்போது, இதுவரை, சுமார் அறுநூறு வழித் தடங்களைத் தனியாருக்கு தாரை வார்த்து விட்டார்கள். இதனால் போக்குவரத்து நிறுவனங்களுக்கு வருடம் ஒன்றுக்கு சுமார் நூறு கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும். இதை எப்படி ஈடு செய்வார்கள்? இருபத்தியொரு போக்குவரத்துக் கழகங்களை ஏழாகக் குறைத்தும், இன்னமும் நிர்வாகச் செலவு குறையவில்லை. தொழிலாளர்களைப் பாதிக்காத வகையில் பல சீர்திருத்தங்கள் செய்து, நஷ்டத்தைக் குறைக்கலாம்" என்கிறார் சௌந்தர் ராஜன்.

**- ப்ரியன்**

படங்கள்: **ராஜன்**

**தினமலர் அலுவலகத்தைத் தாக்கியிருக்கிறது பா.ம.க. ஏன் இந்த ரௌடியிஸம்? பா.ம.க. தலைவர் ஜி.கே. மணியிடம் கேட்டோம்.**

# 'வருந்தும் பா.ம.க; திருந்துமா தினமலர்?'

– ஜி.கே.மணி



• தாக்கப்பட்ட தினமலர் அலுவலகம்



"மக்கள் தொடர்பு சாதனமான பத்திரிகைகள், ஜனநாயக ரீதியாகச் செய்தி வெளியிடுவது பத்திரிகை தர்மம். ஆனால் பா.ம.க. பற்றியும் அதன் தலைவர்கள் பற்றியும், 'தினமலர்' மற்றும் 'காலைக்கதிர்' பத்திரிகைகள் வெளியிடும் அவதூறுகள், வதந்திகள், பொய்ச் செய்திகள், இட்டுக்கட்டும் கட்டுரைகள் ஆகியவற்றைச் சொல்லி மாளாது. இதன் காரணமாக பா.ம.க. பிரமுகர்களுக்கும் தொண்டர்களுக்கும் உண்டாகியிருக்கிற மன உளைச்சல், வேதனையும் ஏராளம். இந்தியாவில், ஏன் உலகில் என்று கூடச் சொல்லாம். எந்த ஒரு பத்திரிகையும் ஒரு அரசியல் கட்சியை இப்படி எதிரிக் கட்சியாக பாவித்து, விஷமச் செய்திகள் வெளியிடுவதில்லை.

திருவண்ணாமலையில் டாக்டர் ஐயா சொல்லாததைச் சொன்னதாகச் செய்தி வெளியிட்டது தினமலர். இதனால் இரு பிரிவினருக்கிடையே மோதல். சமூக அமைதி கெடுவதற்கு அடித்தளம் போட்டது தினமலர். இது வெளியிட்ட செய்தி வேறெந்தப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் எங்கள் பாராளுமன்ற உறுப்பினர் பொன்னுசாமியைப் பற்றி, 'இதோ ஒரு பிளாக்மெயிலர்' என்று மோசமாக எழுதினார்கள். வாசகர் கடிதம் பகுதியில் பா.ம.க. இமேஜை, டேமேஜ் செய்வதற்காக புனை பெயரில் கடிதங்கள் வருகின்றன. இதை எங்களால் நிரூபிக்க முடியும். மத்திய சுகாதார அமைச்சர் அன்புமணியைப் பற்றி "இப்படியும் ஒரு அமைச்சர்" என்று விஷயத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் விமர்சனம் செய்தார்கள். இப்படி அவதூறு எழுதுகிறீர்களே என்று மான நஷ்ட வழக்குப் போட்டு ஒரு கோடி கேட்டால், "ப்பூ இவ்வளவுதானா?" என்று கிண்டல் செய்கிறார்கள். பா.ம.கவைப் பற்றி அவதூறாக எதுவும் எழுதக் கூடாது என்று உயர்நீதி மன்றத்தில் தடை இருந்தும், தினமலர் தொடர்ந்து எங்களைப் பற்றி அவதூறுகளைக் கொட்டிக் கொண்டிருக்கிறது. பத்திரிகை கவுன்ஸிலுக்கும் புகார் செய்தாகிவிட்டது.

பா.ம.கவைப் பற்றி ஆக்க பூர்வமான விமர்சனங்களை எழுதுங்கள். அதை விட்டு விட்டு, இப்படி அவதூறுகளைச் செய்தியாக வெளியிடுவது எந்த வகையில் நியாயம்? அந்தப் பத்திரிகையின் போக்கைக் கண்டு வெகுண்டெழுந்த சில தோழர்கள் உணர்ச்சிவசப்பட்டிருக்கக் கூடும். நடந்த நிகழ்ச்சிக்கு வருந்துகிறோம். இந்த வன்முறையில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. அதை என்றும் நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இது எங்கள் நிலை. ஆனால் தினமலர் தன்னைத் திருத்திக் கொள்ளுமா?"

**- கௌசி**

ஒரு நாவல் படிப்பதுபோல
ஒரே மூச்சில் படித்து முடிக்கலாம்!

# கம்பராமாயணம்

# உரைநடையில்

முனைவர் அ. அறிவொளி

**912 பக்கங்களில் - இரண்டு தொகுதிகள் - விலை ரூ. 225**

**சலுகை விலை ரூ. 175**

* இந்நூலில் 112 தலைப்புகளில் 912 பக்கங்களில் காப்பியக்கதையை விரிவாகக் கூறியுள்ளார் முனைவர் அ. அறிவொளி அவர்கள்.
* காப்பியத்தில் உள்ள எல்லாச் செய்திகளையும் ஒன்றுவிடாமல் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.
* கம்பராமாயணத்தில் காணப்படும் சுவையான பாடல்கள் அனைத்தையும் கதைப்போக்கில் பொருத்தமான இடங்களில் பார்க்கலாம்.
* காப்பியத்தில் தோன்றும் சிக்கலான பகுதிகளை இந்நூல் மிக நுணுக்கமாகவும் அற்புதமாகவும் விளக்குகிறது.
* நுட்பமான பகுதிகளை முன்னும் பின்னும் தொடர்புபடுத்திக் காட்டும் அழகே அழகுதான்!
* கதையில் வரும் மாந்தர்கள் துடிப்புடன் செயல்படுகிறார்கள். அண்ணனுக்குப் பணிவிடை செய்வதில் நிகரற்று விளங்கும் இலக்குவன், அண்ணன் சொல்லைச் சட்டமாக ஏற்றுப் செயல்படும் பரதன், தாயன்பே உருவான கோசலை, ஞானியான சுமித்ரை, செருக்கு வாய்ந்த கைகேயி, மரபுக்கும் வாய்மைக்கும் இடையே கட்டுண்டு துடிதுடித்து இறக்கும் தயரதன், அளப்பரும் ஆற்றல் பெற்ற அனுமன், அறத்தின் நாயகரான இராமரைச் சார்ந்த வீடணன், அண்ணன் என்ற பாசத்துக்குக் கட்டுப்பட்டு உயிர் துறந்த கும்பகருணன் ஆகிய எண்ணற்ற மாந்தர்களை மறக்கவொண்ணா வகையில் விவரித்துச் சொல்கிறார் ஆசிரியர்.

**45 ஆண்டுகளாகக் கம்பனில்
அனுபவம் பெற்றவரின் சீரிய படைப்பு இது.**

இந்நூலினை நேரில் பெற,

சென்னை வர்த்தமானன் (✆ : 24364174) : கோவை விஜயா (✆ : 2382614 / 2394614): சேலம் சந்திரா (✆ : 2265635); திருச்சி திருச்சி புக் ஹவுஸ் (✆ : 2705098 /2764198); மதுரை செல்வி (✆ : 2343510 / 2345169); நெல்லை அருள் நந்தி சிவம் (✆ : 2339692) ஆகிய இடங்களில் சலுகை விலையினை (ரூ.175) மட்டும் ரொக்கமாகச் செலுத்தி உடனே பெற்றுக் கொள்ளலாம்.

தபாலில் பெற, கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுதுக. வி.பி.பி.யில் அனுப்புகிறோம். சலுகை விலை ரூ.175+ தபால் மற்றும் கட்டுச் செலவு ரூ.25 சேர்த்து ரூ.200 மட்டும் தபால்காரரிடம் செலுத்தி நூலினைப் பெறலாம்.

**வர்த்தமானன் பதிப்பகம்**

40, சரோஜினி தெரு, தியாகராய நகர், சென்னை - 17. ✆ : 24364174

# "ஜெ.புகாருக்கு 'க்ளூ' கிடைக்கலை!"

## – கமிஷனர் பேட்டி



''பொதுவாக செப்டம்பர் முதல் மார்ச் மாதம் வரை, வெளிநாட்டவர் தென்னிந்தியாவுக்கு, குறிப்பாக சென்னைக்கு வருகை தரும் கோலாகலமான சீஸன். காரணம் உலகிலேயே பாதுகாப்பான இடமாக போற்றப்படுவது சென்னை தான். ஆனால் இப்பொழுது "Is still chennai a safe place? என்று என்கொயரிகள் வருகின்றன.'' என நம்மிடம் கவலை தெரிவித்தார் பிரபல நட்சத்திர ஓட்டலின் மேலாளர்.

இப்படி சென்னையின் மானம் விமானமேறியதில் தவறேதும் இருக்க முடியாது! சமீபகாலமாக கிரிமினாலஜி படிக்கும் மாணவர்களுக்கு பாடம் எடுப்பது போல், குந்தகம் விளைவிக்கும் அத்தனை வகையான குற்றங்களும் சென்னையில் நடந்தேறி விட, அதிகாலையில் சூரியக்குளியல் போடும்முன், இரவில் பத்திரமாகத் தூங்கி எழுவோமா என்ற பீதியில் உறைந்து போயிருக்கின்றனர் சென்னை மக்கள்.



• நடராஜன்


விசாரிக்க நேராக இணை கமிஷனர் சாஸ்திரியிடம் சென்றோம். "ஏன் இப்படி சென்னை மக்கள் அலர்றாங்கன்னு தெரியலை. **ஜஸ்ட் மூணு கொலைகள்(!) தானே நடந்திருக்கு.** என்ன, மூணும் அடுத்தடுத்து குறுகிய கால கட்டத்திற்குள் நடந்ததால் மீடியா அதை பூதாகாரமாக்கி விட்டது'' என்றபடி ஒரு ஃப்ளாஷ்பேக்கிற்கு சென்றார். ''நூறு வருஷத்துக்கு முன்னாடி விமானம், பஸ் சர்வீஸ் எதுவும் கிடையாது. அப்போது நெடுஞ்சாலை வழியே நடந்தே பயணிக்கும் மக்களை வழிப்பறி கும்பல் மறித்து, ஒரே நேரத்தில் இருபது முப்பது பேரைக் கொலை செய்வார்கள், தெரியுமா? அப்படியா இப்பொழுது நடக்குது?'' என கேள்வி எழுப்பினார். அவருக்கொரு பெரிய சலாம் போட்டுவிட்டு, கமிஷனரிடம் தஞ்சமடைந்தோம்.

"200லிருந்து பார்த்தால் இந்த வருடம் தான் சென்னையில் குற்றங்கள் குறைவாக நிகழ்ந்துள்ளன. அபார்ட்மெண்டில் நடைபெற்ற கொலைகள் உண்மையிலேயே சீரியஸானவை. ஒப்புக் கொள்கிறேன். இரு கோஷ்டிகளுக்கிடையே நடக்கும் சண்டைகளில், எவனாவது ஒருவன் சாவது தமிழ்நாடு முழுக்க நடைபெறுவது தான். இதில் குற்றவாளிகள் பிடிபடுவது சுலபம். இதையெல்லாம் ஒன்று சேர்த்து சென்னையை அதிபயங்கர நகரமாகக் காட்டிவிடாதீர்கள்!" என்றார்.

**''பள்ளிகளில் வெடிகுண்டு புரளி கிளம்பியதில் தி.மு.கவின் சதியுள்ளது. இதற்கு என்னிடம் ஆதாரமுள்ளது'' என்று முதல்வர் விடுத்த அறிக்கையைப் பற்றிக் கேட்டால், ''எங்களுக்கு எந்த க்ளூவும் கிடைக்கவில்லை'' என்று ஒற்றை வரியில் பதிலை முடித்துக் கொண்டார்.**

இங்கு நமக்குள் எழும் கேள்வி - முதல்வர் தமக்குக் கிடைத்த ஆதாரங்களை ஏன் போலீஸ் கமிஷனரிடம் தெரிவிக்கவில்லை?

**- கண்**




## டெஹ்ரி பயங்கரம்!

**வி**பத்து என்பதே எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத வகையில் நிகழும் துர்ச்சம்பவம்தான். ஆனால், விபத்துகள் மீண்டும் மீண்டும் நிகழ அனுமதிக்கப்பட்டால், அவை விபத்துகள் அல்ல... நமது அலட்சியத்தின் பயனாக விளையும் அவலம். டெஹ்ரி அணைக்கட்டு பணியில் எழுபது - எண்பது உயிர்களைப் பறிகொடுத்த நிகழ்வு, இத்தகைய அலட்சியத்தின் விளைவான அவலமே!

கிட்டத்தட்ட இதே போன்று பதினெட்டுப் பேரை பலிகொண்ட நிலைகுலைவு, டெஹ்ரி அணை கட்டும் பணிக் களத்தில் இரு ஆண்டுகளுக்கு முன் நடந்திருக்கிறது. 'டன்னல்' நிலைகுலைந்ததில் அவர்கள் உயிரோடு புதையுண்டு செத்திருக்கிறார்கள். இவ்வளவு சீக்கிரத்தில் அதே போன்ற அவலம் மீண்டும் நிகழ அனுமதிக்கப்பட்டிருக்கிறது. சம்பவம் நடப்பதற்கு முந்தைய எழுபத்திரண்டு மணி நேரத்தில் அபரிமித வெள்ளப் பெருக்கு காரணமாக, ஹிமாசலப் பிரதேசத்தின் நத்பா ஜக்ரி மின் உற்பத்தி நிலையத்தின் இயக்கத்தையே பலமுறை நிறுத்தும்படி நேர்ந்திருக்கிறது. அவ்வளவு வெள்ளமும் உத்தராஞ்சல் நோக்கித்தானே பாயும் என்ற பகுத்தறிவின் அடிப்படையில், டெஹ்ரி அணைக் கட்டுப் பணியை நிறுத்தி வைத்திருக்க வேண்டும். ஆனால், செப்டெம்பர் மாதத்துக்குள் 'டன்னல்' அமைக்கும் பணி முற்றுப் பெறவேண்டிய இலக்கு இருந்ததால், ஊழியர்களின் உயிர் பணயம்




**கல்கி**





2004 ஆகஸ்ட் 15
தாரண ஆடி 31
மலர் : 63
இதழ் : 3


தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




வைக்கப்பட்டுவிட்டது. அணையின் உபரி நீரை வெளியேற்ற அமைக்கப்பட்டு வந்த நிலத்தடிப் பாதை, பலத்த மழை காரணமாகச் சரிந்து, ஊழியர்களுக்குச் சமாதி கட்டி விட்டது!


பணியை ஒப்பந்த அடிப்படையில் செய்து வரும் ஜே.பி. குழுமம் என்ற தனியார் நிறுவனம், மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு, உரிய நஷ்ட ஈடு தருவதாகச் சொல்கிறது. நஷ்ட ஈட்டை, யார், எந்த அடிப்படையில் நிர்ணயம் செய்வார்கள்? எவ்வளவு நஷ்ட ஈடு தந்தாலும் இழந்த உயிருக்கு ஈடாகுமா?

'நிலச்சரிவில் சிக்கியவர்களை மீட்பது முடியாத காரியம்' என்று ஒரு வரியில் சொல்லி முடித்துவிட்டது நிர்வாகம். ஆனால், சிக்கித் தவிப்பவர்கள் குற்றுயிரும் கொலையுயிருமாய்த் துன்புற்று மடிந்திருப்பார்களா? அல்லது மூச்சுத் திணறி முடிவைச் சந்தித்திருப்பார்களா தெரியாது. அச்சத்திலும், அதிர்ச்சியிலும், சொல்லொணாத் துயரிலும் அவர்கள் வாழ்வின் இறுதி நிமிடங்கள் கழிந்திருக்கும்.

கொங்கண் ரயில்வே விபத்து ஆனாலும் சரி, கும்பகோணம் தீ விபத்தாயினும் சரி, குணசீலம் கொடூரமானாலும் சரி, தற்போது நடந்துள்ள டெஹ்ரி அணைக்கட்டு விபத்தும் சரி... தவிர்க்கப்பட்டிருக்கக் கூடிய நிகழ்வுகள் என்பதால்தான், நமது வேதனை பல மடங்காகிறது.

கும்பகோணம் விபத்துக்காவது பொது மக்கள் அனுதாபம் என்பது மிகுந்த அளவில் கிட்டியிருப்பதால், பள்ளிகளில் எச்சரிக்கையுணர்வு பெருகுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆனால், டெஹ்ரி அணைக்கட்டில் நசுங்கிச் செத்தவர்கள் யார்...? பீஹார், ஒரிஸா, பஞ்சாப் போன்ற அயல் மாநிலங்களிலிருந்து வந்த கூலியாட்கள். இவர்களைப் போன்ற குடிபெயரும் கூலியாட்கள் **(migrant labourers)** தாம் பெரும்பாலான பிரும்மாண்ட கட்டுமானப் பணிகளில் உழைக்கிறார்கள். இவர்களுடைய உழைப்பின் பயனைத்தான் நாம் மின்சாரமாகவோ, ரயில்பாதை வசதியாகவோ, மேம்பாலமாகவோ அனுபவிக்கிறோம். இவர்களுடைய உழைப்பின் விளைவாகத்தான், நாட்டில் அடிப்படை வசதிப்




பெருக்கமும், பொருளாதார முன்னேற்றமும் சாத்தியமாகின்றன.

பெரும்பாலும் குழந்தை குட்டிகளின் ஒழுங்கான கல்விக்குக் கூட வழியின்றி, ஊர் ஊராகத் திரிகின்ற இந்த உழைப்பாளிகளின் பணிப்பாதுகாப்புக்கும், உயிர்ப்பாதுகாப்புக்கும் அரசு என்ன செய்கிறது? விபத்துக் காப்பீடு வசதிகள் இவர்களுக்கு வழங்கப்படுகின்றனவா? இவர்களுடைய குழந்தைகளின் கல்வி, மருத்துவத் தேவைகள் எவ்வாறு பூர்த்தியாகும்...? இது குறித்தெல்லாம் கவலைப்படுவதற்கு யாரும் இல்லை. பொது மக்களின் அனுதாபமோ, தார்மிக எழுச்சியோ இச்சம்பவத்தால் பெருகாது. அதனாலேயே இது விஷயத்தில் அரசின் பொறுப்பு அதிகம்.

அபாயம் நிறைந்த கட்டுமானப்பணிகளுக்கான பணி விதிகளை மறுபரிசீலனை செய்வது;

இயற்கைச் சீற்றங்கள் குறித்த முன்னெச்சரிக்கைத் தகவல்கள் அடிப்படையில், இத்தகு பணியிடங்களின் நிர்வாகிகள் செயல்படவேண்டும் என, விதிமுறைகளைக் கடுமையாக்குவது;

விதிமுறைகள் சரியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டிய அதிகாரிகள் தங்கள் கடமையில் தவறினால், அவர்கள் மீது சட்டம் உடனே பாயும் என்பதை அவ்வப்போது அறிவுறுத்துவது;

பணியாளர்களின் அடிப்படை வசதிகளுக்கும், பாதுகாப்புக்கும் உரிய ஏற்பாடுகள் செய்வது;

பருவமழைக்காலத்தில் நிகழக்கூடிய விபத்துகளை, நாடு தழுவிய அளவில் நோக்கி ஆராய்ந்து தவிர்ப்பது;

– இவை மத்திய அரசு, மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படுத்த வேண்டிய காரியங்கள்.

பாடம் கற்க நாம் கொடுத்த விலை போதும். மனித உயிரின் மதிப்பை உணராத முன்னேற்றமும் வளர்ச்சியும், விபரீதத்தையே இறுதியில் விளைவிக்கும். ○

## ஆசிரியர் பக்கம்

# பலியாகும் பெண்கள்!

தனஞ்சய் சாட்டர்ஜிக்கு மரண தண்டனை உறுதியாகி விட்டது. பதினான்கு வயது சிறுமியைப் பாலியல் பலாத்காரம் செய்த குற்றத்துக்காக நீதி வழங்கப்பட, பதினான்கு ஆண்டுகள் ஆகியிருக்கின்றன!

இன்னமும் தனஞ்சய் சாட்டர்ஜியின் குடும்பத்தினரும், சில மனித உரிமை அமைப்புகளும் விடுவதாயில்லை. மரண தண்டனை குறித்த முடிவுக்காக காத்திருந்த நேரத்தில், குற்றவாளி கடுமையான மன வேதனைக்குள்ளாகி, மனநலம் இழந்துவிட்டதால், அத்தண்டனை கூடாது என வாதிடப் போகிறார்களாம்.

மன்னிக்க முடியாத குற்றத்தை இழைத்தபோது, அவரது மனநலமும் மனவளமும் எங்கே தொலைந்தன? சாட்டர்ஜிக்காகப் போராடுவோர் இதற்குப் பதில் சொன்னால் நல்லது.

இந்த வழக்கிலாவது பதினான்கு ஆண்டுகள் கழித்து நீதி வழங்கப்பட்டிருப்பதாக நாம் ஆறுதல் கொள்ளலாம். ஆனால், நாட்டைக் காக்க வேண்டிய ராணுவ வீரர்கள், மணிப்பூர் மாநிலத்துப் பெண் மனோரமாவை, பாலியல் பலாத்காரம் செய்து கொன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கு எப்போது நீதி கிடைக்கும்? மனோரமா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது. தீவிரவாதத்தை ஒடுக்கும் ஆயுதம் பாலியல் பலாத்காரமா...!

மணிப்பூரில் நடந்ததைக் காட்டிலும் திட்டமிட்ட கொடூரத்தை, சூடான் நாட்டின் தென்பகுதியில் அந்நாட்டு அரேபிய ராணுவம் நிகழ்த்தி வருகிறது. ஆப்பிரிக்கக் கண்டத்து நாடான சூடானில், அரபு / பிரிட்டிஷ் ஆக்கிரமிப்புக்குப் பிறகு சுதந்திரப் போராட்டம் எழுந்தது. சுதந்திர சூடானில் அமைந்துள்ள ஆட்சியில் அரேபிய இனத்தின் கையே ஓங்கியிருக்கிறது. 'ஜஞ்சவீத்' என்ற அரபு ராணுவத்து இளம் 'வீரர்கள்' அந்நாட்டின் தென்பகுதியில் உள்ள கறுப்பர் இனப் பெண்களின் மீது கொடூரமான, திட்டமிட்ட பாலியல் பலாத்காரத்தைத் தொடர்ந்து இழைத்து வருகின்றனர். கறுப்பினக் குழந்தைகளே இனி பிறக்கக் கூடாது என்கிற வக்கிர சிந்தனையே, இந்தக் குரூரத்துக்கு அடிப்படைக் காரணம் என்கிறார்கள். இதற்கு சூடான் அரசும் மறைமுகமாகத் துணை போகிறது.

ஓர் இனத்தையே ஒழித்துக் கட்டும் இந்தப் பாதகச் செயலை ethnic cleansing என்கிறார்கள்! தூய்மை என்ற சொல்லின் பொருள், இதைக் காட்டிலும் பயங்கரமாகத் திரிக்கப்பட முடியாது. இதையும் உலக நாடுகள் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றன!

இத்தகு செயல்களில் ஈடுபடும் ராணுவத்தினரை வீரர்கள் என்று எவ்வாறு அழைப்பது? ராணுவ வீரர்களின் இயல்புக்கு விரோதமான வாழ்க்கையும், அவர்கள் பெறுகிற அங்கீகரிக்கப்பட்ட வன்முறைப் பயிற்சியும், அவர்களுடைய மிருகத்தனமான உணர்வுகளைத் தூண்டிவிடுகின்றன.

அங்கீகாரமும் பயிற்சியும் இருந்தும், உணர்வுகளில், கட்டுப்பாடும் சாத்வீகமும் கொள்ளும் ராணுவ வீரனே மெய்யான வீரன்.

இத்தகைய பண்பையே பண்டைய பாரதம் 'வீர தீர சௌர்ய பராக்கிரமம்' என்று கொண்டாடியது; சௌர்யம் - விவேகமும் கட்டுப்பாடும் இணைந்த வீரம்!



கல்கி கல்யாண மாலை

இணைந்து வழங்கும்

# கல்யாண விருந்து

# சூப்பர் ஜோடி விவாத மேடை

நடுவர்: முனைவர் **கு. ஞானசம்பந்தன்** சிறப்புப் பேச்சாளர்கள் :

திரைப்பட நடிகர் **பாண்டியராஜன்,** பேராசிரியர் **சுந்தரவல்லி**

சனிக்கிழமை, ஆகஸ்ட் 14, 2004 மாலை 6.00 மணி

**கொங்கு கலை அரங்கம், ஈரோடு**

இந்த அழைப்பிதழை அரங்குக்கு அவசியம் எடுத்து வரவும். (அனுமதி ஒருவருக்கு)

**தயவு செய்து தகவல்களை நிரப்பி அரங்கில் இந்த கூப்பனைக் கொடுத்து விடவும். நீங்கள் அதிர்ஷ்டப் பரிசு பெறுபவராகவும் இருக்கலாம்!**


பரிசுகள் வழங்குவோர்

Jansons

The Clothing World

Jansons India


நான் கல்கி வாங்குவது : ☐ வாரந்தோறும் ☐ எப்போதாவது ☐ முதல் முறையாக
(டிக் செய்யவும்)

பெயர் : ..............................................................................

விலாசம் : ..............................................................................

..............................................................................

.................................................. தொலைபேசி ..................................

குடும்பத்தின் குத்து விளக்கு

கல்யாண மாலை

வருக!



வருக!

குடும்பத்தின் குதூகலம்

கல்கி

# வலைபாயுதே



• அனிதா ரத்னம்

# வழுக்கும் மௌஸ்!

அரங்கம் - சென்னையில் 1992ல் துவங்கப்பட்ட கலை மற்றும் கலாசார அமைப்பு. அமைப்பாளர் புகழ் பெற்ற நடனக் கலைஞர் அனிதா ரத்னம். அரங்கம் பற்றிய தகவல் அரங்கம் arangham.comல் இருக்கிறது. இந்தியக் கலை மற்றும் கலாசாரத்தின் பெருமைகள், அதைப் பாதுகாக்க அரங்கத்தால் நடத்தப் படும் நிகழ்ச்சிகள், வொர்க் ஷாப்புகள், முயற்சிகள் குறித்து தகவல்கள் வண்ணமய மாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அனிதா ரத்னத்தின் பெர்சனல் தளமான anitaratnam.com பற்றி ஒரு வரியில் சொல்ல வேண்டுமானால், 'ஒரு சிறிய கவிதைத் தொகுப்பு' எனலாம்.

SMSஆல் எப்போதும் 'சித்து' விளையாட்டுகள் பண்ணுபவரா நீங்கள்? SMS forward பண்ணுவது தான் உங்கள் பகுதி நேர வேலையா? அப்படி யெனில் txt2nite.comற்கு சென்று பொறுக்கிக் கொள் ளுங்கள். உங்களுக்குத் தேவையான வகையறாக்களை!



• மேடி...

**உதாரணத்திற்கு ஒன்று**

பெண்களும், கம்ப்யூட்டரும் ஒன்று தான். காரணம் (1) யாராலும் முழுமை யாகப் புரிந்து கொள்ள முடியாது (2) உன் தவறுகள் எப்போதும் மெமரியில் இருக்கும் (3) நீ அவர்களுக்காக செல வழித்துக் கொண்டே இருக்கணும்.

நீங்க மேடி (மாதவன்) பைத் தியமா? மேடி அனுப்பும் ஈ-மெயில் உங்க இன்பாக்ஸை தட்டணுமா? ஓடுங்க. groups.yahoo. com/group/r madhavanfanclubக்கு. மெம்பர் ஆகுங்க. மேடிய கலாய்ங்க! மேடி புகைப்பதுண்டா? கிடை யாது. மேடிக்குக் குழந்தை உள்ளதா? இல்லை. பிடித்த நடிகை? மனோரமா! பிடித்த ஹீரோயின்? நம்ரதா சிரோத் கர். பிடித்த உணவு? தயிர்சாதம், பானிபூரி, என்று ரசிகைகளின் கேள்வி நீளுகிறது. பெர்சனல் ஆல்பமும் உள்ளதுப்பா!

*(விடுற ஜொள்ளுல மௌஸ் வழுக்குதப்பா!)*

- ப்ரௌசர்

OM SRI SATYA SAIRAM

# V.RAMAMURTHY, M.A

## EXPERT ASTROLOGER

*(Long Experience & Research in the field)*

*19, Gandhi Road, Alwarthirunagar, Chennai 600 087*

*TELEPHONE: (044)23775579 Mobile: 98405 34882*

*EMAIL: veeramastrology@yahoo.com*

Undertakes expert and effective research studies to offer accurate and amazing predictions with timing of events as follows

***I. MARRIAGE PREDICTIONS***

1) ***Exact Time of Marriage***
2) ***Why delay?***
3) ***Naturere & Physical Features of Life Partner***
4) ***Prospects of Progeny***
5) ***Married Life Prospects***
6) ***Marriage Problems***

***II Business prospects***

***III Financial Status & Real Property Conditions***

***IV Education***

***V Job & Employment***

***VI Health & Domestic life Conditions***

***VII Horoscopes Casting***

**Please contact by Mail or in Person for Fees and other details.**

# திருக்கயிலாயம் - மானஸரோவர்

## ஐந்தாம் ஆண்டு புனித யாத்திரை

## 2004 ல் இரண்டாம் பயணம் புறப்படும் நாள் 12.09.2004

**20 நாட்கள் கொண்ட புனிதப்பயணத்திற்கு அனைத்து செலவுகளுடன் விமானக்கட்டணம் உட்பட ரூ.66,500/- மட்டுமே**

பத்து ஆண்டுகளாக தர்மத்தை, ஞானத்தை, பக்தியை வெளிப்படுத்தி வரும் ஆன்மீகம் தெய்வீக மாத இதழ் சார்பாக திருக்கயிலை நாதனின் திருவருளால் தெய்வீக அன்பர்கள் அனைவரும் திருக்கயிலைநாதனை தரிசனம் செய்யவேண்டும் என்ற இறை சிந்தனையோடு ஆன்மீக உணர்வுடனும், சேவை மனப்பான்மையுடனும், 12 வருடங்களாக திருக்கயிலாய மானஸரோவர் யாத்திரை சென்ற அனுபவமுள்ள ECO - Trek International, (Kathmandu) நிறுவனத்தின் உரிமையாளர் Mr.JYOTI Athikari அவர்கள் தலைமையில் யாத்திரை நடைபெறும். இமய மலையின் வட பகுதியில் (திபெத்) திருக்கயிலாயம் - மானஸரோவர் அமைந்துள்ளது. இங்கு சிவ பெருமானே மலை வடிவில் வீற்றிருந்து அருள் பாலிக்கிறார். பார்வதியின் அம்சமாக கருதப்படும் மானஸரோவரில் புனித நீராடி திருக்கயிலாய பரிக்கிரம (கிரிவலம்) செய்து, தீர்த்தபுரி சென்று வர இருக்கிறோம். டாக்டர்களுக்கு முன்னுரிமை தரப்படும். குருப்பாக வருபவர்களுக்கு கட்டணத்தில் சலுகை உண்டு. குறைந்தது 12 நபர்கள் கொண்ட குழுவாக வந்தால் தாங்கள் விரும்பும் தேதியில் திருக்கயிலாயப்பயணம் ஏற்பாடு செய்து தரப்படும். பாஸ் போர்ட் மிக அவசியம்.

**திருக்கயிலாயம், மானஸரோவர், நேபாள் திருப்பயணத்தின் சிறப்பம்சங்கள்**

• மானஸரோவரில் கயிலை நாதர் முன் துறவிகளைக் கொண்டு சிறப்பாக பூஜை [illegible] செய்யப்படும். • பிரதோஷம், பௌர்ணமி நாட்களில் திருக்கயிலை மற்றும் மானஸரோவரில் தங்குதல். • தினசரி கூட்டு வழிபாடு நடத்தப்படும் • துறவிகளும் பங்கு கொள்கிறார்கள் • திருக்கயிலை திருப்பயண வீடியோ எடுக்கப்படும் • யாத்திரை காலம் முழுவதும் தென்னிந்திய உணவு வசதி • மருத்துவ உதவி • குளிருக்கு ஏற்ற பாதுகாப்பான தங்குமிடங்கள் (Mud Houses) • [illegible] அதிக நாட்கள் தங்கி செல்லுதல் • கயிலை நாதர் முன்பு நடைபெறும் ஹோமத்தில் வைக்கப்பட்ட கயிலைநாதர் வெள்ளிப் பதக்கம் வழங்கப்படும். • சென்னையிலிருந்து திருக்கயிலாயம் சென்று [illegible] திருக்கயிலை நாதனை தரிசித்து [illegible] திரும்பி வரும் வரை தங்கள் கூடவே இருந்து சிறப்பான சேவை செய்கிறோம். எங்களுடைய திருக்கயிலாய திருப்பயணத்தில் கலந்து கொள்பவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ. ஒரு லட்சத்திற்கு தனி நபர் விபத்துக் காப்பீடு இன்சூரன்ஸ் செய்து தருகிறோம்.

முன் பதிவுக்கு அணுகவும்...




**ஸ்ரீ அன்னபூரணி யாத்ரா சர்வீஸ்**

(Specialist in Holy Kailash - Manasarovar Yatra)

68, நடுத்தெரு, (ஸ்ரீ [illegible] கோயில் அருகில்) மயிலாப்பூர், சென்னை - 600 004.

TEL : 5206 7068, Fax : 044 - 5206 6525. Cell : 9444266617, 3103 8812 (24 Hours), E-mail:siva shiva@vsnl.net



# கிசுகிசுவின் வலி



அப்துல் கலாம் கையால் பத்மஸ்ரீ விருது பெற்ற பிறகு, இத்தனை நாட்களாக வி.ஐ.பி.யாக மட்டும் இருந்த சுதா ரகுநாதன், ஒரே கணத்தில் வி.வி.ஐ.பி.யாக உயர்வு பெற்றுவிட்டார். தமது ட்ரேட் மார்க் புன்னகையோடு பிரபலங்களுடனான தமது இசை அனுபவங்களை கல்கி வாசகர்களுக்காகச் சொன்னார் :

**சாய்பாபா :** காட்டிற்குள் பயணிக்கும் பொழுது, வலிப்பு வந்து, உடலெல்லாம் நீலமாகிப் போன பேபி சுதாவை (நான் தாங்க!) காப்பாற்றியவர் சாய் பாபா. நான் நிர்கதியான நிலையில் இருக்கும்போதெல்லாம் ஓடி வந்து காப்பாற்றுபவர் அவர்தான்.

**கலைஞர் :** கலைஞருடைய எழுத்துகளையும் கவிதைகளையும் ரசித்ததுண்டு வியந்ததுண்டு. தமிழுக்குத் தூணாக நிற்கக் கூடியவர். வற்றாத ஊற்று. கார்கில் போரின் போதும், ஒரிசா வெள்ளத்தின்போதும் கச்சேரிகள் நடத்தி ஆறு லட்சம் நன்கொடை கொடுத்தபோது, மிகவும் நெகிழ்ந்து போனார்.

**ஜெயலலிதா :** இவர் கையால் நான் 'கலைமாமணி' விருது பெற்றேன். இப்பொழுது நான் பெற்ற பத்மஸ்ரீ விருதுக்குக் கூட, அற்புதமான கடிதம் எழுதி வாழ்த்தியிருந்தார். நாளைக்கு நான் சுயசரிதை எழுதினால், நிச்சயம் இடம் பெறக்கூடிய நினைவுப் பரிசு அது.



• ஏ.ஆர். ரஹ்மான்



• இளையராஜா

**ரஹ்மான் :** பார்லிமெண்ட் வளாகத்தில் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் 'ஜனகணமன' ஆல்பத்தை வெளியிட்ட போதுதான் ரஹ்மானுடன் நெருங்கிப் பழக வாய்ப்புக் கிடைத்தது. இவர் ஆனந்த பைரவி, நாட்டைக் குறிஞ்சி, சஹானா, கேதாரம் போன்ற பல கர்நாடக ராகங்களை வெஸ்டர்னுடன் கலந்து, எத்தனை பாடல்கள் கொடுத்திருக்கிறார் தெரியுமா? இப்படி ரசிகர்களின் நாடி பிடித்து விதவிதமான இசை கொடுக்க இவரைப் போல் யாருக்கு வரும்? ரஹ்மான் இசையில், சாருகேசி ராகத்தில் அமைந்த 'உதயா உதயா உளறுகிறேன்' பாடலை தனிமையில் நிலவொளியில் கேட்டால் எனக்கு கண்ணிலிருந்து ஜலம் வரும். மயிர்க் கூச்செறியும்.



• பார்த்திபன்



• ரகுநாதன்

**இளையராஜா :** பொதுவாக இளையராஜா, தாம் நினைத்ததையே பாடகர்கள் பாட வேண்டும் என்று கண்டிஷன் போடுவாராம். ஆனால் 'இவன்'னுக்காக பாடும்பொழுது, எனக்கு முழுச் சுதந்திரம் கொடுத்து பாடச் செய்தார். 'உன் குருவோட ரசிகனம்மா நான். அவர் பாடிய 'எல்லாம் இன்பமயம்' பாடலின் மெட்டில் தான் இந்தப் பாட்டையும் உருவாக்கியுள்ளேன்' என தெம்பூட்டினார். இருபது ஆண்டுகள் கழிந்தும் 'இளைய

# தெரியுமா?



நிலா பொழிகிறது' மறக்க முடிகிறதா என்ன?

**பார்த்திபன் :** எங்கள் வீட்டில் ரகு, குழந்தைகள் என எல்லோருக்கும் பார்த்திபனை ரொம்பப் பிடிக்கும். புரிந்ததோ இல்லையோ, ஒரு நாள் என் கச்சேரி முழுக்கக் கேட்டு இம்ப்ரஸ் ஆகி, 'இவன்' படத்திற்கு 'என்னை என்ன செய்வாய்...' பாட அழைத்தார். நானும் ரகுவும் முதலில் தயங்கியது உண்மைதான். ஆனாலும் பார்த்திபன் விடாப்பிடியாக பாடவைத்து விட்டார்.

சினிமாவில் எத்தனையோ பாடகிகள் பாடினாலும், எனக்கும் அவருக்கும் முடிச்சுப் போட்டு கிசுகிசுக்கள் உடனடியாக முளைத்துவிட்டன. "ஏதோ பரபரப்புக்காக, செய்தி உண்மையா பொய்யா என்றெல்லாம் கூடத் தெரிந்து கொள்ளாமல், இதனால் சம்பந்தப்பட்டவர்களின் வலி தெரியாமல் எழுதும் கிசுகிசுக்களை நீ புறக்கணித்து விடு. உனது நோக்கம் நல்ல சங்கீதம் தான்" என எனது குரு எம்.எல்.வி. தாய்ப்பால் ஊட்டுவது போல் முன்பே அறிவுரை கூறியிருந்தாலும், நான் கலங்கினாலும் என்னைத் தேற்றும் கணவராலும், இதை நான் பொருட்படுத்தவேயில்லை.



* கருணாநிதி



* ஜெயலலிதா

**கணவர் ரகு :** பாடலைத் தவிர என் 'பிற'பலம் இவர்தான்.

என்னை விடத் திறமையான பாடகிகளெல்லாம் நல்ல கணவர், குடும்பம் இல்லாததால், அப்படியே குறுகிப் போயிருக்கிறார்கள். ஆனால் ரகு அற்புதமான கணவர். அவரின்றி இந்த சுதா இல்லை.

நான் மேலே சொன்ன அத்தனை பிரபலங்களிடமும் நான் கண்ட பொதுவான குணம், அவர்களது கால்கள் தரையில் தான் இருக்கின்றன. இவர்களது இந்த எளிமைதான் எனக்கும் உங்களுக்குமான பாலபாடம்!

**- ச.ந. கண்ணன்**

# இதய நோய்க்கு டயாலிசிஸ்!




உலகின் விலை உயர்ந்த மெர்சிடிஸ் பென்ஸ் காரை வாங்குகிற யாரும், எரி பொருளாக மண்ணெண்ணையைப் பயன் படுத்துவார்களா? நல்ல பெட்ரோல் போட்டு ஓட்டினால், என்ஜின் வாழ்நாள் அதிகரிக்கும் என அக்கறை காட்டுகிறது மனித சமுகம். ஆனால் இரத்தமும் சதையும் கொண்ட, மென்மையான உடல் இயங்க, தேவைப்படும் சக்திக்கு உண்ணும் உணவில் கட்டுப்பாட்டினைக் கடைப் பிடிப்பதில்லை. உணவுமுறை குறித்த விழிப் புணர்வும் இல்லை. இதனால் இரத்தத்தில் கொழுப்பு அரக்கனின் குடியாட்டம் தொடங்குகிறது. விளைவு! இரத்தத்தில் அதிக உப்பு, அதிக சர்க்கரை, அதிகக் கொழுப்பு ஆகிய மூன்று சிக்கல்கள் தோன்றுகின்றன. இந்த மூன்றும் ஒன்றோ டொன்று தொடர்புடைய நோய்களை உருவாக்குகின்றன. இதைத்தான் நவீன மருத்துவம் 'சின்ட்ரோம் எக்ஸ்' என்கிறது. இன்றைய தேதிக்கு சின்ட்ரோம் எக்ஸ் நிலையை எட்டி, மரணத்தைத் தழுவும் இந்தியவர்களின் எண்ணிக்கை, கணிசமாக அதிகரித்திருக்கிறது. இதய நோய், சர்க்கரை நோய் ஆகியவற்றுக்குச் சிறப்பு மருத்துவர் இருப்பதுபோல், இரத்தத்தில் அதிகரித்து வரும் உபரிக் கொழுப்பால் ஏற்படும் நோய் களுக்கென்று, சிறப்பு மருத்துவத் துறை இல்லாததுதான் இதற்குக் காரணம். ஆனால் இப்போது இரத்தத்தில் இருக்கும் அளவுக்கு அதிகமான கொழுப்பை டயாலிசிஸ் சுத்திகரித்து வெளியேற்றிவிடும் ரியோ பெரிசிஸ் முறை, நம்பிக்கை நட்சத் திரமாக வந்திருக்கிறது. எளிமையாகச் சொல்வதென்றால், இது இரத்த வடிகட்டி முறை" என்கிறார் இந்தியாவிலேயே முதன் முறையாக சென்னை புனித தாமஸ் மருத் துவமனையில் இதை அறிமுகம் செய் திருக்கும், சிறுநீரியல் சிறப்பு மருத்துவரான டாக்டர் பி. ரவிச்சந்திரன்.

யாருக்கெல்லாம், ரியோபெரிசிஸ் முறை பலன் அளிக்கக் கூடியது? எந்த நிலையில் கொழுப்பு டயாலிசிஸ் செய்து கொள்ளலாம்?



பி. ரவிச்சந்திரன்.

"நாம் உண்ணும் உணவில் இருந்து கிடைக்கும் பேட்டியா சிட் கல்லீரலுக்கு எடுத்து செல்லப்பட்டு, அங்கே கொழுப்பாக மாறுகிறது. இரத்த ஓட்டத்தில் தடை களை ஏற்படுத்தும் கெட்ட கொழுப்பை, மிகக் குறைந்த அடர்த்தி கொண்டது, குறைந்த அடர்த்தி கொண்டது, டி.ஜிஎல் என, மூன்று முக்கிய வகையாகப் பிரிக் கலாம். உடல் இயங்க செல்களுக்குத் தரப் படும் முதல் எரிபொருள், உணவிலிருந்து கிடைக்கும் சர்க்கரை. செல்களின் கதவைத் திறந்து சர்க்கரையை உள்ளே அனுப்பும் சாவிதான், கணையத்திலிருந்து சுரக்கும் இன்சுலின் திரவம். சர்க்கரை பற்றாக்குறை ஏற்படும்போது, கொழுப்பு எரி பொருளா கப் பயன்படுகிறது. ஆனால் கொழுப்பு திறந்த வீட்டிற்குள் நுழைவதுபோல், இன்சுலின் உதவியின்றியே செல்லுக்குள் புகுந்துவிடும். இந்த மூன்று கொழுப்பு வகைகளுமே அதிக ஒட்டும் தன்மை கொண்டவை. உடல் உழைப்போ, உடற் பயிற்சி இல்லாமல், உணவு மட்டும் உள்ளே சென்று கொண்டிருந்தால், சர்க்கரை மட்டுமே எரிபொருளாகப் பயன்படுத் தப்படும். ஆனால் உபரியாகச் சேரும்




கொழுப்பு 'கைலோமைக்கிரான்கள்' என்ற செல்லப் பெயருடன், கொழுப்புத் திவலைகளாக இரத்தத்தில் சுற்றிக் கொண்டே இருக்கும். ஒரு கட்டத்தில் இவை எரிச்சலூற்று Adipose Tissue எனும் கொழுப்புக் கோர்வைகளாக மாறிவிடும். இவற்றை நவீன மருத்துவம் உடலின் ஒரு உறுப்பு என்றே சொல்லத் தொடங்கியிருக்கிறது. இவைதான் உடலில் உள்ள எல்லா இரத்தக் குழாய்களிலும் அடைப்பை உண்டு பண்ணும் சின்னச் சின்ன அரக்கர்கள். இவை தவிர, தோலுக்கு அடியிலும் திசுக்களாக கொழுப்பு படர்கிறது.

இந்தக் கொழுப்பு அரக்கனின் ஒட்டு மொத்த அளவு, இரத்தத்தில் இருநூறு மிலி கிராமுக்கு குறைவாக இருக்க வேண்டும். இந்த அளவு அதிகரிக்கும்போதுதான், அடுக்கடுக்காக நோய்கள் படையெடுத்து வந்துவிடுகின்றன. முன்பு கொழுப்பை மலம் வழியே வெளியேற்றிக் குறைக்க, பைல்-ஆசிட்ஸ் ரெசின் வகை மருந்துகள் பயன்படுத்தப்பட்டன. இதில் பக்க விளைவுகள் அதிகம். இன்று Statins வகை மருந்து உலகம் முழுவதும் பயன்படுத்தப் படுகிறது. ஆனால் இதன்மூலம் முப்பது சதவிகித உபரி கொழுப்பை மட்டுமே குறைக்க முடியும். நமது சமுகத்திலோ ஐந்நூறு, ஆயிரம் என்று அளவு கை மீறிப் போன பிறகே மருத்துவமனைக்கு வரு கிறார்கள். உபரிக் கொழுப்பின் அளவு பல மடங்கு அதிகரிக்கும்போது, மருந்துகளால் ஆவது ஒன்றுமில்லை என களைத்துப் போன மருத்துவ உலகம், புதிய வழியைத் தேடிக் கொண்டிருக்கும்போது, மாபெரும் ஆறுதலாக, ரியோபெரிசிஸ் இரத்த சுத்திகரிப்பு முறையை 1980-ல் கண்டுபிடித்த பெருமை, ஜப்பானிய மருத்துவர்களையே சாரும். ஜப்பானிய அரசும், ஆயுள் காப்பீட்டு நிறுவனங்களும் அங்கீகரித்துள்ள இந்த முறை இங்கிலாந்து, ஜெர்மணி, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் பிரபலமாக உள்ளது. தமனிகளில் இருந்து குழாய் மூலம் இரத்தத்தை ரியோபெரிசிஸ் எந்திரத்தின் பிளாஸ்மா ஃபில்டரில் செலுத்தும்போது, அந்த வடிகட்டியானது இரத்த செல்களைத் தனியாகவும், பிளாஸ்மா உள்ள நீர்ப் பகுதியைத் தனியாகவும் பிரித்துவிடுகிறது. இப்படி பிரித்த பிளாஸ்மாவை மற்றொரு பில்டரில் செலுத்தும்போது கொழுப்பு மட்டும் தனியே பிரிக்கப்பட்டு நீக்கப்படுகிறது. கொழுப்பு நீக்கப்பட்ட பிளாஸ்மா மீண்டும் இரத்த ஓட்டத்தில் செலுத்தப் படுகிறது.

இந்த முறையில் இரத்தத்தை வடிகட்டுவதன்மூலம், இரண்டு மணி நேரத்தில் எழுபது சதவிகித கொழுப்பைப் பிரித்து எடுத்துவிடலாம். இதை டபுள் ஃபில்ட்ரேஷன் ஃலைப்பிட் ஏ பிரிசிஸ் முறை என்கிறோம்" என்று சொல்லும் டாக்டர், "இதைச் செய்து கொள்ள மருத்துவமனையில் அட்மிஷன் தேவையில்லை. சுத்திகரிப்பு முடிந்து, இரண்டு மணி நேரத்தில் வீட்டுக்குப் போய்விடலாம்" என்கிறார். "பரம்பரையாக கொழுப்புப் பிரச்னை உள்ளவர்கள். அதிக ஆன்டிபயாடிக் சாப்பிடும் புற்று நோயாளிகள், மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டவர்கள், இதய நோய் உள்ளவர்கள், ஒபிசிட்டியினர் என, எந்த வயதினரும் செய்து கொள்ளலாம்.

வெளிநாடுகளில் ரியோபெரிசிஸ் முறையில் கொழுப்பை குறைத்துக் கொள்ள, மூன்று முதல் நான்கு லட்சம் செலவாகிறது. இங்கே உள்நாட்டுத் தொழில் நுட்பத்துடன், எந்திரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதால், ஒருமுறை ரியோ பெரிசிஸ் செய்து கொள்ள, முப்பதாயிரம் மட்டுமே கட்டணம்" என்கிறார். செயற்கையான வாழ்க்கை முறை வந்துவிட்டதாலோ என்னவோ, இரத்தத்தையும் செயற்கையாக சுத்திகரிக்கும் நிலை வந்துவிட்டது.

\- ஸ்ரீ

# பசி, பயம், மொழி!

எச்சிலைத் தொட்டியில்
ஏறி விழும்
தெரு நாயின் லாகவம்
எனக்கொரு கவிதை
தரப் பார்க்கிறது.

குப்பை போட தொட்டி வைப்பது, நம் நாகரிகம் நமக்குத் தந்த படிப்பினை. நாம் நாகரிகமற்றிருக்கிறோம் என்பது வேறு விஷயம். மொகஞ்சதாரோவுக்கும் முன்னால் மனிதம் இருந்தது. இயற்கை எப்போதும் இருக்கிறது.


மழை பூமிக்கு மட்டும் பெய்யவில்லை, பிரபஞ்சம் பூராவும் வானம் தன் சமிக்ஞையை அனுப்பி வைக்கிறது. அனுப்பிக் கொண்டே இருக்கிறது. பூமியும் - மலையும் சமவெளியும் சேர்ந்த பூமி, மழையின் செய்தியை ஏற்று அருவியாக, நதியாக வரியெழுதுகிறது. பூமி பெற்றுக் கொண்டதை 'வரி' என்று 'சொல்வது' மொழி வழியே நாம் சிந்தித்து, பதிவு செய்வது. நாகரிகம் அல்லது வளர்ச்சி மூலம், நாம் பெற்றிருக்கிற சமூக ஆயுதமான மொழி வழியே.

சமீபத்தில் சில நண்பர்களை தாமிர பரணியின் ஊற்றுக் கண்ணான பாண தீர்த்தம் பார்க்க அழைத்துக் கொண்டு சென்றிருந்தேன். தூரத்தில் இருந்து அந்தக் கொட்டுகிற அருவியை படகிலிருந்தபடியே காட்டிய போது, உணர்ச்சி மிகுந்து சொன்னேன்.. 'இதோ என் கடைசிக் கவிதையின் கடைசி வரி..' என்று சொன்ன பின் வெட்கமாய் இருந்தது. யாரின் கடைசிக் கவிதை எழுதப்பட்ட பின்னும், அருவி எழுதிக் கொண்டு தான் இருக்கும். யாரின் கவிதை தீர்ந்தாலும் வானவில் வந்து கொண்டு தான் இருக்கும். பட்டாம் பூச்சி பூமியின் மேல் பறந்து பூவைத் தேடுவது நின்று போகாது. அதன் பசி, ஒரு பறவையின் பசி, அவற்றை மண் நோக்கி செலுத்திக் கொண்டேயிருக்கும். ஆதி மனிதனுக்குப் பசியுணர்ச்சி மேலிட்டபோது, மிருகங்கள் வேட்டையாடித் தின்பதிலிருந்து உண்ணக் கற்றுக் கொண்டிருக்கலாம். வயிற்றுப் பசி தீர்ந்ததும் உடல் வேறு பசிக்கு ஏங்க, அதை அணில்களிடம் கூட கற்றுக் கொண்டிருக்கலாம்.

"வேட்டை பற்றி
சொல்லித் தந்து
புணர்ச்சிக்கும் வழி கோலின
வேறு வேறு பசிகள்" என்று நாகரிக மனிதன் கவிதை எழுதுகிறான். வெளிப்பாட்டுப் பசி.

பழம் பழுக்கும் என்று காத்திருந்த கிளிகள், வந்து வந்து பார்த்துப் போன கிளிகள், அது காய்ந்து வெடித்துப் பஞ்சாகப் பறக்கும் ஏமாற்றம் எதுவுமின்றி பாடித்திரிய, எத்தனையோ காலம் கழித்து உவமை கண்டுபிடிக்கிறோம். 'இலவு காத்த கிளியென..' பறவை தன் பசிக்கு வேறு கிளைகள், மரங்கள் தேடி தன் பாட்டுக்குச் சென்று விடுகிறது. நாமோ நம் கலையின், வெளிப்பாட்டு சாமர்த்தியத்தின் முழுமை நோக்கி, அது பூரிதமாகிப் புகழ் பெறும் கனவுக்குள் இருக்கிறோம்!

இந்தச் சிதறலான சிந்தனைகளை, எண்ணங்களை (stray thoughts) எழுதுகிற போது கூட, இது யார் யாரின் பாராட்டைப் பெறும், அல்லது திட்டுதலைப் பெறும் என்று கற்பனையும் பயமும் தோன்றுகிறது. பயம் ஏற்கெனவே இருக்கிறது. நிர்வாணம்



உணர்ந்து ஒளிந்து கொண்ட முதல் மனுஷனின் பயம்... தொடர்கிறது.

நதிக்கரை தேடி, நதிக்கரையில் குடும்பம் ஸ்தாபித்து, நகர் கண்டு வேலிகளிட்டு, நாகரிகம் தலைமுறை தலைமுறையாய்ப் புது வடிவம் பெற்று, மொழி பிறந்து, மொழி வழியே சிந்தனை பிறந்து, சிந்தனை வழி பயம் ஜெயிக்க தத்துவங்கள் மொழிந்து விடுதலை தராத தத்துவப் போதாமையால், பயத்தையே வாழ்க்கையாக்கி, விதியை சுவீகரித்துக் கொண்டு வாழ்க்கை நகர்த்துகிறோம். பல வரிசைகளில் நிற்கிறோம், எல்லாருமே ஒரே மரண வரிசையில் என்ற பிரக்ஞையற்று. சிலருக்கு இது தெரியவும் தெரிகிறது. அதற்கான ஏற்பாடுகளையும் செய்கிறார்கள், பகுத்தறிவுக்குட்பட்டும் அப்பாற்பட்டும் (rationally and irrationally)... ஆனால் ஏற்கெனவே இருக்கிறதொரு பழைய ஏற்பாடு. இயற்கை மனிதனுக்காக செய்தது அது.

### மனிதன் அவனுக்காக

பயங்கள்
பழகிப்போய்
விலகிப்போன
ஆசுவாசம்...
பொறியொன்றை
வரிகளாகவே
மனகள் படிக்கும்

எழுதப் போந்தால்
அங்கீகாரம் பற்றின
மறு தயக்கங்களை
மூளை தெரிவிக்கும்.

"வேட்டை பற்றி
சொல்லித் தந்து
புணர்ச்சிக்கும் வழி கோலின
வேறு வேறு பசிகள்'
இனப் பெருக்கத்தின் அவசியம்
குறித்த பிரக்ஞையோடு
(சாபம் மட்டும் தொடர)
ஆதியாகமம் என்னவோ
முற்றிற்று.



பயம் உணர்ந்தே நலிந்தும்
பழகிப் போய்
விலகி நின்று சிரித்தும்(?)
விகிதமுறா தத்துவங்களில்
விடுதலை தேடியும்,
விதி வழியேயும்,

பஸ்ஸிலும்
பாடசாலையிலும்
வோட்டுச் சாவடியிலும்
கருத்தடை முகாம்களிலும்
பெருகிப் போய் காத்திருக்கும்
சனங்களுக்கு - ஆனாலும்
இன்னுமெத்தனை ஏற்பாடுகள்...

அமுதிர்ச்சி நீங்கின
புரிதக்கலை,
இயற்கையை இன்னும்
ஜெயித்து
மனித ஒருமை
ஆகியவற்றுக்கான
தேடுதல்
முற்றுவதேயில்லை.

ஜெயப்ரியா

# "குறட்டை விடுகிறதா காங்கிரஸ்?"

**- இளங்கோவன் பேட்டி**

**மத்திய அமைச்சர் ஆன பிறகு டில்லிக்கும் சென்னைக்குமாகப் பறந்து கொண்டிருக்கிறார் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன். அவரை ஒரு பிஸியான நேரத்தில் சந்தித்தோம்.**



*"தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் பன்னிரண்டு பேரும் தமிழக விவசாயிகள் மற்றும் ஏழை மக்கள் நலனுக்காக எதுவுமே செய்யவில்லை என்கிறாரே ஜெயலலிதா?"*

"விவசாயிகளின் நலன்களுக்காக பல்வேறு திட்டங்களை பட்ஜெட்டில் நிதி அமைச்சர் சிதம்பரம் அறிவித்தது ஜெயலலிதாவுக்குத் தெரிந்திருந்தும், வேண்டுமென்றே பழி போடுகிறார். நாங்கள் பன்னிரண்டு பேர் இருப்பதால் தான், சென்வாட் வரியை நீக்கி, லட்சக்கணக்கான நெசவாளர்களின் பிரச்னையைத் தீர்க்க முடிந்தது. சென்னை நகரின் குடிநீர்த் தேவையைச் சமாளிக்க கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், மத்திய அரசு நிதி உதவியில் தானே நடக்க இருக்கிறது? நின்று போன நாங்குநேரி உயர் தொழில் நுட்பப் பூங்கா வேலைகள், மீண்டும் துவங்கியிருக்கின்றன. அமைச்சர்கள் தயாநிதி மாறன், டி.ஆர். பாலு போன்றவர்கள் தங்கள் இலாகா சார்பாக, தமிழ்நாட்டில் பல ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்து வருகிறார்கள்.

*"முத்திரைத்தாள் ஊழல் வழக்கில் கிருஷ்ணா, மல்லிகார்ஜுன கார்கே, கலைஞர் ஆகியோரை விசாரிக்க வேண்டும் என்று அதி.மு.க. எம்.பிக்கள் மனு கொடுத்திருக்கிறார்களே?"*

"ஒரு காலத்தில், சி.பி.ஐ. என்ன வானத்தில் இருந்து குதித்ததா?" என்று கேட்டவர் தான் ஜெ. இதே முத்திரைத் தாள் வழக்கை சி.பி.ஐக்கு மாற்றாமல் இருந்தவர் இவர்தான். பின் கோர்ட்டின் மூலம் தான் மாற்ற முடிந்தது. இவர் மீதே ஏகப்பட்ட ஊழல் வழக்குகள் இருக்கும்போது, மற்றவர்களைக் குறை சொல்ல, எந்த உரிமையும் கிடையாது."


*"தமிழ்நாட்டில் மீண்டும் காமராஜர் ஆட்சி என்று பேசியுள்ளீர்கள். கூட்டணிக் கட்சிகளுக்குச் சங்கடமாக இருக்குமே!"*

"ஒவ்வொரு கட்சியினரும் அவர்கள் கட்சி ஆட்சிக்கு வர வேண்டுமென்று நினைப்பது இயற்கை தானே!"

*"தி.மு.க. மாநாடு போடுகிறது... வைகோ, நடைப் பயணம் போகிறார். இப்படி தமிழ்நாட்டில் எதிர் கட்சிகள் சுறுசுறுப்பாக இருக்க, காங்கிரஸ் குறட்டை விடுவது போல் தெரிகிறதே!"*

"குறட்டை விடவில்லை, செயல்பாடுகள் கொஞ்சம் மந்தமாக இருக்கின்றன. என்னால் முடிந்தவரை கூட்டங்கள் போடுகிறேன். சட்டசபைப் பிரச்னை தொடர்பாக கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து செயல்பட்டோமே!"

சந்திப்பு : **ப்ரியன்**
படம் : **ராஜன்**



உ

# ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ ஸமேத ஸ்ரீ ஸற்குணேச்வர ஸ்வாமி திருக்கோயில்

## ஸ்ரீ ஸற்குணேச்வரபுரம், கருவேலி - 609 501.

✆ : 04364 273900

**லட்சார்ச்சனை ஆவணி கடை ஞாயிறு மற்றும்**
**ருத்ராபிஷேகப் பெருவிழா 11.9.2004 - 12.09.2004**
**சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்கள்**

அன்புடையீர்,

நிகழும் தாரண வருஷம் ஆவணி மாதம் 26ஆம் தேதி (11.09.2004) சனிக்கிழமை பூச நட்சத்திரமும், துவாதசி திதியும் கூடிய நன்னாள் துவங்கி **ஸ்ரீ ஸற்குணேச்வரர் உடனுறை ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரீ அம்பிகைக்கு** லட்சார்ச்சனையும், மறுநாள் காலை கடை ஞாயிறு தீர்த்தப் பெருவிழாவும், மாலை ருத்ராபிஷேகத்துடன் கூடிய சிறப்புப் பிரதோஷ வழிபாடும் குருவருள், இறையருள் துணை கொண்டு நடைபெற இருக்கின்றன.

யமதீர்த்தமென்று வழங்கப்படும் திருக்குளத்தில் முறையாக ஸங்கல்பம் செய்து கொண்டு நீராடுவதும், முன்னோர்களையும் (பித்ருக்களையும்), தேவதைகளையும் குறித்து வழிபாடு செய்வதும் பெரும் பயனளிக்கும், தனி நபர் வாழ்விலும், குடும்பங்களிலும் உள்ள பல தோஷங்களை நீக்கும்.

**இரு தினங்களும் நடைபெறும் லட்சார்ச்சனையிலும், ஆவணி கடைஞாயிறு (12.09.2004) காலை தீர்த்தவாரியிலும், அன்று மாலை நடைபெறும் பிரதோஷ சிறப்பு வழிபாட்டிலும் இறையன்பர்கள் அனைவரும் வழக்கம் போல் ஆர்வத்துடன் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம்.**

*என்றும் இறைபணியில்*

*Dr. V. **கிருஷ்ணமூர்த்தி***
*பரம்பரை அறங்காவலர்*

**ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா** (Regd).
32/18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001.
போன்: 0435 / 2423297 மற்றும் **கிராமவாசிகள்**

"ஆவணி கடை ஞாயிறு தீர்த்தவாரிக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக கும்பகோணம், காசிராமன் தெரு, வேதவிநாயகர் கோயிலிலிருந்து வேன்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஞாயிறு (12.09.2004) விடியற்காலை மணி 4.30 - 5.00க்குள் புறப்படுகின்றன. ஒருவருக்குச் சென்று வர கட்டணம் ரூ. 30/- புனித நீராட விரும்புபவர்கள் கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றில் முன்னதாகவே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| எண் | நிகழ்ச்சி | கட்டணம் | பெறப்படும் பயன் |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீ கணபதி ஹோமம் 11.9.2004 காலை 8.00 மணி முதல் 9.00 வரை | ரூ. 50/- | தடைகள் நீங்கும், எடுத்த காரியத்தில் வெற்றி. |
| 2. | லட்சார்ச்சனை 11.9.2004 முதல் கட்டம் ஆரம்பம் காலை 10,00 மணி, பூர்த்தி 12.30. அன்று பிற்பகல் 4.00 மணிக்கு இரண்டாம் கட்டம் ஆரம்பம், இரவு 8.00 மணிக்கு பூர்த்தி. 12.9.2004 காலை 8.30 மணிக்கு மூன்றாவது கட்டம் ஆரம்பம், பூர்த்தி பகல் 12.30 மணிக்கு | ரூ. 100/- | வாழ்வில் இடர் நீங்கி நலம் பெருக. |
| 3. | ஸ்ரீ ருத்ரஜபம், அபிஷேகம் ஸங்கல்பம் 12.9.2004 அன்று 3மணிக்கு ஆரம்பம். மாலை 6 மணிக்கு பூர்த்தி. மாலை 6.30 மகா தீபாராதனை. | ரூ. 1000/- | இன்னல் நீங்க, செல்வம் பெருக |
| 4. | சிறப்பு அபிஷேகம் | ரூ. 50/- | சுபிட்சம், மங்களம் பெருக |

குறிப்பு: மேலே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள விரும்பும் அன்பர்கள் அவற்றிற்கான தொகையை "ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா" என்ற பெயருக்கு மணியார்டர் மூலமோ அல்லது வரைவுக்காசோலை (D.D) மூலமோ கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிகளில் ஏதேனும் ஒன்றிற்கு அனுப்பக் கோருகிறோம்.

**G. குஞ்சிதபாதம், FCA.,** G. நடேசன் & கோ. டபீர் மேலத்தெரு, கும்பகோணம்–612 001
போன்: 0435 2420047

**G. கண்ணன்,** D/127-A, ராஜமன்னார் சாலை, கே.கே.நகர், சென்னை –78. போன்: 044-24836495

**V.L. நாராயண சாஸ்திரிகள்,** 25/1 சுப்பாரெட்டித் தெரு, எஸ்.என்.ஆர். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், மேற்கு மாம்பலம், சென்னை - 600 033. போன்: 044-24897125

**R. வைத்தியநாதன்,** மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, பிளாட் நெ. 4, கதவு எண் 12, 29வது தெரு, தில்லை கங்கா நகர், நங்கநல்லூர், சென்னை - 600 061. போன்: 044 - 22333361

# மஞ்சு அறியாது

மனசெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்துக் கிடந்தது, 'வயித்தெரிச்சல்' வனராசுவுக்கு. மஞ்சு விரட்டுக் காளையாய் நெஞ்சுக்குள் திமிறும் பேரானந்தம். சாபம் மெய்ப்பட்டு, வாகையே சூடியது போல உற்சாகம். எதிரி அகாலமாய் மரணமானதில் குதூகலக் கூத்தாடல். நடந்த கொடூரம் இதயத்தை உலுக்குவதற்குப் பதிலாக, கடுந்தவம் வென்றது போலான ஆர்ப்பரிப்பு. பக்கத்துக் கிராமமான வாழையாத்திப் பட்டியிலுள்ள, தனது பள்ளி ஆசிரியரைச் சந்தித்துவிட்டு வருவதாகச் சொல்லிச் சென்றிருந்த எட்டாம் வகுப்புப் படிக்கிற மகன் சங்கரனை ஆவலுடன் எதிர்பார்த்தபடி கட்டிலில் உட்கார்ந்திருந்த அவனுக்கு, இரவு பத்து மணிக்கு மேலாகியும் கூட உறக்கம் பிடிக்கவில்லை.

'எலேய் சங்கரா... ஒனக்கு விஷயந் தெரியுமா... அந்தச் செவனாண்டிப் பய கெணத்து ரூம்ல மோட்டார் வயரக் கழட்டி கிட்டிருக்கையில கரண்ட் 'ஷாக்'கடிச்சு செத்துப் போய்ட்டானாம். என் வயித்தெரிச்சலு அவன ஒழிச்சுக் கட்டிருச்சுப் பாத்தியா...' என்று அவன் வந்ததும் சொல்வதற்கு காத்திருந்தார்.

வனராசு நினைத்த ஒன்று எப்போதாவது நடந்து விட்டதென்றால், இரவெல்லாம் உறக்கம் கூடப் பிடிக்காது, நடைதான். 'வயிறெரிய வுட்ட சாபம் வீணாப்போவல பாத்தியா... அந்தாளு எவ்ளோ பெரிய்ய இக்கட்டுல சிக்கி தெறாட்ல திரியுறான்' என்று சங்கரனிடம் சொல்லுவான்.

'ச்... சிய்..ய்! ஒங்கூட இதே, ரோதனையாப் போச்சுப்பா. ஒனக்கு வேற சொலியே கெடையாதுப்பா', என்றபடி அவனது புலம்பலைக் கேட்க ஒவ்வாமல் தனது காதுகளை கைகளால் பொத்திக் கொள்வான் சங்கரன். சில சமயம் அங்கலாய்ப்பின் உச்சத்தில். 'கடவுளு எல்லாருக்கும் நல்லது செய்யிறதுக்குத்தான் இருக்காரு. ஒஞ் சொல்லக் கேட்டு ஊர்க்காரங்க பொழப்ப நாசம் பண்றதுக்கா, ஆகாசத்துல - அம்புட்டு ஓசறத்துல ஒக்காந்துருக்காரு?' என எதிர் கேள்வியுடன் நக்கலடிப்பான்.

வனராசுவுக்கு, 'சுள்'ளென்றிருக்கும். மனசுக்குள் முள் தைக்கும். உதட்டு வார்த்தைகள் செவிட்டில் அறைந்தது போல உலுக்கல். இன்னும் முளை விட்டிருக்காத, விளையும் பயிரின் அலட்சியக் கேள்வியால் உயிர்க் குலையே அறுந்து விடுவது போல மன உபத்ரவம். 'அடி, ஓம் மூஞ்சில... காவாலிப் பயலே. என்னையே இண்டல் பண்றியா?' என்று கையை ஓங்கிக் கொண்டு அவனை அடிக்கிற தோரணையில் ஓடுவான்.

அவனை ஊருக்குள் பெரும்பாலானோர், 'வயித் தெரிச்சல் வனராசு' என்ற அடைமொழியுடன்தான் மறைமுகமாகக் குறிப்பிடுவார்கள். ஏதேனும் நல்ல காரியங்களுக்கு இவன் போனால், 'ஒன் வயித்தெரிச்சல் திருவாயத் தொறந்து ஏதுஞ் சொல்லிறாதப்பா. ஏங்குடும்பம் வெளங்கணும்' என்று அர்த்தபுஷ்டியுடன் புன்னகைத்து எச்சரிப்பார்கள்.

சங்கரனும், இன்று மின்சார 'ஷாக்'



அடித்து இறந்து போயிருந்த சிவனாண்டியின்மகன் அழகேசனும், ஒரே வகுப்பில் படிக்கிறார்கள். இரண்டு வருடங்களுக்கு முன்பு வரையில் வனராகவுக்கும் - சிவனாண்டிக்கும் கண்மாய்த் தண்ணீர் பாய்ச்சுகிற விஷயமாக விரோதம் வராமலிருந்த வரையில், உடன் பிறந்தவர்கள் போல பின்னிப் பிணைந்து கிடந்தார்கள். பக்கத்துத் தோட்டத்துக்காரர்கள் என்பதைத் தவிர, வேறெந்த உறவு முறையுமில்லாவிட்டாலும், சிநேக நெருக்கத்தின் காரணமாக, சங்கரன் சிவனாண்டியை 'அப்பா' என்று அழைத்தான். பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்கு வந்ததும், 'யம்மாவ்... நா அழகேசன் வீட்டுக்குப் போயி அவன் கூடச் சேந்து பாடம் படிக்கப் போறேன்.' என்று அவசரமாகக் கூறிவிட்டு, அதே கதியில் ஓடுகிறவன், அவனுடன் பாடம் படித்தும், ஏதேனும் விளையாடி விட்டு இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் வீட்டுக்கு வருவான். சில சமயம் அவர்களது வீட்டிலேயே படுத்துத் தூங்கி விட்டு, காலையில் வருவதுமுண்டு.

அழகேசனும் அப்படித்தான். இவர்களது வீட்டில் வந்து படிப்பதும், சாப்பிட்டுத் தூங்குவதும், பின் விடிந்தபின் எழுந்து போவதுமாயிருப்பான். கடந்த வருடம், "நீ படிச்சுக்கிழிச்சது போதும். பேசாமெ ஏங்கூட தோட்டத்துக்கு வா. வெவசாயத்தைக் கத்துக்க. என்னால ரொம்ப அலைய முடியல. எனக்கு ஒத்தாசையா இருடா சங்கரா." என்று கூறி அவனது படிப்பை நிறுத்த வனராக முயற்சிக்க, சிவனாண்டிதான் "சங்கரா. நீ படிப்ப நிறுத்திறாத. ஒன்ன ஏம் புள்ள கணக்கா நெனச்சு, ஒனக்கு வேண்டிய நோட்டுப் புஸ்தங்கள நா வாங்கித்

அல்லிநகரம் தாமோதரன்

தர்றேன். நீ தொடர்ந்து படி.. ஒங்கப்பன் பேச்சக் கேட்டு படிப்பவுட்றாத." என்று உரிமைப் புகைச்சலுடன் கூறினான்.

இதைக் கேள்விப்பட்ட வனராகவுக்கு, ஆவேசங்கூடியது. பொட்டிலடித்தாற் போலிருந்ததால் சட்டெனச் சிவந்தன கண்கள். "என்னாது.. அவங்காகல புஸ்தகம் வாங்கித் தந்து, ஏம்புள்ள படிக்கிறதா? அவங்காசு பணம், ஏங்கெண்டங்காலு தூசுக்குச் சமம்." என்றவன். அப்போது முதல் சங்கரனை அவனது வீட்டுக்குப் போகக் கூட அனுமதித்ததில்லை. பள்ளியிலோ, வெளியில் எங்கேனும் பார்க்கும்போதோ, அழகேசனுடன் பேசிக் கொள்வதுடன் சரி. சிவனாண்டியுடனும் அதே போல்தான்.

இருவருக்குமிடையில் இவ்வளவு தூரம் இடைவெளி உண்டாவதற்கு, கண்மாய்த் தண்ணீரே முக்கியக் காரணமாயிருந்தது. மழையின்றி வறண்டு கிடந்த கண்மாய்த் தண்ணீரை முறை வைத்துப் பாய்ச்சுவதில் ஏற்பட்ட சிறுசிறு முரண்பாடுகள், விசுவரூபமெடுத்து, நாளடைவில் வாக்குவாதம், கைகலப்பாய் முற்றி, தீராப் பகையாளிகளாய் ஆகிப் போயிருந்தனர்.

வனராகு, ஊர்ப் பெரியோர்கள், தனக்கு அறிமுகமானோர், சிவனாண்டியின் உறவுக்காரர்கள் என எல்லோரிடமும், "என்னைச் சங்கடப் படுத்துற அந்தச் சண்டாள செவனாண்டிக்கு நல்ல சாவே கெடையாது. வங்கொலையாத்தேஞ் சாகப் போறான். ஏ வயித்தெரிச்சல் அவனச் சும்மா வுடாது." என்று கூறித் திரிந்த படியிருந்தான். "ஏய்... சொடலமாடா, ஏ வாக்குப் பலிச்சா ஒங் கோயிலுக்கு வந்து, ஏம் புள்ளக்கி மொட்டை போட்றேன்" என்றும் வேண்டிக் கொண்டிருந்தான்.

"ஏன் இன்னும் வரலை. 'ஒரு வேளை டவுன் பஸ் லேட்டாயிருச்சோ என்னமோ' என்று யூகித்துக் கொண்டவனுக்கு, உறக்கம் வருவது போலிருக்க, விளக்கை அணைத்து விட்டுப் படுப்பதற்காக கட்டிலை விட்டு எழுவதற்கு முற்பட்டபோது -

"டக்... டக்... டக்..." யாரோ வாசல் கதவைத் தட்டுகிற ஓசை.

சட்டென சலிப்பு மாறி, வனராகவின் முகத்தில் ஜொலிப்பு. "என்னடா சங்கரா இவ்ளோ லேட்டு?" என்றவாறு வேகமாய்ப் போய் வாசல் கதவைத் திறந்தான்.

மறுகணம் மயக்கமே வந்துவிடுவது போலத் தலை சுற்றியது அவனுக்கு. 'இது நிசந்தானா?' என்பது போல பகீரிடல்.

மொட்டை போடப்பட்ட தலையுடன், முகம் கவிழ்ந்தபடி வாசலில் நின்றிருந்தான் சங்கரன். அழுது அழுது உப்பிப் போயிருந்தது, முகம். கண்களில் தாரை தாரையாய்க் கண்ணீர் வழிந்தபடியிருந்தது.

"என்னடா சங்கரா, மொட்ட போட்ருக்க?"

"வாழையாத்துப்பட்டிக்குப் போயி, எங்க வாத்தியாரப் பாத்துட்டு சாயங்காலம் ஊருக்கு வந்து பஸ் ஸ்டாண்டுல எறங்கினப்போ, அழகேசனோட அப்பா இறந்து போயிட்டதா தகவல் கெடைச்சு, அப்படியே அலறித் துடிச்சு, நேரா அவுங்க வீட்டுக்குப் போய்ட்டேன். அவரு செத்துப் போனதத் தாங்க முடியல. அழகேசனும் நானும் கதறி அழுதிட்டே இருந்தோம். அப்பா செத்துப் போனா, மகன் மொட்டை போடணுமாம். நானும் அவர அப்பான்னுதான் கூப்டுவேன். அவரும் என்னைச் சொந்தப் பிள்ளை கணக்காதான் நடத்தினாரு. அதான் துக்கம் தாங்காம, அழகேசனோடச் சேர்ந்து நானும் மயானக் கரையில மொட்டை போட்டுக்கிட்டேன்." நாத் தழுதழுக்கக்கூறிக்கொண்டே அவன் கேவிக் கேவி அழத் துவங்க, வெலவெலத்து நின்றான், வனராகு. ●

"ராத்திரி பத்தரை மணிக்குமேல வீட்டுக்குப் போனால் பத்ரகாளியாயிடுவாள் என் மனைவி"

"அப்பொ அவங்களை 'பத்தரை காளி'ன்னு சொல்லு."

- விஷ்ணுகுமார்



# மருத்துவமனையில் தங்கி பணியாற்ற குடும்ப பாரமற்ற மகளிர் தேவை

எங்கள் இயற்கை மருத்துவமனையில் இருக்கும் வயதான நோயாளிகளை பொறுப்புடனும், பரிவுடனும், சேவை மனப்பான்மையுடனும், பராமரிக்க மருத்துவமனை யிலேயே தங்கி பணியாற்ற, குடும்ப பாரமற்ற மகளிர், 3 பேர் தேவை. பயிற்சி அளிக்கப்படும். அவர்களின் தகுதிக்கேற்ப ஊதியம், தங்குமிடம், சைவ உணவு, மருத்துவ சிகிச்சை மற்றும் இதர வசதிகள் இலவசமாக அளிக்கப்படும். ஒரு வருடத்திற்கு ஒரு முறை சொந்த ஊருக்கு சென்று வர உண்டாகும் செலவு கொடுக்கப்படும். உத்தேசமாக 15 வருடங்களாவது பணியாற்றக் கூடிய, நல்ல உடல் ஆரோக்கியமுள்ளவர்கள் தேவை. அவர்களின் மீதி உள்ள காலங்களுக்கு சென்னை / கொடைக்கானலில் தங்க மருத்துவமனை பொறுப்பேற்றுக் கொள்ளும். சம்பளத்தை தவிர ஒவ்வொரு வருட முடிவிலும் அவர்களின் பெயரில் சேமிப்பு நிதியில் ரூபாய் 5000, பாங்கில் டெபாசிட் செய்யப்படும். இந்த தொகை அவர்களின் தகுதிக்குகேற்ப 3 வருடத்திற்கு ஒரு முறை உயர்த்தப்படும். இதர விவரங்களை நேரில் வரும் போது தெரிந்து கொள்ளலாம். நேரில் வருவதற்கு பண வசதி இல்லாதவர்கள், தங்களைப் பற்றிய முழு விவரங்களை எங்களுக்கு தெரியப்படுத்தினால், தகுதியின் அடிப்படையில் அவர்களுக்கு இங்கு வருவதற்கு உண்டான போக்குவரத்து செலவும், மிக அவசியம் தேவைப்பட்டால் அவர்களுடன் துணைக்கு வந்து செல்ல ஒரு நபருக்கும் முன்னதாகவே பணம் M.O. செய்யப்படும். இதை நிர்வாகம் மட்டும் தான் முடிவு செய்யும். மற்றபடி வருபவர்கள் தங்கள் செலவில் தான் வரவேண்டும். கீழ்கண்ட முகவரிக்கு முதலில் விண்ணப்பிக்கச் செய்யுங்கள்.

# நீங்கள் புத்திசாலியா / திறமைசாலியா

இந்த மருத்துவமனை நிர்வாகத்தின் வளர்ச்சிக்கு சாமர்த்தியமான, சுறுசுறுப்பான புத்திசாலித்தனமான, தமிழிலும் ஆங்கிலத்திலும் பேச்சுத்திறமை வாய்ந்த இரு மகளிர் தேவை.

நாங்கள் எதிர்பார்க்கும் சரியான நபராக நீங்கள் இருக்கும் பட்சத்தில், உங்கள் எதிர்காலம் வளமுடனும், மகிழ்ச்சியுடனும் இருக்கும். (அடிக்கடி வேலை மாற்ற நினைப்புள்ளவர்கள் தயவு செய்து விண்ணப்பிக்க வேண்டாம்). அவர்களின் தகுதிக்கு ஏற்ப சம்பளத்துடன் அவர்களுக்கு தேவையான உணவு மற்றும் இதர வசதிகள் செய்து தரப்படும்.

## அத்துடன் கீழ்க்கண்ட வேலைகளுக்கும் நபர்கள் தேவை

1. சைவ சமையலும் நாங்கள் சொல்லும் வகையில் இயற்கை மூலிகை மற்றும் பழச்சாறுகளை நேரத்திற்கு நோயாளிகளுக்கு கொடுக்க, புத்திசாலித்தனமான, சளைக்காமல் வேலை செய்யக் கூடிய சமையல்கார அம்மாள் தேவை. தகுந்த சம்பளமும் மேற்கூறிய வசதிகளும் உண்டு.
2. கார் / வேன் டிரைவர் - 50 வயதிற்குள்
3. வாட்டசாட்டமான, பொறுப்புள்ள வாட்ச்மேன் 50 வயதிற்குள் தேவை.

முழு விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

டைரக்டர்

**அடையார் இயற்கை வைத்திய மையம்**

**ADYAR NATURE CURE CENTER** (TM)

Regd. Hospital

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 20.
(Opp. Gandhi Nagar Bus Terminus) Phone:2441 3399, 2440 2470. Tele Fax: 044-2491 6650
www.adyarnaturecure.com e-mail: adyarnaturecure@yahoo.com,

எங்கள் மருத்துவமனையில் ஆர்த்ரிட்டீஸ், பார்க்கின்சன்ஸ், கேன்சர், ஆஸ்துமா, டயாபடீஸ், உடல் பருமன் குறைதல், வயிற்று உப்புசம், கண்களில் நீர் வராமை - சிறந்த இயற்கை முறை சிகிச்சை வழங்கப்படும். மற்றும் எங்களிடம் நாள்பட்ட இதர நோய்களுக்கும் ஆலோசனை கேட்கலாம்.

குறிப்பு: A/c, Delux A/c சாதா, தங்கும் அறைகள் மற்றும் ஜெனரல் வார்டு, கலர் டீ.வி., போன் வசதியுடன் கிடைக்கும். சைவ உணவு வசதி மட்டும் உண்டு. முன்பதிவு அவசியம்.

# அடங்காப் பிடாரி

பால் பெய்யும்
அடங்காப் பிடாரிக்கு
ரம்பத்தில் வயிறு

முன்னும் பின்னும்
அவள்
வயிற்றைத் தேய்த்ததில்
பேய் கொண்டாடும்
பனை

வேர்கள் உயிர்க் கூச்செறிய
பசுஞ்செடிகளின்
தலை முழுங்கி
ஊருணியில்
முங்குவாள்
கொம்புகள் வெளித்தெரிய

வால் மயிரே
சடையானதில்
சிக்கிய சாணக் கறை
அலச
கடலும் பத்தாது


பால் பண்ணையில்
சிறு கலவரத்தை நிறுவி
பால் கேனை
உருட்டித் தள்ளியதை
முட்டைக்கண்
பார்த்தவர்களால்
நம்பவும் ஏலாது

ஒரே உந்தலில்
வைக்கோல் போர்
சாய்த்த திமிர்
ஊணிக் கம்புட்டு
வெளுத்தாலும் அடங்காது

கருங்கல்லோ
கரிய தார்ச்சாலையையோ
தோலாகப் பெற்றாளென்று
மலைத்துப் போனால்

கழுத்துப் புண்ணில்
காகம் கொத்தி
அலறுவாள்
அம்மாவென.

**வே.ராமசாமி**







• மார்க்



# குறைந்தபட்சக் கோடுகள்

சென்னை வின்யாசா ஓவியக் கூடத்தில் மார்க் எனும் எஸ்.மார்க் ரத்னராஜ் தமது கோட்டோவியங்களை சமீபத்தில் காட்சிக்கு வைத்திருந்தார். ஆதிக்குகை ஓவியங்கள் முதல், ஓவியங்களின் அடிப்படையே கோடுதான். கோடுகளின் மூலமே புரிதல் தொடங்குகிறது. பிறகே வண்ணம்.

மார்க் கையாளும் கோடுகளில் ஓர் ஆளுமையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்த ஆளுமை கடுமையான பயிற்சியின் மூலமே கைவரக் கூடியது. அவர் ஓர் ஓவியக் கல்லூரி மாணவராக கோடுகளின் அடிப்படைகளை கற்றுக் கொண்டிருப்பதாலும், இது சாத்தியமாகி இருக்கலாம். அவரது லாகவம் நிறைந்த கோடுகளில், உருவங்களின் உடற்கூறு அளவுகள் கச்சிதமாக கைவரப் பெற்றிருக்கின்றன. குறைந்த பட்சக் கோடுகள் மூலம், சஜஸ்டிவ் கோட்டோவியங்களாகப் படைத்திருக்கும் மார்க், தமது ஓவியங்களில் ஒற்றை வண்ணமாக பழுப்பு நிறத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். கோடுகளுக்கான முக்கியத்துவத்தைத் தரவே பழுப்பு வண்ணத்தை, ஓவியத்தின் வெளி எல்லையில், மனம் அனுமதித்த நிழல்களோடு தோய்த்திருக்கிறார்.

மார்க் முன்னிறுத்தும் ஓவியக் கருப்பொருட்கள், உருவங்கள் யாவும், இந்த மண்ணையும், மண்ணின் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்பதாலோ என்னவோ, இதைப் பிரதிபலிக்கும் விதமாக மண்ணின் வண்ணமான பழுப்பினை மட்டும் அவர் பயன்படுத்தியிருக்கிறார் என்றும் கருத இடமிருக்கிறது. எப்படியிருப்பினும் தொடக்கத்திலேயே தெளிவான நிலையில், தமக்கான கோடுகளை அடையாளம் காணும் முதல் படியைத் தொட்டிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். இவரது ஓவியங்களில் இல்லஸ்ட்ரேஷன் தன்மை இருப்பதாக யாரேனும் விமர்சித்தால், அதைப் புறக்கணிக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு நல்ல கலைஞன் எப்போது வேண்டுமானாலும் மாறக் கூடியவன்.

மார்க், உருவங்களையும் கோடுகளையும் கொண்டே சாதிக்க முடியும். அதற்கான எல்லையற்ற சாத்தியக் கூறுகளை நோக்கிய பயணத்திற்கு தகுதியான இளம் படைப்பாளியாகவே தென்படுகிறார் மார்க்.

• ஆதிமூலம்



ஆதிமூலம்

# தேசிய

பாரத நாடு பழம்பெரும் நாடு. இந்தப் பரந்த உலகத்தில் முதன் முதலில் மனித குலத்தின் நாகரிகம் பிறந்தது இந்த நாட்டிலேதான்.

மற்ற நாடுகளில் மக்கள் வனவிலங்குகளைப் போல் வசித்து வந்த காலத்தில், இந்நாட்டில் மக்கள் அறிவிலும் கலை ஞானத்திலும் கடவுள் ஞானத்திலும் சிறந்து விளங்கினார்கள்.

ஐயாயிரம் வருஷத்துக்கு மேலாக, ஒரு சாதி, ஒரு இனம், ஒரு நாகரிகம் என்பது வாழையடி வாழையாகவும் இடையில் அறுபட்டோ அறுந்தோ போகாமலும் தொடர்ந்து வளர்ந்து வந்திருப்பது இந்த ஒரு தேசத்திலேதான்.

பதினாயிரம் வருஷங்களுக்கு முந்தி வேத முனிவர்கள் பாடிய வேத மந்திரங்களை இன்றும் இந்நாட்டில் அதே ஸ்வரத்தில், அதே ஸ்தாயியில், அதே உச்சரிப்புடன் ஓதி வருகிறார்கள்.

ஐயாயிரம் வருஷத்துக்கு முன்னால் ஜனங்களின் நாவில் நடமாடிய பாஷையை - சொற்களை - சொற்றொடர்களை இன்றளவும் அதே மாதிரி பேசும் ஜனங்கள் இந்நாட்டில் இருக்கிறார்கள்.

நாற்பது கோடி மக்கள் - பாரதத் தாயின் புதல்வர் - புதல்விகள் - இந்நாட்டில் வாழ்கிறோம்.

இவ்வளவு ஜனத்தொகை கொண்ட தேசம் - ஒரு வேளை சீன நாட்டைத் தவிர - இவ்வுலகில் வேறெதுவும் கிடையாது.

இத்தகைய பழம்பெரும் நாடு, புராதன நாகரிகத்தில் சிறந்த நாடு, அறிவாளிகளையும் ஞானிகளையும் தர்மாத்மாக்களையும் வீராதி வீரர்களையும் தோற்றுவித்த நாடு, இன்றைய தினம் அன்னிய ஆட்சியின்கீழ் அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

நாலரைக் கோடி ஜனத்தொகையே கொண்ட, சின்னஞ் சிறு தீவில் தோன்றி உலகத்தையெல்லாம் கட்டி ஆளுகிற ஆங்கிலோ-ஸாக்ஸன் ஜாதியார் இந்தியாவில் நூற்றறுபது வருஷமாக ஆதிக்கம் செலுத்தி ஆட்சி புரிகிறார்கள்.

இந்த அவமானத்தை உள்ளபடி நினைத்துப் பார்த்தால், உணர்ச்சியுள்ள இந்தியன் எவனும் "நெஞ்சு பொறுக்குதில்லையே!" என்று கதறாமல் இருக்க முடியாது. கோபத்தினால் கொதிக்காமல் இருக்க முடியாது. ஆத்திரத்தினால் அலறாமல் இருக்க முடியாது.

அறுபது வருஷத்துக்கு முன்னாலேயே இந்நாட்டில் வாழ்ந்த பெரியோர்கள் சிலர், மேற்படி அவமானத்தை உணர்ந்தார்கள். உணர்ந்து அதைத் துடைப்பதற்கு வழி என்ன என்று



தேடினார்கள். வருங்காலத்தில் இந்தியா சுதந்திரம் அடையப்போகும் திருநாளைக் குறித்துக் கனவு கண்டார்கள். அந்தக் கனவை உண்மையாக்கும் முயற்சியில் ஈடுபட்டு அதற்காக எத்தனையோ தியாகங்களைச் செய்தார்கள். எத்தனையோ கஷ்டங்களை அனுபவித்தார்கள்.

தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி, கோபால கிருஷ்ண கோகலே, லாலா லஜபதிராய், பால கங்காதர திலகர், ஜி. சுப்பிரமணிய அய்யர் முதலான அந்த மகா புருஷர்களை நாம் என்றென்றைக்கும் மறக்க முடியாது. மறக்கக் கூடாது.

பிறகு, இன்றைக்கு இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால், தேச சுதந்திரப் போராட்டத்தில் ஒரு புதிய அத்தியாயம்

# வாரம்

**அமரர் கல்கி**

ஆரம்பமாயிற்று. அஹிம்சை, சத்தியம் என்னும் இரு பெரும் ஆயுதங்களுடனே மகாத்மா காந்தி தேச சுதந்திரப் போராட்டத்துக்குத் தலைமை வகிக்க முன் வந்தார்.

மகாத்மாவின் வரவினால் தேசத்தில் ஒரு பெரிய ஜீவசக்தி தோன்றியது. நாட்டு மக்கள் லட்சக் கணக்கிலும் கோடிக்கணக்கிலும் சுதந்திரப் போரில் ஈடுபடுவதென்று ஏற்பட்டது. சுதந்திரத்துக்காகப் பொதுஜன இயக்கமென்பது அப்போதுதான் முதன் முதலில் ஆரம்பமாயிற்று.

தேச மக்களின் சுதந்திர தாக உணர்ச்சியை, அடக்கி ஒடுக்குவதற்காக அதிகார வர்க்கத்தார் ரௌலட் சட்டம் என்று பெயர் பெற்ற அடக்கு முறைச் சட்டத்தை ஏற்படுத்தினார்கள். அந்தச் சட்டத்தை எதிர்க்கும் முறையில் பொதுஜன சுதந்திர இயக்கத்துக்கு மகாத்மா அங்குரார்ப்பணம் செய்தார்.

1919ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6ம் தேதியன்றுதான் முதன்முதலாக இந்திய சுதந்திர இயக்கம் தேசியப் பொது ஜன இயக்கமாகப் பரிணமித்தது.

அன்றைய தினம் இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையில் நாடு நகரங்களிலெல்லாம் ஹர்த்தால் நடைபெற்றது. வியாபாரிகள் கடைகளை மூடினார்கள். தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்தார்கள். தேசத்தில் சகல ஜனங்களும் அவரவர்களுடைய வேலையை நிறுத்தினார்கள். லட்சக்கணக்கானவர்கள் உபவாசம் இருந்தார்கள். அன்று மாலை தேசமெங்கும் கணக்கற்ற பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன.

இவ்விதம் நாட்டில் முதன் முதலில் புதிதாக எழுந்த ஜனசக்தியானது, தேசமெங்கும் ஒரே கிளர்ச்சியையும் கோலாகலத்தையும் உண்டாக்கியது. அடுத்த ஏழு தினங்கள் தேசமே அல்லோலகல்லோலப் பட்டது.

ஏப்ரல் - 13ம் தேதியன்று இந்தியா தேசம் என்றும் மறக்க முடியாத சம்பவம், வடக்கே அமிர்தசரஸ் நகரில் ஜாலியன் வாலாபாக் தோட்டத்தில் நடந்தது. அங்கே பதினாயிரக் கணக்காக ஜனங்கள் கூடியிருந்த பொதுக் கூட்டத்தைத் தளபதி டயர் என்னும் மனித உருக்கொண்ட அரக்கன் படையுடன் வந்து வளைத்துக் கொண்டு, ஜனங்கள் தப்பவும் வழியில்லாதபடி துப்பாக்கிப் பிரயோகம் செய்தான் (பின்னால் நடந்த விசாரணையில் அந்தப் பாதகன் "சுட்டேன்! சுட்டேன்! துப்பாக்கியில் தோட்டா தீரும் வரையில் சுட்டேன்" என்று மார்தட்டிக் கொண்டு கூறினான்.)



அன்று அந்தப் புனித ஸ்தலத்தில் இந்தியத் தாயின் புதல்வர்கள் அறுநூறு பேர் இந்தியாவின் சுதந்திரத்துக்காகத் தங்கள் உயிரைப் பலி கொடுத்தார்கள்.

தேசத்தில் நவசக்தி உதயமான அந்த 1919-ம் ஆண்டிலிருந்து பிரதி வருஷம் ஏப்ரல் 6-ம் தேதியிலிருந்து 13-ம் தேதி வரை தேசிய வாரம் என்று கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த வருஷமும் கொண்டாடப் படுகிறது.

சென்ற இருபத்தைந்து ஆண்டு காலத்தில் தேசத்தில் எத்தனையோ காரியங்கள் நடந்துவிட்டன. சுதந்திரப் போராட்டத்தில் சில சமயம் வெற்றிச் சிகரத்துக்கு மிகவும் அருகாமையில் தேசம் வந்ததுண்டு. வேறு சில சமயம் தோல்வியின் அதல பாதாளத்துக்குப் போனதும் உண்டு. ஜனங்கள் அபரிமிதமான குதூகலத்துடன் இருந்த நாட்களையும் கண்டிருக்கிறோம். அடியோடு உற்சாகம் இழந்து சோர்விலே மூழ்கியிருந்த தினங்களையும் பார்த்திருக்கிறோம். நமது தேசத் தலைவர்கள் கிட்டத்தட்டப் பூரண அதிகாரத்துடன் ஆட்சி நடத்திய காலத்தையும் பார்த்திருக்கிறோம். கலப்பற்ற அதிகார வர்க்கத்தின் ஆட்சி எதேச்சையாய்த் தாண்டவமாடும் காலத்தையும் கண்டு வருகிறோம்.

*- கல்கி கட்டுரைகள் - 2 தொகுப்பிலிருந்து*

ஹலோ இறைவா

# பத்து நிமிடப் புரட்சி!

எல்லோரும் ஹோம் ஒர்க் பண்ண ரெடியாகிட்டீங்களா? ஜஸ்ட் பத்து நிமிட வேலைதான்!

ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் இரண்டு பக்கங்களைப் பிரித்து, ஒரு பக்கத்தில் 'எனது பலவீனங்கள்' என்று எழுதி அடிக்கோடிடுங்கள். நோட்டுப் புத்தகத்தை அப்படியே வைத்துவிட்டு, ஒரு சுய பரிசோதனை செய்து கொள்ளுங்கள். 'எதெதில் நாம் அடிக்கடி தவறிழைக்கிறோம் அல்லது கோட்டை விடுகிறோம்..' - யோசிக்கலாம். காலையில் எழுந்திருக்க லேட்டாகிறதா? அதை முதலாவது பலவீனமாய் எழுதுங்கள்.

கண்விழித்ததும் பத்து நிமிடம் போல படுக்கையிலேயே விழித்துக் கொண்டு நேரத்தை வீணாக்குகிறீர்களா? அதை இரண்டாவது பலவீனமாய் எழுதிக் கொள்ளுங்கள்.

ஒரு நிமிஷம்! இந்த பலவீனங்களைப் பட்டியலிடும் முன், "இதெல்லாம் பெரிய விஷயமா? இதைப் போய் பலவீனம் என்று எழுதப் போகிறாயாக்கும்!'என்று உங்களுக்குள்ளிருந்தே எதிர்ப்புக்குரல் வரும்.

நீங்களும், 'அதுவும் சரிதானே! இதெல்லாம் பலவீனமா? எழுத வேண்டிய அவசியமில்லை' என்று நினைக்கலாம். அது தான் இல்லை! அவ்வாறு ஒதுக்குவதே ஒரு பலவீனம் என்பதால், அதையே இரண்டாவது பலவீனமாய் எழுதி வைக்க வேண்டி வரும்!

அடுத்து, மூணு... நாலு... அஞ்சு என்று பட்டியல் நீண்டு கொண்டே போகட்டும். அது சின்ன விஷயமோ, பெரிய விஷயமோ, பலவீனம் என்று நீங்கள் நினைத்தால், தயக்கமின்றி எழுதி விடுங்கள்.

இப்படிப்பட்டியல் போடுகிறபோது, உங்களுக்கு ஒரு விதமான தயக்கம் வரக்கூடும். "என்னடா, நம்முடைய பர்சனலான இந்த விஷயங்கள் எல்லாம் வீட்டில் இருக்கிற மற்றவர்களுக்கோ, ஸ்கூலில் உள்ள சக நண்பர்களுக்கோ, இல்லை, வேறு யாருக்குமோ தெரிந்து விட்டால்...?_ இலேசான பயம் கூட வரும்.

தயக்கம், பயம் எல்லாவற்றையும் தள்ளி வையுங்கள். யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள். இன்னொரு விஷயம். இந்த நோட்டுப் புத்தகத்தை நீங்கள் யாரிடமும் காட்ட வேண்டிய தேவையில்லை!






பத்து... பன்னிரண்டு... இருபது வரை கூட பலவீனங்களின் பட்டியல் போகட்டும். கவலையில்லை.


நோட்டுப் புத்தகத்தின் அடுத்த பக்கத்தைப் பிரியுங்கள் "பலம்" என்று எழுதி, அடிக்கோடிட்டு, பிளஸ் பாயிண்ட்கள் என்னென்ன உண்டோ, எல்லாவற்றையும் வரிசையாக எழுதுங்கள். பலவீனங்களை எழுதியபோது உங்கள் மனத்தில் ஏற்பட்டது போல, தயக்கமோ, பயமோ இப்போது ஏற்படவில்லை அல்லவா! இன்னும் சொல்லப் போனால், உங்களிடம் இருக்கிற சின்னஞ் சிறு நல்ல விஷயம் கூட, பெரிய பண்பாகத் தெரியக் கூடும். எது எப்படியானாலும், சிறியதோ, பெரியதோ, எல்லா பிளஸ் பாயிண்ட்களையும் பட்டியல் போட்டு முடியுங்கள்.

என்ன, உங்களுடைய பிளஸ், மைனஸ் பாயிண்ட்களை பட்டியல் போடுவதற்கு உங்களுக்குப் பத்து நிமிஷம் ஆகியிருக்குமா? ஒரு நாளில் - இருபத்து நான்கு மணி நேரத்தில், ஆயிரத்து நானூற்று நாற்பது நிமிடங்களில், பத்தே பத்து நிமிடம் உங்கள் நலனுக்காக செலவழிக்க மாட்டீர்களா என்ன?

**ம**றுநாளும், நோட்டுப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். ஒரு பக்கம் பலவீனம், இன்னொரு பக்கத்தில் பலம் என்று எழுதி, அடிக்கோடு போட்டுக் கொள்ளுங்கள். முதல் நாள் எழுதிய பட்டியலின் காப்பியாகவே அது இருக்கலாம். இல்லையெனில், ஒன்றிரண்டு ஐட்டங்கள் விடுபட்டுப் போகலாம்; இல்லை புதிதாகச் சேரலாம்.

சுவாமி போதமயானந்தா

# மறக்க முடியுமா?



❖ பல பரிமாணங்களில் நடிப்புக் கடலின் ஆழத்தை அளந்து காட்டிய நகைச்சுவை நடிகர் நாகேஷின் தொடர் சூப்பர். ஜெட் வேகத்தில் சென்ற தொடரை திடீரென முடித்து ஏமாத்திப்புட்டீங்களேய்யா!

திருச்சி-17, ஜே.எஸ். பொய்யாமொழி

❖ ஐம்பத்தொரு வாரங்கள். ஒரு திரைப்பட வெற்றிபோல ஓடியது, 'சிரித்து வாழ வேண்டும்' தொடர். காமெடி என்ற பெயரில் இப்போது அடிக்கும் லூட்டியைப் பார்த்தால்... நாகேஷின் தனித் திறமை புரியும்!

வியாசர் நகர், சுகந்திநாராயண்

❖ 'சிரிப்பு நிறைகிறது' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். 'திருவிளையாடல்' - தருமி, 'தில்லானா மோகனாம்பாள்' - வைத்தி, சர்வர் சுந்தரம், 'எதிர் நீச்சல்' - மாது போன்ற சாகாவரம் பெற்ற கேரக்டர்கள், நமது நெஞ்சங்களில் மறையாது நிலை பெற்று இருக்கும்வரை நாகேஷின் நகைச்சுவை நிறையாது, நீடித்து நிற்கும்!

வேலூர்-6, வே.ந.கதிர்வேல்

❖ தம் வாழ்க்கையில் சூறாவளியாய் துன்பங்கள் வந்து தாக்கிய போதும், நிலைகுலைந்து விடாமல் ரசிகர்களுக்கு நகைச்சுவை விருந்து படைத்திருக்கிறார் நாகேஷ் என்பதை உணர்ந்ததும் சிலிர்த்தேன்.

மேலகிருஷ்ணன்புதூர், ஆர்.கே.லிங்கேசன்

இந்த மாதிரி ஹோம் ஒர்க்கை மூன்று வார காலத்துக்குத் தினமும், விடாமல் செய்ய வேண்டும். அதாவது, இந்த மூன்று வார காலத்தில், சாப்பிடுவது, டீ.வி. பார்ப்பது, நண்பர்களுடன் ஜாலியாய் பேசுவது போல, பட்டியலிடும் ஹோம் ஒர்க்கை தினசரி வேலையாக்கிக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது வாரக் கடைசியில் பார்த்தால், முதல் நாள் பட்டியலில் இடம் பெற்றிருந்த பலவீனங்களில் ஒரு சில, உங்களுக்கு குட் பை சொல்லிவிட்டுப் போய் விட்டிருக்கும். அல்லது, அந்தப் பலவீனங்கள், பலங்களாக மாறி, பிளஸ் பாயிண்ட் லிஸ்ட்டில் இடம் பிடித்திருக்கும்.

அதெப்படி என்று கொஞ்சம் மனோ தத்துவ ரீதியில் விளக்கட்டுமா? உதாரணத்துக்கு கண்ணன் என்கிற மாணவன் இருக்கிறான். அவனுடைய பலவீனங்களின் பட்டியலில், 'எதற்கெடுத்தாலும் அநாகரிகமான ஒரு வார்த்தையை நான் பயன்படுத்துகிறேன்' என்று எழுதி இருப்பதாக வைத்துக் கொள்ளலாம்.

இரண்டாவது நாள், மூன்றாவது நாள், இப்படி அதே பாயிண்ட்டை எழுதுகிற போது, அவனுடைய மனதுக்குள்ளேயே 'அந்த வார்த்தையை நாம் பயன்படுத்தக் கூடாது!' என்கிற எண்ணம் தானாகவே உருவாகும். அவனுக்கு அப்படி ஒரு வார்த்தையைப் பிரயோகிக்கிற எண்ணம் ஏற்படுகிற போதெல்லாம், மைனஸ் பாயிண்ட் பட்டியல் நினைவுக்கு வந்து, அந்தவார்த்தைக்கு பிரேக் போட்டு விடும். மூன்று வாரம் கழித்துப் பார்த்தால், அந்த அநாகரிக வார்த்தையைப் பயன்படுத்தும் கெட்ட பழக்கம், அவனை விட்டு அகன்றிருக்கும்.


அதேபோல பிளஸ் பாயிண்ட் பட்டியலில் இடம் பெற்றிருக்கிற விஷயங்கள், அந்தப் பட்டியலில் இருந்து நீங்காமல் இருப்பதற்கு தன்னிச்சையாக முயற்சி எழும்.

ஆக, மூன்று வார ஹோம் ஒர்க்கின் பயனாக, முதல் நாள் பட்டியலில் இருந்த பலவீனமான ஐட்டங்கள் குறைந்திருக்கும்; பிளஸ் பாயிண்ட் பட்டியல் சற்றே நீளமாக ஆகியிருக்கும்.

பிளஸ் பாயிண்ட்களின் பட்டியலை நீளமானதாக்க, ஒரு மந்திரம் இருக்கிறது. அதையும் கற்றுக் கொள்ளலாம்.

(இப்போதைக்கு விடை பெறுகிறேன்)

படம்: **யோகா**



# விஷ்ணு வகுத்த வழிமுறை!

திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அர்ச்சகர்கள் சங்கம், தென்னாங்கூரில் இரண்டு நாள் மாநாடு ஒன்றை நடத்தியது. இருநூற்றுக்கும் மேற்பட்ட வேத பண்டிதர்கள் பங்கு கொண்ட இவ்விழாவில், சைவ - வைணவப் பூஜை முறைகளைப் பற்றிய இரண்டு நாள் மாநாடு, ஒரே மேடையில் நடந்தது முக்கிய அம்சம்!

'சிவாகம - ஸ்ரீ வைகாநச பகவத் சாஸ்திர வித்வத் சதஸ்' என்ற மாநாட்டுத் தலைப்பைப் பற்றி விளக்கினார் மூத்த வழக்கறிஞரும், இந்த மாநாட்டுக்குப் பெரிதும் உதவியவருமான ஆர். கிருஷ்ணஸ்வாமி.

"சிவாகமம் என்றால், சைவ ஆகம முறைப்படி என்று பொருள். வைகாநச என்றால், வைணவ பூஜை, வழிபாட்டு முறைகள் என்று பொருள்.

"இந்த வைணவ பூஜை - வழிபாட்டு முறைகளிலேயே இரண்டு வகை உண்டு. ஒன்று தான் வைகாநச முறை; இரண்டாவது பாஞ்சராத்ர முறை. திருப்பதியில் நடை முறையில் உள்ளது வைகாநச வழிபாட்டு முறைதான். 'பாஞ்ச ராத்ர' வழிபாட்டு முறையில், மந்திரங்கள் - எந்திரங்கள் - முத்திரைகள் அதிகம். வைகாநச வழிபாட்டு முறை, வேதகால வழிபாட்டு முறையிலிருந்து தொடர்ந்து வருவதாகச் சொல்லுவார்கள். விஷ்ணுவே வைகாநச ரிஷியாக உருவெடுத்து, வகுத்துக் கொடுத்த வழிமுறை என்பார்கள்.

"பாஞ்சராத்ர முறையின் பின்னால் ஒரு சின்னக் கதை இருக்கிறது. வேதங்களைத் தூக்கிக் கொண்டு போனான் அசுரன் ஒருவன். அவற்றைத் திரும்பப் பெற ஐந்து இரவுகள் தொடர்ந்து, தர்ப்பையை ஆவாகனம் செய்து பூஜைகள் நடத்தப்பட்டன, என்பதே அக்கதை.

"சைவ ஆகம பூஜை விதிமுறைகளும் கூட, கடவுளிடம் இருந்தே வந்ததாகத்தான் மரபு. கம என்றால் வருகை.

"ஒவ்வொரு கோயிலிலும் பூசை வழிபாட்டு முறைகளை அவ்வப்போது மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். அவற்றை முறைப்படுத்தவே இந்த மாநாடு!"

- எஸ்.வி.என்.

# வெளிவந்த

பயந்தது போலவே நடந்து விட்டது. வெளி அறையின் முகப்பில் கைகளைக் கட்டிய படி, இறுக்கமான முகத்தோடு அவன் காத்திருக்கிறான். உட்கார்ந்த இடத்தி லிருந்து ஜன்னல் வழியே பல தலை களைத் தாண்டி, அவனைப் பார்க்க முடிந்தது.

இந்தச் சந்திப்பைத் தவிர்க்க வேண்டி தான், இத்தனை வருடங்களில் ஒருமுறை கூட மேட்டூர் கூட்டத்துக்கு மட்டும் ஒப்புக் கொள்ளாமல் இருந்தேன். இன்று முடியாமல் போய்விட்டது. யாரோ சரி யாகப் பற்ற வைத்திருப்பார்கள் போலிருக் கிறது. தலைவரே கூப்பிட்டுப் போகச் சொல்லிவிட்டார்.

நாட்டில் தேர்தல் திருவிழாவிற்கான சுவடுகள் தென்படத் தொடங்கிவிட்ட நேரம்! கட்சிக்கு உழைத்தாக வேண்டும்! இல்லை என்றால் எம்.பி.க்கான வேட் பாளர் பட்டியலில் காத்திருக்கும் என் பெயருக்கு கல்தா கொடுக்கப்பட்டுவிடும் என்ற கட்டாயம் என் கழுத்தைப் பிடித்ததில், இந்த 'நிரந்தர பயம்' கொஞ்சம் 'நெக்கு' விட் டுப் போனது.

எச்சரிக்கையாக சேலத்திலேயே ரூம் போடச் சொல்லிவிட்டு, கூட்டம் ஆரம்பிக்கும் நேரத்துக்குத் தான் இங்கே வந்தேன். என் னுடைய போதாத நேரம், கூட்டத்தை மேட்டூர் எல் கொயர் மார்க்கெட்டில் போடா மல், நானும் அவனும் கட்டிப் புரண்டு சுற்றித் திரிந்த சேலம் கேம்ப்பில், வழக்கமாக அரசியல் கூட்டங்கள் அரங்கேற்றப்படும், மில் தொழிலாளர் குடியிருப்பை ஒட்டிய திடலில் போட்டிருந் தார்கள்.

இருட்டைத் துரத்தி விரட்டும் மின் விளக்குகளின் வெளிச்சத்தில் குளித்தபடி நான் காரை விட்டிறங்கியபோது, பார்த் துப் புழங்கி பழக்கப்பட்ட இடம், பரவசத்தைத் தூண்டியது. உற்சாகக் கூக்குரல் எழுப்பி, ஆரவாரம் செய் யும் முன்வரிசை அனு தாபிகள் கூட்டம், எனக்குள் லாகிரி ஏற்ற, போதையுணர்வுக்கிடையே கடந்த காலம் கடை விரித்தது.

இன்றைய 'கனல் கணேசன்' ஆகிய நான், அன்றைக்குக் கால்காசுக்குப் பெறா தவனாக ஊரார் கண்களுக்குத் தென் பட்டபோது, மளிகைக் கடை சின்னா வுக்கு மட்டும் ஏனோ அறிவுக் களஞ்சிய மாக தோற்றமளித்திருக்க வேண்டும்.

பார்க்கும் போதெல்லாம் புத்தகத்தோடும், பேசும்



போதெல்லாம் சமுதாயச் சிந் தனையின் சீற்றத்தோடும், பழகும் போதெல்லாம் யதார்த்தத்தை மீறிய இழைதலோடும் இயங்கிக் கொண்டிருந்த நான், கிட்டத்தட்ட அதே ஏக்கத்தோடு,

# இடமில்லை

அமரர் கல்கி
நினைவுச் சிறுகதைப்
போட்டியில்
மூன்றாம் பரிசு
ரூ.5000 பெறும் சிறுகதை



கடையே கதி என்று இருந்த சின்னாவை சேர்ந்திருக்க வேண்டும்! வயது வித்தியாசம் அதிகமிருந்தாலும் சின்னா என் ஆப்த ஸ்நேகிதன் ஆனான்!

படிப்பை பாதியிலேயே ஏறக்கட்டிவிட்டு, தறுதலை என்று தண்ணீர் தெளித்துவிடப்பட்டு, ஏதாவது ஒரு கட்சி ஆபீஸே கதி என்று கிடந்த எனக்கு, சின்னாவின் நட்பு நம்பகமான காப்பகமாகிவிட்டது. எந்நேரமும் அவன் கடையே கதி என்று கிடந்தேன்.


**ஜெ.பாக்கியலட்சுமி**

அவ்வளவு பெரிய மளிகைக் கடையை, ஒரு சில சிறுவர்களை வைத்துக் கொண்டு சின்னாவே திறமையாக நிர்வகித்து வந்தான். கண்ணால் பார்த்தே எடையையும், தரத்தையும் சொலலிவிடும் சின்னாப் பைசா சுத்தமாக, கணக்கு போடுவதில் சமர்த்தன்.

சிரிக்கச் சிரிக்கப் பேசி வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்வதிலும், அவர்களைத் திருப்திப் படுத்துவதிலும் சின்னா நம்பர் ஒன். அதனாலேயே கடையில் கூட்டம் அலைமோதும்! மதியம் சாப்பாடு வேளைக்கு பிறகு, கொஞ்ச நேரம் வியாபாரம் மந்தமாக இருக்கும். அந்த நேரத்தில்தான் சின்னா மூச்சு விடுவான். அதுதான் அவனுக்கு சாப்பாட்டு நேரம் மற்றும் என்னுடன் உரையாடக் கிடைக்கும் சின்ன இடைவெளி!

மதிய இடைவெளியில் மட்டும் முதலாளி வருவார். கடையை தவிர வேறு சில பிஸினஸ்களும் இருந்ததால், முழுக்க முழுக்க கடையை சின்னாவின் பொறுப்பிலேயே விட்டிருந்தார். சின்னாவுக்கு ஒரு வகையில் அவர் பெரியப்பா உறவாம்! சின்னப் பையனாக இருக்கும்போதே சின்னாவை, ஒத்தாசைக்காக ஊரில் இருந்து அழைத்து வந்துவிட்டாராம்! சின்னாமீது பரிபூர்ண நம்பிக்கையும், பாசமும் வைத்திருக்கிறாராம். அவன் பெருமையாகச் சொல்லிக் கொள்வான். சின்னாவால் ஓசியில் கிடைக்கும் சாப்பாடு, காபி மற்றும் சிகரெட்டுக்காகவே சின்னாவின் கடையே கதி என்று கிடந்தேன். என்னுடைய பழக்கத்துக்குப் பிறகுதான் சின்னாவுக்குப் புத்தகங்களின் அறிமுகமே ஏற்பட்டது என்று சொல்லலாம்!

கிடைத்துக் கொண்டிருந்த ஓசி



"நேற்றிரவு உங்க கனவில் நான் வந்தேனா?"

"அட! எப்படிக் கண்டுபிடிச்சே?"

"ஐயோ என்னை விட்டுரு... ஐயோ என்னை விட்ருனு தூக்கத்தில் அலறினீங்களே!"

- உ. ராஜாஜி

வசதிகள் ஓய்ந்து விடக் கூடாது என்பதற்காகவே, கட்சி ஆபீஸ், லைப்ரரி என்று தேடித் தேடி புத்தகங்களைச் சேகரித்து அவனிடம் கொடுக்க ஆரம்பித்தேன் - நாளடைவில் அவன் படித்துவிட்டு, என்னிடம் சொல்லி விவாதிக்கும் அளவுக்கு நிலைமை தலைகீழாகிப் போனது. அரசியல் வேறு என் கவனத்தை ஈர்க்கவே, செலவுக்குக் காசில்லாமல் தாளம் போட வேண்டியதாயிற்று. பக்கத்திலிருந்த அலமாரியின் மேல், அழகாக கொலுவிருந்த பாக்கெட்டுகளின்மீதும், சில்லறை எதிர்பார்த்து வைக்கப்படும் ரூபாய் நோட்டுக்களின் மீதும், என் கை மெல்ல படர்ந்தது. ஜோல்னாப் பை அடிக்கடி 'நிறைமாதம்' கண்டது. பம்பரமாக சுற்றிக் கொண்டு, அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கும் சின்னாவுக்கு, இதை எல்லாம் கவனிக்க நேரமும் இல்லை - தேவையும் இல்லை.

ஒரு நாள் சாப்பாட்டுக்கு பிறகு நான் சின்னாவைப் பார்க்க கடைக்குள் நுழைந்தபோது "எனக்கு அந்த வெட்டிப்பய கணேசன் மேலதான் சந்தேகமா இருக்கு" என்று முதலாளி சொல்லி முடித்து, என்னைப் பார்த்தும் அதிர்ச்சியாய் விழித்தார். சின்னா சர்வ சாதாரணமாக "சரக்கு கொறஞ்சா, நான் கணக்குல விட்டிருப்பேன். காசு கொறஞ்சா நான் செலவழிச்சிருப்பேன். விடுவியா - இதைப் போய் பெரிசு படுத்திகிட்டு" என்றபடி கண்ணால் என்னை வர வேற்றான்.

முதலாளி சலிப்போடு எழுந்து, உள் பாக்கெட்டில் கை விட்டு, நூறு ரூபாய் தாள்களை உருவி, எண்ணி, சின்னாவிடம் நீட்டினார். "ஆயிரம் இருக்கு - பத்திரம் - மிட்டாய்க்காரனுக்கு குடுத்துடு" என்றார். சின்னா பணத்தை வாங்கி டேபிள் மீதிருந்த புத்தகத்தின் உட்புறம் செருகினான் - முதலாளி என்னைக் கேவலமாகப் பார்த்துவிட்டு ஸ்கூட்டருக்கு நகர்ந்தார்!

நான் உள்ளுக்குள் பயம் ஊற, சேரின் நுனியில் உட்கார்ந்தேன்! எப்படி பேச்சை ஆரம்பிப்பது என்று தெரியாமல், சின்னாவை பரிதாபமாகப் பார்த்தேன். அவன் பளிச்சென்று புன்னகைத்தான்.

"ஒன்னுமில்லே கணேசா. நீ அப்பப்ப பிஸ்கட் பாக்கட், ரூபா நோட்டுன்னு இங்கிருந்து எடுத்துக்குவயில்லே! அதை இந்த கடைப்பசங்கள்லே எவனோ போட்டுக் குடுத்திருப்பான் போல. நீ என்கிட்டே சொல்லலேன்னாலும், உன் கஷ்டம் புரிஞ்சி நானே கண்டுக்காம இருக்கும்போது, இவனுகளுக்கு ஏன் இந்த வேலை?"

பேச்சை நிறுத்திவிட்டு என்னைக் கூர்ந்து பார்த்தான் - பிறகு பார்வையைத் திருப்பி, நெடிய பெருமூச்சை வெளியேற்றினான்.

"உங்கிட்டே என் நெருக்கத்தையும், நம்ம நட்போட இறுக்கத்தையும் நான் சரியா உனக்குப் புரிய வச்சிருந்தா, மத்தவங்க கண்ணுக்குத் தப்பா படற இந்தக் காரியத்தை ஒரு வேளை நீ செய்யாமக் கூட இருந்திருப்பே? தப்பு என்னதுதான் நீ ஒண்ணும் சங்கடப் படாதே"

குரல் உடைந்து, குமுறலோடு அவன் சொல்லியதைக் கேட்ட அந்தக் கணமும், தினமும், என் வாழ்க்கையின் பக்கங்களில் கறுப்பைப் பூசியது - அவமானத்தால் உடல் நடுங்க. தலைகுனிந்து தடுமாறிப் போய் உட்கார்ந்திருந்தேன் - மெல்ல சுதாரித்து நிமிர்ந்தபோது சின்னா கடை வேலைகளில் பம்பரமாகி இருந்தான்.

"அப்ப... நான் கிளம்பட்டுமா

சின்னா..."

சுரத்தில்லாமல் முனகினேன். எதையோ எடைபோட்டுக் கொண்டிருந்த சின்னா திரும்பிப் பார்க்காமல், "சாயந்திரம் சீக்கிரமா வந்துடு" சாம்பள்ளியில புதுசா லைப்ரரி திறந்திருக்கானாம். ஒரு நடை பாத்துட்டு வந்துடலாம்" என்றான். நான் மௌனமாக நகரவும், "கணேசா - சத்தியசோதனையை' எடுத்துட்டுப்போ முடிச்சிட்டேன்" என்றான்.

நான் டேபிளின் மீதிருந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டு நகர்ந்து, திரும்பும் வரை சின்னா பச்சாதாபத்தோடு பார்த்துக் கொண்டே இருந்தது மனதை பாரமாக்கியது.

அப்போதுகூட நான் ஒரு நல்ல நண்பனாக நடந்து கொள்ள நிறைய வாய்ப்பிருந்தது. அதையே எதிர்பார்த்து தான், ஒருவேளை சின்னா ஆயிரம் ரூபாய் செருகி வைக்கப்பட்டிருந்த அந்தப் புத்தகத்தை என் கையில் கொடுத்தானோ என்னவோ... அந்தக் கணத்திலிருந்து வரம்பு மீறுதல் ஒன்றே என் வாழ்க்கையாகிவிட, நான் அவன் வட்டத்தில் இருந்து விலகி அந்நியமானேன்.

அவசர அவசரமாக என் உடைமைகளைச் சுருட்டிக் கொண்டு, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் பணத்தோடு தலைமறைவானேன். அதற்குப் பிறகு எப்போதாவது எழும் சின்னாவின் நினைவைத் தவிர, வேறெதுவும் என் ஞாபகத்தில் நிற்கவில்லை.

படபடவென்ற கைத்தட்டல் மேடையிலிருந்த என்னை உலுக்கி நிகழ்காலத்துக்குக் கொண்டு வர நிதானமாக எழுந்து 'மைக்' கைப்பிடித்தேன். 'கனல் கணேசன்' விஸ்வரூபமெடுத்தான். கூட்டம் முடிந்து, கட்சி ஆபீசில் சிரம பரிகாரம் செய்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், இதோ... மீண்டும் அவன்... சின்னா.

நேர்த்தியாக வாரிவிடப்பட்ட தலை முடியும், நெற்றியில் வெளிச்சமிடும் திருநீற்றுப்பட்டையும், பளீரெனச் சிரிக்கும் வெள்ளைச்சட்டையும், வேட்டியும், சுத்தமாய் மழிக்கப்பட்டு லோஷன் மணக்கும் முகமும் முற்றிலுமாக மாறிப் போய், பரட்டை தலையும், நரைத்துப் புதராக மண்டிக் கிடக்கும் தாடி மீசையும், ஒடுங்கிய முகத்தில் குழி விழுந்த கண்களும், அழுக்கை அப்பிக் கொண்டு சின்னா பின்னமாகி இருந்தான். அவனுடைய இன்றைய அவல நிலைமைக்கு நான்தான் காரணமோ என்ற ஆதாரமற்ற பயம், என் அடிவயிற்றைப் பிசைய, நான் அவஸ்தையானேன்.

"காரை எடுக்கச் சொல்லுங்க. கொஞ்சம் தலைவலியா இருக்கு" என்றேன் வலியச் சிரித்தபடி!

அடுத்த அரைமணி நேரத்தில் கார் கிளம்பி, மேச்சேரியைத் தாண்டியதும் தான் என் மூச்சு சீரானது - சின்னா எங்கோ கூட்டத்தில் கரைந்து போயிருப்பான். இனி அவனைச் சந்திக்கக் கூடிய சாத்தியங்கள் இருப்பதாகத் தோன்றவில்லை.

நான் இயல்பு நிலைக்கு வந்துவிட்டதாகத் தோன்றவே, பக்கத்திலிருந்த மாவட்டச் செயலாளரைப் பார்த்து இலேசாகச் சிரித்தேன். "கூட்டம் எப்படி இருந்தது?" என்று கண்களைச் சிமிட்டினேன். முன்ஸீட்டிலிருந்தவர் சரேலெனத் திரும்பி "பின்னிட்டிங்க தலைவரே!" என்றதும், அறிமுகமற்ற அவரை நான் பெருமிதமாகப் பார்த்தேன், செயலாளர்



என்னைப் பார்த்து "இவரை உங்களுக்குத் தெரியுமில்லே!" என்றார் - நான் உதட்டைப் பிதுக்கினேன். "என்ன தலைவரே! நம்ம கட்சி விசுவாசி! பெரிய பிஸினஸ் மேன் - உங்க ஊர் ஆள்தான்!"

நான் நெற்றியைச் சுருக்கியபடி அனிச்சையாகக் கை கூப்பவும், அவர் அதைத் தம் கைகளால் பற்றிக் கொண்டு பரபரப்பானார்.

"உங்களால எங்களுக்குத்தான் பெருமை தலைவரே! நீங்க மேட்டூர்ல இருந்த ஆரம்ப நாட்கள்லே, நம்ம கடைக்கு அடிக்கடி வருவீங்க. எங்க சின்னாகூட ரொம்ப நெருக்கமா..!"

நான் விறுக்கென்று நிமிர்ந்து உட்கார்ந்தேன். "நீங்க சின்னாவுக்கு....?"

"பெரியப்பா மகன்! எங்க கடையிலதான் சின்னா வேலை பாத்தாரு.. இப்ப..!"

அவர் மிகவும் தயங்கி, தலை குனிந்து மிடறு விழுங்கி விட்டு மேலும் தொடர்ந்தார்.

"வெறும் ஆயிரம் ரூபாய் விவகாரத்துல கோவிச்சுகிட்டு வெளியே போய் வீணாப் போயிட்டாரு! எங்கப்பாவைக் கேட்காம எடுத்து செலவழிச்சுப் புட்டாரு! பெரிய பிரச்னையாயிடுச்சு. பாவம்... இப்ப ரொம்ப நொடிஞ்சு போயிட்டாரு! அப்பாருக்கு பின்னால எவ்வளவோ கூப்புட்டுப் பார்த்தோம். பிடிவாதமா வரமாட்டேன்னுட்டாரு!"

நான் கேட்க நினைத்த எல்லாவற்றுக்கும், படபடவென்று அவர் பதில் சொல்லிவிடவே, நான் மௌனமாய் உதட்டைக் கடித்து உணர்ச்சிகளைக் கரைத்துக் கொண்டிருந்தேன்.

"கூட்டம் முடிஞ்சதும் உங்களைப் பாக்கணும்னு சின்னா ரொம்ப முயற்சி பண்ணாராம். முடியல. அதான்... இந்த லட்டரை உங்க கிட்டே குடுக்கச் சொல்லி... அவர் ஒட்டிய கடித உறையை அவசர அவசரமாக வாங்கிப் பிரித்தேன்.

உயர்திரு கனல் கணேசன் அவர்களுக்கு!

வணக்கம்! வாளினும் கூரிய உங்கள் பேச்சுக்கு என் வாழ்த்துகள். இங்கிருந்து போகும்போது தங்களால் ஒளித்து வைக்கப்பட்ட எதையும் இனி திரும்பப் பெற முடியாது என்றாலும், மனமும் மார்க்கமும் இருந்தால் 'சத்தியசோதனை' என்ற அந்தப் புத்தகத்தை மட்டும் திருவரதன் அவர்களிடம் கொடுத்தனுப்பவும். மனசளவில் மறைக்க முடியாதவை புத்தகங்கள் மட்டுமே!

என்றும் நட்புடன்,

சின்னா

வாசித்து முடித்து மடிக்கும்போது என் விரல்கள் நடுங்கின. ●

# மண்வாசனை ஒளிப்பதிவாளர்!



அடிதடி, காதல், கமர்ஷியல் படங்களுக்கு மத்தியில், அதிரடியாக அகத்தியன் இயக்கியிருக்கும் மண்வாசனை படம் ராமகிருஷ்ணா! இதன் ஒளிப்பதிவாளர் ரமேஷ் யாதவ். அரசு திரைப்படக் கல்லூரியில் நடிப்பு பயிற்சி பெற்று, கேமராவைத் தேர்ந்து கொண்ட காரைக்குடி இளைஞர். கிராமத்தில் வளர்ந்ததாலோ என்னவோ, நாகரிகம் நுழைந்து சீரழித்து விடாத தொலை தூரத்து நெல்லை மாவட்ட கிராமங்களை, அகலமான 'டெலிஷாட்டுக்கள்' மூலம் அப்படியே படம் பிடித்திருந்தார். படத்தைப் பார்த்த மண்வாசனை ஸ்பெஷலிஸ்ட் பாரதிராஜா - "எனக்கொரு கேமரா கண்ணன் என்றால், அகத்தியனுக்கு ராஜேஷ் யாதவ்" என்று தேடிப்பிடித்து பாராட்டியிருக்கிறார்.

அப்புறமென்ன, ராஜேஷ் யாதவ் கையில் இப்போது ஏகப்பட்ட வாய்ப்புகள்.

- ஜெ

* ஜி.ஏ.பிரபா * ரம்யா நாகேஸ்வரன் * ஜி.ஜெயராமன்

# தீக்குச்சி வெளிச்சத்தில் திசை காட்டிய கல்கி!

**அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 2004ல் பரிசு பெற்றவர்கள் பற்றிய சிறு அறிமுகம்:**

**ஜி.ஏ.பிரபா:**
**முதல் பரிசு - காணிக்கை**

கோபி செட்டிப் பாளையத்தைச் சேர்ந்த இவருக்கு எழுதுவது இன்பம். இதுவரை, எண்பது சிறுகதைகள், ஐந்து தொடர்கள், ஆறு மாத நாவல்கள் எழுதியிருக்கிறார்.

"அம்மாவும் அப்பாவும்தான் நான் எழுத காரணம். சின்ன வயசுல அவங்கதான் 'கல்கி'யோட நாவல்களைத் தந்து படிக்கச் சொன்னாங்க. அந்தப் பாதிப்பில்தான் எழுத தொடங்கினேன்" என்கிற பிரபா, இலக்கியச் சிந்தனை பரிசு உட்பட, பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பரிசுகள் பெற்றிருக்கிறார்.

தற்போது கணித ஆசிரியையாகப் பணியாற்றும் இவர், விகடன் வார இதழின் முன்னாள் மாணவ நிருபர்.

**ரம்யா நாகேஸ்வரன்:**
**இரண்டாம் பரிசு - அகத்தின் அழகு**

தற்போது சிங்கப்பூரில் வசிக்கும் இந்த சென்னைவாசி, "ஆதவனின் எழுத்துகள்தான் என்னை எழுதத் தூண்டின" என்கிறார்.

இவரது ஒன்பது சிறுகதைகளும், ஐந்து கட்டுரைகளும் பிரசுரமாகியுள்ளன. சிங்கப்பூர் அரசு நடத்திய தங்க முனைப் பரிசுப் போட்டி, சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர்கள் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டி உட்பட, பலவற்றில் பரிசுகள் பெற்றிருக்கிறார்.

"என் எழுத்துகளின் மூலம் உறவுகளிடையே பரஸ்பர புரிதல், இணக்கம், விரிந்த பார்வை, போன்ற கருத்துகளையே கூற விரும்புகிறேன். மனித நேயம் வளர வேண்டும் என்பதே என் ஆசை" என்கிற ரம்யா, இந்தியாவில் உள்ள பல்வேறு சமூகத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதி திரட்டும் பணியையும் செய்து வருகிறார்.

**ஜெ. பாக்கியலக்ஷ்மி:**
**மூன்றாம் பரிசு - ஒளிவதற்கு இடமில்லை**

ஜெரா, ஜெ.பாக்கியலக்ஷ்மி, பாரதி சரண்யா போன்ற புனை பெயர்களில் எழுதிவரும் ஜி. ஜெயராமன், மேட்டூரில் வசிக்கிறார். தனியார் இரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் என்ஜினியராகப் பணியாற்றும் இவர், சிறந்த நாடக நடிகர், இயக்குனர்.

"வாழ்வின் அவலங்களும், போலித்தனங்களும், துரோகங்களின் துணிவும்தான் என்னை எழுதத் தூண்டியவை. எனக்குள் இருந்து கொண்டு எதையாவது எழுதச் சொல்லி அடம்பிடிக்கும் மனதோடு இருட்டில் கிடந்த எனக்கு, தீக்குச்சி வெளிச்சத்தில் திசை காட்டியிருக்கிறது கல்கி" என்கிறார் இவர்.

- அப்பு



# வட்டமேஜை

# தானா வரும்டா சாமி!

✉ இந்து மதத்தின் ஜாதிப் பிரிவினைகள் பற்றி டி.ஆர். பாலு தெரிவித்த கருத்துக்கள், ஒன்றும் ஆழ்ந்த விவாதத்துக்கோ, அல்லது கண்டனத்துக்கோ உரியன அல்ல. தன் வீடு, தன் நாடு, தன் மதம் எனும் மனரீதியான 'உரிமை எடுத்துக் கொள்ளுதல்' தான் இத்தகைய 'இடம் பொருள் ஏவல்' மீறிய மன வெளிப்பாடுகட்குக் காரணம். நாம் எதன்/யார் மீது அதிக அன்பு கொள்கிறோமோ, அங்கு தான் கோபதாபமும் உரிமை கொண்டு வெடிக்கும்.

நாகமலை, ப.கா.மணிமொழியன்

✉ 'ஆசிரியர் பக்கம்' கட்டுரை காலத்தே வரைந்த சிந்தனைக்குரிய சீரிய கருத்துப் பெட்டகம். விளம்பர வெளிச்சத்தில் தெரிய வருகின்ற பாதிக்கப்பட்டோர் மட்டுமே, இரக்கத்திற்கும் மலிவான புகழுக்கான ஆதரவிற்கும் ஆளாகின்றனர். மற்றவர் நிலை? ஜனநாயகத்தில் 'அரசு' என்பது மக்களின் மறு பிரதிபலிப்பே! உதவிகள் யாவும் அரசின் வழி நல்குதலே அறிவுடைமை!

மணவாள நகர்,
பொன். இளவேற்கோ

✉ பட்ஜெட் விவாதத்துக்கு எதிர் கட்சிகள் செய்யும் ஜனநாயகக் கடமையைச் செய்யவிடாமல் அவர்களுக்கு வாய்ப்பூட்டு போட்டுவிட்ட ஜெ.வின் சர்வாதிகாரப் போக்கை, தலையங்கம், கார்ட்டூன் வாயிலாகக் கண்டித்த விதம் பாராட்டுக்குரியது.

அயன்புரம், த. சத்தியநாராயணன்

✉ இன்றைய கால கட்டத்தில் விளம்பரம் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. கல்விக்கு விளம்பரம். வாங்கும் கடனிற்கு விளம்பரம், ஆண்களுக்கான உபயோகப் பொருள்களுக்குக் கூட பெண்களை வைத்து விளம்பரம் தர வேண்டிய சூழல் ஏற்பட்டுவிட்டது. மாதர்சங்க அமைப்பாளர் கூறுவது போல, 'நாகரிக அணுகுமுறைகள்' ஆரோக்கியச் சூழலை ஏற்படுத்தும்.

ஈரோடு, ரேவதிப்ரியன்

✉ யாருக்காகவும் எதற்காகவும் தன் கணவனை பிறருக்கு விட்டுக் கொடுக்காத பெண்கள் மத்தியில், கட்சி கட்சி என அலையும் கணவனை, அரசியல் தலைவருக்கே 'காணிக்கையாக' (முதல் பரிசுக் கதை) தந்த தேவயானையின் செயல் 'நெத்தியடி'!

ஆதம்பாக்கம், எஸ். விஜயலக்ஷ்மி

✉ எங்கிருந்து சுட்டீங்க, இந்தக் காதல் டைரியை? சும்மா சொல்லக் கூடாது, காதல் வந்துட்டா, கவிதை தானா வரும்டா சாமி!

புரசைவாக்கம், அ. பிரேமானந்த்

✉ முதல் பரிசுக் கதை 'காணிக்கை'யின் கரு. தேவையான ஒன்று. முடிவு எதிர்பாராதது. சமூக அக்கறையில் ஏற்பட்ட கோபத்தின் வெளிப்பாடு. ஒரு சத்திய ஆவேசம். அருமையான யதார்த்தமான நடை. பாராட்டுகள்.

திருத்துறைப்பூண்டி, உத்தமசோழன்

✉ டி.ஆர். பாலுவுக்கு சுகி. சிவம், தமது பதிலில் கருணாநிதி அறிவுரை வழங்க வேண்டும் என்று முடித்திருக்கிறார். இவர்களை எந்த அறிவுரையும் மாற்றாது. கல்கி இவர்களுக்கு இவ்வளவு முக்கியத்துவம் அளித்திருக்க வேண்டாமோ என்று தோன்றியது. இருந்தாலும் கடமை என்று ஒன்றிருக்கிறதே. அந்த வகையில் இதுவும் ஒரு நன்மைக்கே என்று மனம் ஆறுதலடைந்தது. சுகி. சிவத்தின் கருத்தாழமிக்க விளக்கத்திற்கு, மனமார்ந்த நன்றி.

சென்னை, ரகுபதி



# S.V.முதியோர் இல்லம்



## Charitable Trust (Reg)

இங்கு முதியோர்களுக்கு இலவச மருத்துவமனை, ஆரம்பிக்கப்பட்டு அனைவரையும் தனித்தனியாக பரிசோதனை செய்து, உடல் ஆரோக்கியம் கண்காணிக்கப்படுகிறது. படுத்த படுக்கையில் உள்ள முதியோர்கள் அனைவரையும் 24 மணி நேரமும் டாக்டர்களும், நர்சுகளும், உதவியாளர்களும் கவனித்துக் கொள்கிறார்கள். எல்லா எமர்ஜென்சி உபகரணங்கள் உள்ளன.

மனச்சிதைவு, மனவளர்ச்சி குன்றிய முதியோர்கள் மற்றும் எல்லா வயது ஆண்/பெண் நோயாளி களுக்கென்று தனி இல்லம் மருத்துவ வசதியுடன் செயல்பட்டு வருகிறது.

முதிய பருவத்தில் மறதி நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு (ஆண், பெண் இருபாலரும்) சிறப்பு பாதுகாப்பு வசதியுடன் முற்றிலும் இலவச மருத்துவ வசதியுடன் தனித் தனி இல்லம் செயல்படுகிறது.

உங்கள் பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களில் நீங்கள் அளிக்கும் ஒரு சிறிய நன்கொடைத் தொகை எங்கள் இல்லத்தில் உள்ள முதியோர்கள் மருத்துவ வசதிக்கு பயன்படுத்துவதுடன், அவர்கள் வாழ்க்கையை காப்பாற்றிய நல்லாசி உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கும் மிகப் பெரிய பரிசாகவும் அமையும்.

**முதியோர் சேவை பெரியது!**

நன்கொடைக்கு வருமானவரி விலக்கு (80G, Income Tax Excemption) உண்டு

## S.V. HOME FOR AGED

### Charitable Trust (Reg)

# 50 / 88, Panchali Amman Kovil Street, Arumbakkam, Chennai - 600 106.
(Near Panchali Amman Temple) Tel. Off: 044 - 2475 5700, 2475 6700, 2475 7777, 2475 5799
e-mail:svhome@vsnl.net

# ஆன்மீக உலகில் ஓர் அற்புதம்!

ஆன்ம சக்தியை அழித்து, அறிவின் திறனை குறைத்து, மனவலிமையை தகர்த்து, நிம்மதியைக் குலைத்து, வலிவை பாழாக்கி, ஆரோக்யத்தைக் குறைத்து, குடும்பத்தில் குழப்பம், தொழிலில் நஷ்டம், உத்தியோகத்தில் பிரச்சனை, கல்வியில் தோல்வி, காதலில் வீழ்ச்சி போன்ற காரியங்களை பில்லி, சூன்யம், ஏவல் இவற்றால் தீமை உண்டாகின்றன.

விண் மட்டும் விஞ்ஞானம் வளர்ந்த போதும், இவைகளுக்குத் தீர்வு அருள் மறையில் மாத்திரமுண்டு. இந்தக் குறைகளை நீக்கி எல்லாத் துறையிலும் வெற்றி பெறச் செய்கிறார் மாபெரும் தவச்சீலர் மறையகம் பாபா. உடனே அணுக வேண்டிய முகவரி



அருள்

## மறையகம்

1 B, மகாலட்சுமி அப்பார்ட்மெண்ட், நெ. 3, அப்துல் ரசாக் தெரு,
நூர்ஜஹான் தியேட்டர் எதிரில்(தற்போது ராஜ் தியேட்டர் என்று
பெயர் மாற்றப்பட்டுள்ளது), சைதாப்பேட்டை,
சென்னை – 600 015.
ஃபோன் : 2435 1190, 2433 2047. செல்போன் : 3100 5716

குறிப்பு : வெளியூர், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் தங்கள் பிரச்சினை தீர்க்க தங்கள் பெயர், தங்கள் தாயார் பெயருடன் தங்கள் பிரச்சினைகளை எழுதி, ரூ. 10 (அ) அதற்கான அஞ்சல் தலையுடன் அனுப்பி வைத்து ஆலோசனை பெறவும்.

# எம்.ஜி.ஆர். தந்த கர்லாக்கட்டை!

'ஜோர்' ஜோராகப் போவதில் குஷியாக இருக்கிறார் சிபிராஜ். வீட்டில் கர்லாக்கட்டையுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தவரைச் சந்தித்தோம்.

இந்த கர்லாக்கட்டை அப்பாவுக்கு எம்.ஜி.ஆர். கொடுத்தது. தினமும் இத வச்சு அப்பா எக்ஸர்ஸைஸ் பண்றதை சின்ன வயசுலயிருந்தே பார்த்திருக்கேன். ஆசையில நான் தூக்கப் போனா, செம வெயிட். வளர்ந்தப்புறம் இதைத் தூக்கணும்னு நினைச்சுக்குவேன். அது ஒரு கனவாத்தான் இருந்தது. இப்ப வீட்லயே ஜிம் வந்தாச்சு. ஜெயக்குமார்ங்கற மாஸ்டர் வந்து சொல்லித்தர்றார். அப்பா இதையும் பயன்படுத்திக்கோன்னு சொன்னாரு. இப்ப பழகிட்டேன்.

**விஜய் - அஜித் - தனுஷ், சிம்பு. இந்த வரிசையில நீங்க எங்க இருக்கீங்க?**

இப்ப இருக்கிற சினிமா ஃபீல்டு ரொம்ப போட்டி நிறைஞ்சதா இருக்கு. எல்லோருமே திறமைசாலிங்களா இருக்காங்க. அதை மறுக்க முடியாது. நல்ல கதைகளை செலக்ட் பண்றதும், கடின உழைப்பும் இருந்தா, நிச்சயமா நல்ல இடத்துக்கு வர முடியும். நான் ரெண்டு படம்தான் பண்ணியிருக்கேன். முதல் படத்தைவிட 'ஜோர்'ல இன்னும் சிறப்பா நடிச்சிருக்கேன்னு எல்லாருமே சொல்றாங்க. விரைவில் நல்ல இடத்துக்கு வருவேன்.

**கஷ்டப்பட்டுப் போராடி கதாநாயகனா தன்னை நிலை நிறுத்திக்கிட்டவரு உங்க அப்பா, சத்தியராஜ். உங்களுக்கு அப்படியான எதுவும் நிகழலை...**

ஆமா... ஒருத்தர் கஷ்டப்பட்டு முன்னேறினா எல்லாரும் கஷ்டப் பட்டுத்தான் வரணும்னு இல்லையே. அப்பா சின்ன ரோல்ல நடிச்சு, அப்புறம் வில்லனா வந்து, கதாநாயகனா வளர்ந்தவரு. அவர்



மகன்ங்கறதால சினிமாவுக்குள்ள நான் நுழைஞ்சது ஈஸியான விஷயமா இருக்கலாம். ஆனா எனக்குன்னு ஏதாவது திறமை இருந்தாதான், ரசிகர்கள் ஏத்துக்குவாங்க. ஒரு படம் வேணா, 'சத்யராஜ் மகன்பா, என்ன பண்ணியிருக்கான் பார்க்கலாம்'னு வருவாங்க. அப்புறம் நம்மகிட்ட திறமை இருந்தாத்தான் நிலைச்சு நிற்க முடியும்.



**சத்யராஜ் இப்ப பிஸியான நடிகர். அவர் ஒரு படத்துல டூயட் பாடிட்டு வர்றாரு. மகனும் டூயட் பாடிட்டு வர்றீங்க...**

இது சந்தோஷமான விஷயம்தான். இதுக்கு முன்னால சிவாஜி, பிரபு இரண்டு பேருக்கும் இது நடந்திருக்கு. இப்ப எனக்கும் அப்பாவுக்கும். அப்பாவும் மகனும், சினிமாவுக்காகத் தான் காதலிக்கிறோம். காதலிக்கறதே தப்பில்லைங்கறபோது, சினிமாவுக் காக காதலிக்கிறது தப்பாயென்ன?

**அப்பாவும் மகனும் என்ன பேசிக்குவீங்க?**

அப்பா ஒரு ஜாலியான ஆள். எதையும் டேக் இட் ஈஸியா எடுத்துக்குவார். அவரோட அனுபவங்கள் அவருக்குப் பலம். நேரந்தவறாமை, மற்றவங்களை மதிக்கிற பண்பு, இந்த மாதிரியான அட்வைஸ் ஒரு பக்கம் இருந்தாலும், நான் நடிக்க வர்றேன்னதும் அவர் சொன்ன முதல் வார்த்தை : 'சினிமா கஷ்டமான தொழில்.'

'வேற வேலையில, நாம பின்னால் இருந்தா போதும். ஆனா நடிப்பு நம்ம கையிலதான் இருக்கு. பொதுவா மக்கள் ஏத்துக்கணும். அதுக்கு உழைப்பு அதிகமா இருக்கணும்' என்பார்.

**அடுத்து...?**

அடுத்து அப்பாவும் நானும் சேர்ந்து ஒரு படம் பண்ணப் போறோம். இன்னும் சில படங்கள்ல பேச்சுவார்த்தை நடந்திட்டிருக்கு.

**- ஏக்ஜி**

படங்கள் : **ஸ்ரீஹரி**




## பட்டுப் பூச்சிகளை தொலைத்த ஒரு பொழுதில் - அ. வெண்ணிலா

அன்பு அடிமைப் படுத்துவதல்ல, பகிர்தல் புரியாமல் ஏற்பதல்ல - மொத்தத்தில் காதல் என்பது உடல், பொருள், ஆவி கலந்த நட்புக்கும் சற்று மேலே. யதார்த்த வாழ்வில் காதலைப் பின்னி வடித்த சிறுகதைகளின் தொகுப்பு. உடன், இசையும் சந்தமுமாய் இணைந்த கணவன் - மனைவி கொண்ட காதல் சொல்லும் குறு நாவல்.

**மதி நிலையம், 4, தணிகாசலம் சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.40**

## மனிதனுக்கு அடுத்தவன் - கபிலன் வைரமுத்து

எப்போதும் கவிதைக் காய்ச்சல் வந்த இளைய தலைமுறை பாடுவது போல், காதலையும், கடவுளையும், பாழாகும் உலகையும் வடித்துக் கொட்டும் வார்த்தை கள்தாம். இருந்தும் வடிவம் கோணாமல் வார்த்திருப்பதில், வாசிக்க ஒரு சுகம் தருகிறது.

**சூர்யா இலக்கியம், 22, 4வது குறுக்குத் தெரு, ட்ரஸ்ட்புரம், சென்னை - 24. விலை ரூ.35**

## மாநபி(ஸல்) காட்டிய மனித உரிமைகள் - செ. திவான்

எவருடைய கோயிலையும் எவரிடமிருந்தும் பறிக்கும் 'உரிமை யாருக்கும் கிடையாது' - என மாநபி உரைத்த மனித உரிமைகள் பற்றிய விளக்க நூல்.

**சுஹைனா பதிப்பகம், 106F 4A, (பு.எண்.148) திருவனந்தபுரம் சாலை, பாளையங்கோட்டை. விலை ரூ.10**

## கவிதைப் பெண்கள் - தொகுப்பு ஜி. விஜயபத்மா

ஔவை முதல் வெண்ணிலா உட்பட, பெண் கவிகள் அனைவரின் கவிதைகளும் வலிகளைத்தான் பிரசவிக்கின்றன. சமுதாயம் தந்த சாயங்களை, வலிகளை, தழும்புகளை வருடிக் கொடுக்கும் பெண் கவிகளையும் கவிதைகளையும் பற்றிய தொகுப்பு.

**விஜி பப்ளிகேஷன், சி20, ஏஜிஎஸ் காலனி 2வது குறுக்குத் தெரு, திருவான்மியூர், சென்னை - 41. விலை ரூ.60**

## உங்களுக்குத் தெரியுமா? - தொகுப்பு சாருகேசி

நாற்பதுக்கு முன்னாலோ, பின்னாலோ ஓடிக் கொண்டிருப்பவரா நீங்கள்? ஜோசியம், ஜாதகம் இவற்றில் இதுவரை நம்பிக்கை இல்லாவிட்டால் போகிறது. ஆனால் கண்டிப்பாய் எழுதிக் கொள்ள வேண்டிய ஜாதகம் ஒன்று அப்பல்லோவில் இருக்கிறது. நீங்கள் செய்து கொள்ள வேண்டிய சோதனைகள் என்னென்ன என்று கட்டம் கட்டமாகப் போட்டுத் தந்துவிடும். ஆரோக்கியம் பற்றி பல்வேறு மருத்துவர்கள் கல்கியில் எழுதிய கட்டுரைகளின் மிகப் பயனுள்ள தொகுப்பு.

**CBH பப்ளிஷர்ஸ் & டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் பி. லிட்., 20, விஜயலட்சுமி தெரு, நுங்கம்பாக்கம், சென்னை - 34. விலை ரூ.39**

**- விஷ்வக்**

விரைவில்
உங்கள் கைகளில்
பொங்கும்...

# பாற்கடல்

மாதஇதழ்

ஆசிரியர்:

**டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன்**

**பெரியார்தாசன்**
**தங்கப்பா**
**வலம்புரிஜான்**
**தேவபாரதி**
**கே.பி.அறிவானந்தம்**
**இந்திரன்**
**இளங்கம்பன்**
**அ.சிவசுப்ரமணியம்**
**குன்றத்தூர் ராமமூர்த்தி**
**வஞ்சிபாண்டியன்**
**எழிலானந்தா**

இவர்களின் பங்களிப்போடு
கலை-இலக்கிய-ஆன்மிக-வாழ்வியல்
அறிஞர்களின் படைப்புகளோடு...

**பிரதிக்கு**
**முந்துங்கள்!**

**தனி இதழ்: ரூ.10/- ஆண்டு சந்தா: ரூ.100/-**

முகவர்கள் விண்ணப்பிக்க
மற்றும் விவரங்களுக்கு...

**மலர்மகள் பப்ளிகேஷன்ஸ்**
30, பி.பி.சி. ஆர்ச்ட் கோர்ட்,
திலக் தெரு, தி.நகர், சென்னை-17
தொலைபேசி: 2834 1865





**1000s**
**of Successful Marriages**



**log on, register for free and get Married!**

**www.swayamwara.com**

இன்றே இலவசமாக ரிஜிஸ்டர் செய்து
தங்கள் மனதிற்கினிய வாழ்க்கைத் துணை
நன்றே அமையப் பெற்று மகிழ்வடையுங்கள்

**swayamwara.com**

571 A, Anna Salai, Teynampet (DMS), Chennai - 600 018.
Chennai : 044 - 521 22800, 5529 5050
Bangalore : 98862 66462
24 hours helpline : 044 - 3103 6222

**www.swayamwara.com**

**An Easy, Safe & Secured Internet website to identify your better half !**

www.swayamwara.com / tam / august 2004

# சிறைக்குள் சிறுத்தை

பறவைகள்
அழுவதில்லை!
காரணம்...
சோகத்திலும் அதற்கு
சிறகடித்தே பழக்கம்!

மனிதன்
அழுகிறான்!
காரணம்
ஆனந்தத்திலும் அவனுக்கு
கண்ணீர் வடித்தே வழக்கம்!

மரங்கள்
ஓய்வதில்லை!
காரணம்!
காற்றோடு போராடுவதே
மரங்களுக்கான வாழ்க்கை!

மனிதன்
ஓய்ந்து போகிறான்!
காரணம்
மூன்றில் ஒரு பங்கு ஆயுள்
ஓய்ந்திருப்பதே அவன் வாழ்க்கை:

பாளையங் கோட்டைச் சிறைக்குள்
விறகு வெட்டியான
ஊமைத்துரைக்குள் சிந்தனைகள்
உருண்டு மோதின!

'மனிதனுக்குள்
தத்துவம் வரும் அல்லது
விரக்தி வரும்!

ஊமைத் துரையினுள்
இரண்டு வித உணர்வுகளும்
உருகி ஓடின!...

முகத்தை ரோமங்களும்
மனத்தை கோபங்களும்
முற்றுகையிட்டிருந்தன

நம்பிக்கை ஒரு
சின்ன நூல்தான்
ஆனால் அந்த நூலில் கட்டி

காற்றாடியை அல்ல
கற்பாறையையும் பறக்க விடலாம்!

ஒரு நாள் இரவு!
ராத்திரியின் கறுப்பு மெழுகை
பூமியெங்கும் பூசியது வானம்!

பாளையங்கோட்டைச் சிறையினுள்
ஒரு
பாழடைந்த பறவையாய்
படுத்துக் கிடந்தான் ஊமைத்துரை!

''மருது பாண்டியர்களோடு சேர்ந்து
மீண்டும் படையெடுப்பு''
இந்த தீவிரமே அவனுள்
தீ வளர்த்துக் கொண்டிருந்தது.

சிறைக் கதவின் நாதாங்கியை
பற்பல இரவுகளாய்
பெயர்த்து வைத்திருந்த பலன்
அன்று கனிந்தது!

பணிவதென்பது வேறு!
அடங்குவதென்பது வேறு
வாழ்வதென்பது வேறு
எப்படியாவது
வாழ்வதென்பது வேறு!

வெள்ளைக்காரன் போடும்
இரண்டு வேளை கூழுக்காக
வால் குழைக்க முடியாது!

இன்று
இந்தச் சிறையில் இருந்து
சடலமாகவாவது

# கண்ணாடிக் கல்வெட்டுகள் 10



வெளியேறி விட வேண்டும்!

இரண்டு நாழிகையில்
சேவல் கூவிவிடும்!
இருண்ட விண்கரையில்
விளக்கு ஏறிவிடும்!

ஊமைத்துரை
ஓசைகள் அல்லாத உலகத்தை
பாதங்களுக்குப் பயிற்சி செய்து
பைய பதுங்கி நடந்தான்!

சிலகாலமாய்
ஆலவிழுதுகளை அறுத்தறுத்து
உருவாக்கிய விழுதுக் கயிற்றை
ஒரு பொந்திலிருந்து எடுத்தான்!

பாளையங்கோட்டைச் சிறையின்
பக்கச் சுவர்கள்
இமயத்தைச் சுருக்கி வைத்து
எழுப்பியதாய் நின்றன!

சுதந்திரத் தாகத்தின் முன்
சுவரின் உயரம்
சின்னதாகவே இருந்தது!

**பா.விஜய்**

அஞ்சுபவனுக்கு
தன் கைவிரல் நகமும்
தலைவெட்டும் கத்தி!
துணிந்தவனுக்கு
துப்பாக்கித் தோட்டாவும்
மேல்சட்டைப் பொத்தான்!

ஊமைத்துரை ஒரு
உறுதியோடு வீசினான் விழுதை!
உயிரை விழுதில் பிடித்துக் கொண்டு
விடுவிடுவென ஏறினான்!

அவன் கால்களில் சக்தி தந்தது
குடும்பத்தின் நினைவு!
அவன் கைகளில் வலு சேர்த்தது
தனிதேசக் கனவு!
ஏறி முடித்தான்... உச்சியில்
ஏறி நின்றான்!

அங்கே
ஏறிய சுவரைவிட
இருமடங்கு பெரிய சுவர்
பிரம்மாண்டமாய் நின்றது!

தலைக்குள் ஏதோ
மயக்க நெடி நுழைந்தது!
குழப்பம்
கீழே குதிப்பதா?
திரும்பி விடுவதா?

இதயம்
'செல் செல்' என்றது!
உடம்பு
'நில் நில்' என்றது!

அதே சமயம்
அபாய ஒலியாய்
பேரிகைச் சத்தம் கேட்டது!
குபுகுபுவென காலடிச் சத்தங்கள்

ஆங்கிலேயேப் படையினர்
அடுக்கடுக்காய் சூழ்ந்தனர்!
சிறைத் தலைவன்
ஜெனரல் மார்ஸ் கத்தினான்!

"ஊமைத்துரையை
சுட்டு விடுங்கள்
ஊமைத்துரையை



சுட்டு விடுங்கள்!"

சிற்சில குண்டுகள் சீறின
'ஆ' என்ற அலறல்!
'தொப்' என்ற ஓசை!
'அய்யோ' என்ற கத்தல்!

ஊமைத்துரையின்
தோளைத் துளைத்து
காலைத் துளைத்து
வீழ்த்தின துப்பாக்கிகள்...



உயிர் பிழைத்தாலும்
உணர்வற்றுக் கிடந்தான்
ஊமைத்துரை!

அதே நேரம்
கொத்தமரம் ஊரின்
காளிகோயில் சூலத்தில்
கட்டைவிரல் கீறி
சபதமிட்டான் புலிகுத்தியான்!

"ஊமைத்துரை ராசாவ
மருதுபாண்டியர் கிட்ட
மண்ணுக்குள்ள போனாலும்
சேர்ப்பேன் தாயே!"

புலிகுத்தியானோடு பல
வீர இளைஞர்களும்
கோடாலிகளோடு குவிந்தனர்!

கொத்தமரம் இளைஞர்கள்
கொள்ளை வெறியோடு
நடந்தார்கள்!

பாளையங்கோட்டைச் சிறையை
இரு முனை தாக்குதல் செய்து
இறந்து போகவில்லை அவர்கள்!

யுத்தத்தில் சரியான யுத்தம்!
எதிரியின் பலவீனத்தில்
மோதும் யுத்தமே!
பாளையங்கோட்டைக்குள்
கைதிகள் எண்ணிக்கைவிட
காவலர்கள் எண்ணிக்கை அதிகம்

புலிகுத்தியான்
புத்தி கூர்மையானவன்!
எப்போதுமே மனசின் வேகத்தை
இழப்பவன் சோர்வடைகிறான்.

அடக்குபவன் தெளிவடைகிறான்!
பாதுகாப்பவன் பலனடைகிறான்!

பாளையங்கோட்டைச் சிறைப்
பகுதிகளில் சுற்றி
விறகு வெட்டத் துவங்கினார்கள்
கொத்தமரத்துக் காரர்கள்!

மெதுவாய் மெதுவாய் வெட்டி
பாளையங்கோட்டை முழுதும் பழகி
அசல் விறகு வெட்டிகளாய்
அடையாளப்படுத்திக் கொண்டனர்!

சில மாதங்களில்
சிறைக் காவலர்களின் சிநேகிதத்தை
சிறைப் பிடித்தார்கள்.

சிறைக்குள் உள்ள
தேக்கு ... ஈட்டி மஞ்சக் கடம்பா
ஜாதி மரம் வெட்ட
விண்ணப்பம் போட்டனர்!

ஒரு காலையில்
ஜெனரல் மார்ஸை சந்தித்தான்
புலிகுத்தியான்!

புலிகுத்தியானுக்கும்
கொத்தமர இளைஞர்களுக்கு
சிறைக் காவலர்கள் சிலர்
நட்பிற்கு சான்றிதழ் தந்தனர்!

ஜெனரல் மார்ஸ்
பல மாதங்கள் இழுத்த பின்
நான்கு நபர்களுக்கு மட்டுமே
உள் அனுமதி தந்தான்!

சில நிபந்தனைகளோடு!...
உள்ளே செல்வோர்
நான்கு பேரும் மட்டுமே.
வெட்டும் மரத்தில்
பாதிப்பங்கு சிறைச்சாலைக்கு.
பொழுது இருட்டுவதற்குள்
புறப்பட்டு விடவேண்டும்!

கைதிகள் மரம்பிளக்கும் பகுதிக்கு
கண்டிப்பாய் போகக் கூடாது!

ஊமைத்துரைக்கு விடுதலை
உறுதி உறுதி என்று
உதட்டுக்குள் உருமிக்கொண்டு
புலிகுத்தியான் தன்னோடு
நால்வராகி சேர்த்துக் கொண்டு

பாளையங்கோட்டைச் சிறையினுள்
பவ்வியமாய் நுழைந்தான்!

(வருவான்)



# அழகூட்ட செலவு 25,000 ரூபாய்!

நட்சத்திரங்களுக்கு அரிதாரம் பூசும் அனுபவசாலி, மேக்-அப் மேன் நெல்லை வி.சண்முகம். வயது நாற்பத்து எட்டு ஆகிறது. நூற்றைம்பது படங்களுக்கு மேல் பணியாற்றியிருக்கிறார். 'வைதேகி காத்திருந்தாள்' படத்தில் ஆரம்பித்து, ரமணா, ரோஜாக் கூட்டம், ஆனந்தம், காக்க காக்க வரை, இருபது வருட அழகூட்டல்...

''மேக்-அப் தேவையில்லை என்று ஒரு சில டைரக்டர்கள் சொல்லிக் கொண்டிருந்தாலும், இன்று மேக்-அப் வேண்டாம் என்று சொல்லி, அதனைப் புறக்கணிக்கும் துணிச்சல் சினிமா உலகுக்கு வரவில்லை. அப்படி வரவும் வராது'' என்கிறார் சண்முகம். அவர் மேலும் கூறியவை:

''அந்தக் காலத்தில், மேக்-அப் போட்டால், அந்தப் பூச்சு பளிச்சென்று தெரியும். ஆனால் இன்று, மேக்-அப் போட்டிருப்பதே தெரியாதபடிக்கு, மிகவும் இயற்கையாக மேக்-அப் போட வேண்டியிருக்கிறது. இது பெரிய சவால் என்றுதான் சொல்ல வேண்டும்.

''பொதுவாக படம் முழுக்கவே மேக்-அப் மேனுக்கு வேலை உண்டு என்றாலும், பாடல் காட்சிகளின்போது தான், பெண்டு கழண்டுவிடும். அப்போது மட்டும் நாலைந்து உதவியாளர்கள் தேவைப்படுவார்கள்.

> ★★
>
> **ஹீரோக்களுக்கு அரை மணி நேரத்தில் மேக்—அப் போட்டு முடித்து விடலாம். ஹீரோயின்கள் என்றால், இரண்டு மணி நேரமாவது ஆகும்.**
>
> ★★

காலையில் எட்டுமணிக்கு பாடல் காட்சி ஷூட்டிங் என்றால், நானும் உதவியாளர்களுமாக, காலையில் ஐந்து மணிக்கெல்லாம் மேக்-அப் போட ஆரம்பிக்க வேண்டும். சுமார் இருபது இருபத்தைந்து ஜூனியர் ஆர்டிஸ்ட்களுக்கு மேக்-அப் போட்டு முடித்தால், ஹீரோ ஹீரோயின் வர, அவர்களுக்கு மேக்-அப் ஆரம்பமாகும்.

ஹீரோக்களுக்கு அரை மணி நேரத்தில் மேக்-அப் போட்டு முடித்து விடலாம். ஹீரோயின்கள் என்றால், இரண்டு மணி நேரமாவது ஆகும்! பான்கேக், பான் ஸ்டிக், பவுடர், லிப்ஸ்டிக் எல்லாம் போட்டு, புருவம் எழுதி, கண்







இமைகளுக்குக் கருமை தீட்டி, ஷேடோ தீட்டி, அதன்பின் விக் பொருத்த வேண்டுமானால் பொருத்தி, அல்லது ஹேர் டிரஸ்ஸிங் பண்ணி முடிப்பது என்றால், சுலபமான காரியமா என்ன?

அந்தக் காலத்தில் மேக்-அப் சாமான்கள் எல்லாம் ஃபிலிம் சேம்பர் மூலமாகவே சப்ளை செய்வார்கள். கம்பெனி லெட்டர் பேடில், மேக்-அப் மேன் மொத்தப் படத்துக்கும் தேவையான மேக்-அப் சாதனங்களின் லிஸ்ட் போட்டு, தயாரிப்பாளரிடம் கையெழுத்து வாங்கி, சேம்பரில் கொடுத்து விட்டால், எல்லா ஐட்டங்களையும் சப்ளை செய்து விட்டு, கம்பெனிக்கே பில்லை அனுப்ப, அவர்கள் செட்டில் செய்து விடுவார்கள்.

"ஆனால் நாளாவட்டத்தில் இந்த சிஸ்டம் மாறிவிட்டது. கம்பெனிகளே தங்கள் தேவைக்கேற்ப நேரடியாக வாங்க சௌகரியமாய், ஏராளமான கடைகள் வந்து விட்டன. மேக்-அப் மேன்களே அயல் நாடுகளுக்குப் போய், மேக்-அப் ஐட்டங்களை வாங்கிக் கொண்டு வருவதும் உண்டு.

ஹீரோ - ஹீரோயினுடன் இருபத்தைந்து ஜூனியர் ஆர்டிஸ்டுகள் பங்கேற்க, ஐந்து நாட்களில் ஒரு பாடல் காட்சி படம் பிடிக்கப்படுகிறது என்றால், அதற்குக் குத்து மதிப்பாக மேக்-அப் செலவு, இருபத்தையாயிரம் ரூபாய் ஆகும்.

இப்போது படங்களில் பெரும் அளவில் சண்டைக் காட்சிகளுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. இதிலும் மேக்-அப் மேனின் பங்கு அவசியமாகிறது. உதாரணமாக, அண்மையில் பெருமளவில் வெற்றி பெற்ற 'காக்க காக்க' படத்தில் சூர்யாவுக்கு, போட்ட மேக்-அப், அலாதியானது.

இப்போதெல்லாம் சண்டைக்காட்சிகளில் ரத்தம் சகஜமாகிவிட்டது. அதற்கு இறக்குமதி செய்யப்பட்ட செயற்கை ரத்தம்தான் பயன்படுத்தப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? இந்த திரவ செயற்கை ரத்தம் தவிர, உறைந்து போன ரத்தத்தைக் காட்ட, சிவப்பு நிற ரத்தப் பசையைப் பயன்படுத்துகிறோம்!"

- மிஸ்டர்



''என்னப்பா...
உன் மனைவி
'டிபனுக்கு நேரமாச்சு;
நேரமாச்சு'ன்னு
வருந்தி வருந்தி
கூப்பிடுறாளே?
காதுல விழலையா?''

''ஹி...ஹி... அது
டிபன் சாப்பிடறதுக்கு
இல்லே... டிபன்
பண்ணறதுக்கு!''

- வசந்தி
வள்ளுவன்



''பிறக்கப் போற பேரனுக்காக
தலைவர் இப்பவே சீட்
வாங்கிட்டார்...!''

''பள்ளிக்கூடத்திலயா?''

''இல்லை அமைச்சரவையில்!''

- எஸ். தமிழ்மணி



''இந்த ஆடம்பரம்
குடும்பத்துக்கு ஆகாது
கமலா!''

''ரொம்பத்தான்
குதிக்காதீங்க... வீட்டுக்கு
வந்த என் தோழிகளுக்கு
ஆளுக்கு ஒரு டம்ளர்
தண்ணி கொடுத்து
உபசரிச்சதுக்கு!''

- உ. ராஜாஜி


"உங்க சுயசரிதையை ஏன் தலைவரே இன்னும் எழுதாம இருக்கீங்க?"

"நமக்கு அவ்வளவு கற்பனை வளம் போதாதுப்பா!"

- உ. ராஜாஜி



# டிபனுக்கு நேரமாச்சு!



"நாம பத்து வருஷமா காதலிக்கறது ரெண்டு பேருக்குப் புடிக்கல!"

"யார் அந்த ரெண்டு பேர்?"

"வேற யார்? நீயும் நானும்தான்!"

- அம்பை தேவா




"என்னது, கம்ப்யூட்டர் டெக்னாலஜியைப் பயன்படுத்தி ஐம்பது கோடியை நீ மோசடி செய்ததுக்கு உன் அப்பாதான் காரணமா?"

"ஆமா! சக்தியை நம்பாதே, புத்தியை நம்புன்னு அவர்தான் சொன்னாரு..."

- உ. ராஜாஜி

# 3. போர் வாள்

விஷ்வக்ஸேனன்



இன்பமும் துன்பமும் கலந்ததுதான் வாழ்க்கை என்று வேதாந்தமும், சித்தாந்தங்களும் சொல்கின்றன. ஆனால், துன்பங்களை அனுபவிக்கவும், சோதனைகளை எதிர்கொள்ளவும் ஆண்டவன் ஒரு சிலரை மட்டுமே தேர்ந்தெடுக்கிறான். அது ஏன் என்ற கேள்விக்கு எந்த வேதாந்தமும், சித்தாந்தமும், தத்துவமும், புத்தகமும், ஞானிகளும், மேதைகளும் சரியான பதில் கூறவில்லை. விதியென்றும், பூர்வ ஜென்மப் பலனென்றும் வாதாடினாலும், அவை நம் சிந்தைக்கும், செயலுக்கும் அப்பாற்பட்டவை என்பதால், அறிவு பூர்வமாக அவற்றை ஏற்கவும் முடியவில்லை.

காலங்களைக் கடந்து மனிதனுக்கு பதில் கிடைக்காத கேள்விகளில் இதுவும் ஒன்று.

ஆனால் அப்படி நேரக்கூடிய துன்பங்களையும், சோதனைகளையும் கடந்து வாழ்வில் உயர்பவர்கள், சரித்திரம் படைக்கிறார்கள். மற்றவர்கள் அவற்றைப் படிக்கிறார்கள், அவ்வளவே. ஆண்டவனின் அந்தத் தேர்வு, படைப்பதையும், படிப்பதையும் நிர்ணயிக்கிறது.

பராந்தகன், அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவனாகத்தான் இருக்க வேண்டும்.

வண்டாழஞ்சேரியின் எல்லையை நெருங்கியதும், ஊருக்குள் தீ பெரிதாக உயர்ந்து எழுவதையும், அதுவும் தன் இல்லம் இருந்த பகுதியாகத் தெரிவதையும் கண்டவன், பதற்றத்துடன் புரவியைப் பாய விட்டான். பராந்தகனையும், சோழ வீரர்களுடன் வந்த விக்கிரமவரையரையும் கண்ட ஊர் மக்கள், பெரும் கூச்சலுடன் சூழ்ந்து கொண்டனர்.

''படைத்தலைவரே... படைத்தலைவரே.. பராந்தகா'' என்று கூக்குரல்கள் மாறி மாறி ஒலித்தனவேயொழிய, எவரும் தெளிவாகப் பேச இயலவில்லை. கீழே குதித்து கூட்டத்தை விலக்கி, தன் இல்லமிருந்த இடத்தை நெருங்கிய பராந்தகன் திக்பிரமை பிடித்து நின்றான்.

அவனது இல்லம் தரைமட்டமாகிக் கிடக்க, தணலும், நெருப்பும், புகையும் சூழ்ந்து, நெருங்க விடாமல் அடித்தன. ஊர் மக்களுடன் அக்கம் பக்கத்து ஊர்களைச் சேர்ந்தவர்களும் தீயை அணைக்கப் போராடிக் கொண்டிருந்தனர்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு



# மகுட வைரம்

முதியவர் ஒருவர் பராந்தகனை நோக்கி வந்தார்.

அவரைக் கண்டதும் பாய்ந்த பராந்தகன், "தலைவரே, என்ன நேர்ந்தது? யார் தீயிட்டது? என் தந்தை எங்கே சொல்லுங்கள், ஊர்த்தலைவரே, சொல்லுங்கள்" என்று அந்த முதிய மனிதரைப் பிடித்து உலுக்கினான்.

பராந்தகனின் தோளில் படைத் தலைவரின் வலியகரம் அழுத்தி, அவனை நிதானப்படுத்தியது. "பராந்தகா, பதற்றப் படாதே. என்ன நேர்ந்தது என்பதை அவரே கூறட்டும்" என்றார்.

அந்த முதியவரின் குரல் துக்கத்தில் விம்மி வெடித்தது. "பிரபு, இன்று பிற்பகலில் ஐம்பதுக்கும் குறையாத ராஷ்டிர கூட வீரர்கள் வந்தார்கள். பராந்தகனைப் பற்றி விசாரித்தார்கள். விஷயம் இன்னதென்று அறியாத நாங்கள், அவர்களை பராந்தகனின் தந்தையிடம் அழைத்துச் சென்றோம்."

"பிறகு?"

"பிறகு, பராந்தகன் ஏதோ பொன்னாரத்தை பல்லவச் சக்கரவர்த்தினியிடமிருந்து களவாடி விட்டதாகவும், அந்த ஆரம் இந்த இல்லத்திலிருப்பதாகவும் கூறி, எல்லாவற்றையும் தலைகீழாகப் புரட்டினார்கள். பராந்தகனின் தந்தையும், நாங்களும் எவ்வளவோ தடுக்க முயன்றோம். முடியவில்லை."

"பின்பு என்ன ஆயிற்று?"

"பராந்தகனின் தோழர்கள் ஓடி வந்தனர். அவர்கள் ராஷ்டிரகூடர்களைத் தடுக்கும் முயற்சியில் சண்டை மூண்டுவிட்டது. பயிற்சி பெற்ற அந்தப் போர் வீரர்களை நம் கிராமத்து இளைஞர்கள், எத்தனை நேரம் தாக்குப் பிடிக்க முடியும்? பராந்தகனின் தோழர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களைக் காக்க முயன்ற பராந்தகனின் தந்தையும் கொல்லப்பட்டார். அவர்கள் மீண்டும் வருவதாகவும், பராந்தகன் வந்தால் பிடித்து ஒப்படைக்க வேண்டுமென்றும் அச்சுறுத்திவிட்டு, புறப்படும் முன் இல்லத்திற்குத் தீயை வைத்து விட்டுச் சென்று விட்டார்கள்."

விக்கித்து நின்றிருந்தான் பராந்தகன். துக்கத்தினால் வார்த்தையேதும் வராமல் கண்களில் நீர் வழிய நின்றவன் சித்தத்தில், ஏதோ பளிச்சிட்டது. அடுத்து எல்லையற்ற கலவரம் அவன் முகத்தில் பரவியது.

குரலில் முன்னைவிட அதிகப் பதற்றம் ஒலிக்க, "ஊர்த் தலைவரே, கார்குழலி

எங்கே? 'எங்கே என் உடன்பிறந்தவள்? அவளுக்கு என்ன நேர்ந்தது?'' என்றவனின் குரல் உயர்ந்து ஒலித்தது.

முதியவர் பதிலேதும் கூறவில்லை.

அருகில் நின்ற பெண்மணி ஒருவர் பதிலளித்தாள். ''பராந்தகா, அந்த ராட்சதர்கள் வருவதற்கு வெகு நேரம் முன்னதாகவே அவள் ஊரெல்லையிலிருக்கும் ஆலயத்திற்குச் சென்றாள். பின்பு திரும்பவேயில்லை. நாங்கள் சென்று தேடியதில், ஆலயத்தின் அருகில் அவள் கொண்டு சென்ற மலர்க் கூடையும், உடைந்த வளையல்களும்தான் கிடைத்தன. உடன் இதுவுமிருந்தது'' என்றவள், மலர்க் கூடையை நீட்டினாள். கூடைக்குள் உடைந்த வளையல்களுக்கிடையே குருதியில் நனைந்த துணியொன்றும் கிடந்தது. பார்த்தவுடன் அது கார்குழலியின் மேலாடைதான் என்பது புரிந்தது பராந்தகனுக்கு. அவன் தலைக்குள் ஆயிரம் இடிகள் சேர்ந்து ஒலித்தன. அவன் விழிகளுக்கு முன்பாக கரிய திரையொன்று விழுந்து பார்வையை மறைத்தது. கால்கள் துவண்டு, நிற்கச் சக்தியற்று, அப்படியே மயங்கிச் சரிந்தான் பராந்தகன்.

படைத் தலைவரின் கரங்கள் அவனைத் தாங்கி, சோழ வீரர்களிடம் ஒப்படைத்தன.

தணிந்து கொண்டிருந்த நெருப்பையும், வெடித்த மரக்கட்டைகளையும், புகைக்கு நடுவே, இல்லத்தின் மறுபுறத்தில் வரிசையாகக் கிடத்தப் பட்டிருந்த உடல்களையும் வெறித்துப் பார்த்தபடி, மெல்ல உலவினார் படைத் தலைவர். அதி தீவிர சிந்தனை அவர் முகத்தில் படர்ந்து கிடந்தது.

முதியவர் படைத்தலைவரை நெருங்கி, ''பிரபு, இங்கு மட்டுமல்ல, சோழ நாட்டின் பல பகுதியிலும் இதே கதைதான். செங்கட் சோழருக்குப்பின் சோழ நாட்டில் அமைதியே அற்றுப் போய் விட்டது. குடந்தையிலும் நேற்று இப்படி நடந்ததாக அறிந்தேன். பல்லவச் சக்கரவர்த்தியின் பெயரால் ராஷ்டிரகூடர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கு முடிவே கிடையாதா? நம் சோழ நாட்டின் வீரர்கள் அனைவரும் எங்கே தொலைந்து போனார்கள்? இதற்கொரு விடிவே கிடையாதா?'' ஆவேசத்துடன் அவர் கேட்ட கேள்விகள், சுற்றி நின்ற அத்தனை முகங்களிலும் பிரதிபலிப்பதைக் கண்ட விக்கிரமவரையர், அவை அந்த கிராமத்து மக்களின் குரல்கள் மட்டுமல்ல, சோழ நாட்டு மக்கள் அனைவரின் குரல்கள் என்பதைப் புரிந்து கொண்டார்.

முதியவரையும் மக்களையும் ஏறிட்ட படைத்தலைவரின் முகத்தில் இன்னதென்று விளங்காத ஒளியொன்று பரவியது. அடுத்து அவர் குரல் உறுதியுடன் ஒலித்தது. ''ஊர்த் தலைவரே, ராஷ்டிரகூடரை விரட்ட ஒரு வழி இருக்கிறது. அதைக் கூறுமுன்பாக, உள்ள நிலையைச் சற்று புரிந்து கொள்ளுங்கள். பெண்ணாகடத்துப் போரில் நம் மன்னர் மட்டும் மறையவில்லை. நம் சோழ வீரர்களில் முக்காலுக்கும்மேல் இறுதி மூச்சுவரை போராடி, வீர மரணம் அடைந்தார்கள். இருக்கும் சொற்ப வீரர்களுடன் இன்னும் படை திரட்டி,



''மேற்படிப்பு படிக்க வைக்கிற செலவை, நான் மிச்சப்படுத்தணும்னு உனக்கு எப்படிடா தோணுச்சு?''

''சும்மா சும்மா நக்கல் பண்ணாதேப்பா, பிளஸ் டூவில் நான் ஃபெயிலாயிட்டதை!''

- உ. ராஜாஜி

"படத்துல வன்முறைக் காட்சி தாராளமா இருக்கட்டும்னு திரைக்கதை எழுத்தாளரிடம் சொன்னது தப்பாப்போச்சு...!"

"ஏன், என்னாச்சு?"

"ஸ்டோரி டிஸ்கஷன்போதே தயாரிப்பாளரை, ஹீரோ நிஜ துப்பாக்கியால் சுட்டுட்டார்!"

- வி. கிருஷ்ணகுமார்



நாம் ராஷ்டிரகூடரின் பெரும் படையை விரட்ட, பல காலம் பிடிக்கும். படை திரட்ட, தேவையான பொருளும் நம்மிடம் குறைவாகவே இருக்கிறது."

முதியவர் வேகத்துடன் இடை மறித்தார். "அப்படியானால் இந்த நிலை நீடிக்க வேண்டியதுதானா?"

படைத்தலைவரின் கரம் உயர்ந்து அவரைத் தேக்கியது. "முதியவரே, சற்றுப் பொறுங்கள். நான் தனிப்பட ஓரளவிற்கு வீரர்களைத் திரட்டியிருக்கிறேன். நாகையிலிருந்து புரவிகளையும் தருவித்திருக்கிறேன். ஆனால் அவை ராஷ்டிரகூடரை எதிர்க்கப் போதாது."

"நாங்கள் இளைஞர்களை திரட்டித் தருகிறோம். தேர்களுக்கும், பொதி வண்டிகளுக்கும், அச்சுக்கள் செய்யும் பட்டறைகளிலிருந்து ஆயுதங்கள் செய்து தருகிறோம். நீங்கள் இளைஞர்களுக்குப் பயிற்சியளித்து வீரர்களாக மாற்றுங்கள்."

"அவையும் போதாது"

"இன்னும் என்ன தேவை?"

"போரைத் தலைமை தாங்கி நடத்தவும், மக்களைத் திரட்டவும் ஒரு மன்னன் தேவை"

"ஏன், தாங்களே போரை நடத்தக் கூடாதா?"

"நடத்தலாம். வீரர்கள் என்னுடன் வரலாம். ஆனால் மக்களின் ஆதரவையும், எழுச்சியையும் மன்னனாக இருப்பவனால் எளிதில் திரட்ட முடியும். தவிர, என் உயிர் சதா அபாயத்திலிருக்கிறது. படை திரட்டும் முயற்சியில் என் உயிர் எப்போது வேண்டுமானாலும் பறிக்கப்படலாம். என்னை எந்த நிலையில் கண்டாலும் கொன்றுவிட, ராஷ்டிரகூடர்களுக்கு உத்தரவிருக்கிறது. செங்கட் சோழரின் புதல்வர்கள் சிறுவர்கள். அவர்கள் என் பாதுகாப்பிலிருக்கிறார்கள்."

முதியவரின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. வெகு நேரம் மௌனமாக நின்றார் அவர்.

தீ முழுமையாக அணைந்து, புகையும், வெடித்த மரங்களின் துகள்களும் காற்றில் பரவின. அக்கம் பக்கத்து கிராமத்து மக்களும் திரண்டு நின்றார்கள்.

"ஒரு வழியிருக்கிறது படைத்தலைவரே" முதியவரின் குரல் திடீரென ஒலித்தது. சட்டென்று அமைதி நிலவியது அங்கே.

படைத்தலைவரின் முகத்தில் முறுவலொன்று தெரிந்தது. முதியவர் கூறப்போவதை அவர் எதிர்பார்த்ததாகத் தோன்றியது.

முதியவர் தொடர்ந்தார். "படைத்தலைவரே, நமது செங்கட் சோழரின் மகள், நம் இளவரசியாரை பாண்டிய மன்னர் ஜடில பராந்தகர் வரகுண பாண்டியருக்கு மணம் செய்து கொடுத்து ஆண்டுகள் பல ஆகிவிட்டன."

"சொல்லுங்கள் மேலே"

"பாண்டிய வரகுணர் பல்லவ சக்கரவர்த்திக்கு எதிராக மீண்டும் படையெடுக்க, படை திரட்டிக் கொண்டிருப்பதாகக் கேள்வி. அவரது உதவியை நாம் பெற்றால், இப்போதுள்ள நிலைமைக்கு விடிவு பெற வாய்ப்பிருக்கிறதல்லவா?"

படைத்தலைவரின் கூர் விழிகள் சுற்றி நின்ற மக்களை ஒருமுறை அலசியது. முதியவர் கூறியதை அவர்கள் ஏற்றுக் கொள்வதை, அவர்களின்

முகங்கள் பிரதிபலித்தன.

அடுத்து ஒலித்த படைத்தலைவரின் குரலில் பெரும் அமைதி தொனித்தது. "முதியவரே, சோழ நாட்டு மக்களே, நானும் இதே முடிவுக்கு வந்து பல நாட்களாகின்றன. ஆனால் சோழ நாட்டு மக்கள் இதை ஏற்பார்களா என்ற சந்தேகமுமிருந்தது. இதன் விளைவுகள் என்னவென்பதை சிந்தித்தீர்களா?"

கூட்டம் மௌனம் சாதித்தது.

"கவனமாகக் கேளுங்கள். பாண்டியரின் உதவி பெற்றால், நம் சோழ நாட்டில் விடிவு ஏற்படுவது சாத்தியம் தான். ஆனால் அதன் பின்பு, பாதுகாப்பிற்காகவும், வலிமை மிகுந்த மன்னனும், படையும் பெறும்வரை, நாம் பாண்டியரின் ஆதிக்கத்தை ஏற்க நேரிடும். ராஷ்டிரகூடரின் ஆதிக்கத்தைவிட, தமிழ் மன்னரின் ஆட்சி மேல்தான். அதிலும் வரகுண பாண்டியர் தர்மம் தவறாதவர். உங்கள் சம்மதம் இருக்குமானால் இதற்கான ஏற்பாடுகளில் இறங்கலாம்."

"சம்மதம், சம்மதம்" என்று கூட்டம் குரல் கொடுத்தது.

"படைத்தலைவரே, நீங்கள் பாண்டியரைக் கண்டு ஆவன செய்யுங்கள்" என்றார் முதியவர்.

"ஊர்த் தலைவரே, எதற்கும் மற்ற ஊர்களுக்கும் தகுந்தவர்கள் மூலம் செய்தியனுப்பி சம்மதம் பெற்றுவிடுங்கள். ஆனால் நமது ஏற்பாடுகள் அனைத்தும் ரகசியமாகவே இருக்கட்டும்" என்ற படைத்தலைவர், இறந்தவர்களின் கிரியைகளை கவனிக்கவும், எரிந்து போன இல்லங்களுக்குப் பதிலாக புதிய இல்லங்கள் கட்டவும் உத்தரவிட்டார். உரிய பொருள்களையும், பொற்காசுகளையும் தமது சேமிப்பிலிருந்து வழக்கவும் தம் வீரர்களைப் பணித்தார்.



எரிந்து தணிந்து கொண்டிருந்த இல்லங்களினூடே மெல்ல நடந்தவர், பராந்தகனின் இல்லத்தினருகே சற்று நின்றார்.

எஞ்சிய பொருள்கள் தீயிலிருந்து மீட்கப்பட்டு அடுக்கப்பட்டிருந்தன. பாத்திரங்களும், சிறிது துணிமணிகளையும் அடுத்துக் கிடந்த மரச்சாமான்களிடையே, படைத்தலைவரின் கவனத்தை ஈர்த்தது ஒரு நீண்ட மரப்பேழை. சற்று நெருங்கியவர், பாதிவரை எரிந்து கிடந்த அந்தப் பேழையினுள், நேர்த்தியான வேலைப்பாடுடன், பழுப்பேறிக் கடந்த மற்றொரு பேழை இருப்பதைக் கண்டார்.

அந்தப் பேழையை குனிந்து எடுத்தவர், அதன்மீது தெரிந்த சின்னங்களையும், வேலைப்பாடுகளையும் கண்டு பிரமித்தார். அவர் கூர் விழிகளில் பிரமிப்புடன் இலேசான சந்தேகச் சாயையும் படர்ந்தது. வெகு கவனத்துடன் அதைத் தாங்கி, கீழ்ப்புறத்திலிருந்த கொக்கியை விடுவித்தவர், மூடியை மெல்லத் திறந்தார்.

உள்ளே சற்று அகலமான, கனத்த, நீண்டு வளைந்த பெரும் வாளொன்று பளபளத்துக் கிடந்தது.

அந்த வாளைக் கண்ட படைத்தலைவரின் முகத்தில் பிரமிப்புடன் பெரும் கனவுச் சாயை பலமாகப் படர்ந்தது.

(தொடரும்)

# நீங்கள் கேட்டவை-தராசு



* கனவு + கத்திரி!

● எம்.எம்.இ. மலையன், அக்ராவரம்

? வழக்குரைஞர்களின் நீதிமன்றப் புறக்கணிப்பு, உண்ணாவிரதப் போராட்டம் போன்றவற்றுக்குத் தடைவிதித்து சென்னை உயர்நீதி மன்றம் சட்டத்திருத்தம் செய்துள்ளதை ஏற்றுக் கொள்ள முடிகிறதா?

! நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள் ஏற்க மறுத்து, மறுபடி நீதிமன்றப் புறக்கணிப்பு, வேலை நிறுத்தம் என்று ஆரம்பித்திருக்கிறார்களே!

* பிரசாரம் + பத்திரிகைகள்!



● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி

? பல இயக்குனர்கள் தங்கள் படங்களில் அடல்ட்ஸ் ஒன்லி காட்சிகளைச் சேர்க்க ஆர்வம் காட்டி வருகின்றனரே..?

! அவர்களுள் லீடராகத் தெரிவது 'நியூ' பட இயக்குனர் எஸ்.ஜே. சூர்யா! இருக்கிற ஆபாசம் போதாதென்று, அப்படத்துக்கு மேலும் ஒரு மலினமான பாடல் காட்சியைப் படம்



* அதிர்ச்சி + அவமானம்!

## சிபுசோரன் வசமாக மாட்டிக் கொண்டாரே?

பிடித்துச் சேர்க்க அவர் முற்பட, அந்த ஒட்டுக் காட்சியை சென்ஸார் நிராகரித்துவிட்டது. அப்படியானால் அவருக்கு அந்தக் காட்சியில் எத்தனை 'உயர்ந்த' நோக்கம் இருந்திருக்க வேண்டும்!

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1

? மத்தியில், தமிழ்நாட்டு அமைச்சர்கள் பன்னிரண்டு பேர் இருந்தும் வறட்சி மாநிலங்கள் பட்டியலில் தமிழகம் சேர்க்கப்படாதது, அதிர்ச்சியும் அவமானமும் தருவதாக ஜெயலலிதா சொல்கிறாரே...?

! மத்திய அமைச்சர்கள், தமிழர்களானாலும்

தாங்கள் மத்திய அமைச்சர்கள் என்பதை மறக்கவே கூடாது. இந்தியாவை ஒட்டு மொத்தமாகப் பார்த்துத்தான் செயல்பட வேண்டும். தமிழகத்தைவிட அதிக வறட்சி, அதிக வெள்ளம் அல்லது அதிக வறுமை உள்ள மாநிலங்கள் இருப்பின், அவற்றுக்கு முன்னிடம் தருவது அவர்களது முழுமுதற் கடமை.

● க.நா. இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

*? வசூலிக்கப்படாத வருமான வரி ரூபாய் 87 ஆயிரம் கோடி நிலுவையில் உள்ளதாமே...?*

! 1) வரி விகிதங்கள் குறைய வேண்டும்; வரி செலுத்துவோர் அதிகமாக வேண்டும். 2) வரி வசூல் ஜரூராக வேண்டும். 3) வரி ஏய்ப்புக்குத் தண்டனை கடுமையாக வேண்டும் - தேசத் துரோகமாகக் கருதப்பட்டு, அதற்கேற்ப தண்டனை வழங்குதல் அவசியம். 4) வரி கணக்கீடு - விதி முறைகள், மிக மிக எளிமையாக்கப்படல் வேண்டும். இவற்றைச் செய்தால், வசூலிக்கப்படாத வருமானவரி என்பது, ரூ. 87 ஆயிரம் கூட இராது.

● ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன்புதூர்

*? குப்பைத் தொட்டியில் வாக்காளர் அடையாள அட்டைகள் குவித்து கிடந்ததைக் கவனித்தீர்களா?*

! இதென்ன அதிசயம்? தேர்தல் முடிந்ததும் வாக்காளர்களையே நமது ஆட்சியாளரும் அதிகாரிகளும் குப்பைத் தொட்டியில்தானே போடுகிறார்கள்!

● டி. சுப்ரமணியன், மேலையூர்

*? உலகிலேயே மிகவும் வலிமையானது எது? ஏன்?*

! உண்மை. அதற்கு மாற்று என்பதே இல்லாததால்.

● எம்.சிவகுருநாதன், தஞ்சை

*? கோயபல்ஸ் தத்துவத்தின் வாரிசு கருணாநிதி; இதைப் பத்திரிகைகள் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறாரே தமிழக முதல்வர்?*

! மேடம் மேக்யவெலி பேசுவதற்குக் கேட்பானேன்!

● கு. அருணாசலம், தென்காசி

*? ஈராக்கைத் தனிமைப்படுத்துவதற்காக தீவிரவாதிகள் நடத்தும் தலைகொய்வு அட்டூழியத்துக்குத் தீர்வுதான் என்ன...?*

! பயங்கரவாதம் கடுமையான கண்டனத்துக்குரியதுதான்; பயங்கரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் ஒன்று பட்டுச் செயலாற்றுவதும் அவசியம்தான். ஆனால், இதே உலகத் தலைவர்கள், பயங்கரவாதம் எதனால் உருவாகிறது என்பதையும் யோசிக்க வேண்டும். தங்களிடம் தவறு இருந்தால் திருத்திக் கொள்ள துணிவு வேண்டும். காரணத்தைக் களையாதவரை பயங்கரவாதம் திரும்பத் திரும்பத் தலையெடுக்கும்.

● ச.ஆ. கேசவன், இனாம்மணியாச்சி

*? பத்திரிகையை காசு கொடுத்து ஒருவர் வாங்க, பத்துப் பேர் 'ஓசி'யில் படிப்பதால்தான் அதை நடத்துவோருக்குக் கட்டுப்படி ஆகாமல் போகிறது இல்லையா...?*

! நன்றி சார், நன்றி! நீங்க ஆசிரியரா இருக்கற பள்ளியில பொது அறிவு விஷயங்களோட இதையும் சொல்லிக் கொடுங்க.

● வே. முருகேசன், சென்னை - 88

*? அரசியல்வாதிகள் நடைப் பயணம் மேற்கொள்வதால் ஏதாவது பிரயோ*

**□ ரூ.100 பரிசு பெறுவார் :**
**கே. மஹமுதா பீவி,**
**30ஏ, அசன் தரிகன் வீதி,**
**மேலபாளையம்,**
**திருநெல்வேலி - 627 005**

**★ ரூ. 50 பரிசு பெறுபவர் :**
**எச். ஆண்டனி தமிழரசன்,**
**அறை எண் 156, ஷீரிடி பாபா சாவ்ல், இந்திரா நகர், தாராவி,**
**மும்பை - 400 017.**

ஜனம் உண்டா?

! தேச நலனுக்காக நடைப் பயணம் சென்றவர்கள் மறைந்துவிட்டார்கள். தற்போதைய அரசியல்வாதிகளின் நடைப்பயணம் நன்றாகக் குறைக்க உதவுகிறது, அவர்களின் கொலஸ்ட்ராலை!

● கே. தெய்வசிகாமணி, சென்னை - 30

? உலகில் தலைசிறந்த பல்கலைக் கழகங்கள் பட்டியலில் இந்தியாவில் ஒன்றுகூட இல்லை என்ற செய்தி தெரியுமா...?

! நாலந்தாவும் காஞ்சியும் உலக முன்னோடிகளாக உருவான தேசத்தில், இன்று அந்த இடங்கள் வெற்றிடங்களாகியிருப்பது மிகப் பெரிய துயரமே. காரணங்கள் ஆழமான ஆராய்ச்சிக்குரியன. உலகளவில் உயர்கல்வி என்பது, சிந்தனை சார்ந்ததாக உருமாறிவிட்ட நிலையில், மனனம் செய்யும் முறையாகவே அது இங்கு நீடிப்பது ஒரு காரணம்.

● கே.மஹமூதா பீவி, திருநெல்வேலி

? 'வெளிநாடு செல்லும் என்னை வழியனுப்ப அமைச்சர்கள் வர வேண்டாம்' என்று பிரதமர் அன்புக் கட்டளை யிட்டது குறித்து...?

! அது மட்டுமா...? "என் டிக்கட் எங்கே? கைச்செலவுக்கு அன்னியச் செலாவணி வேண்டும்..." என்று சராசரி பயணியாகவே செல்ல விரும்பியிருக்கிறார். நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒரு வி.ஐ.பி. வருகையில் விமான நிலையம் தடுமாறாமல், அனைத்து விமானங்களும் உரிய நேரத்தில் புறப்பட்டுப் போயிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, ஜி-7 உச்சி மாநாட்டில் பிரதமர் திட்டமிட்டபடி சாதித்துக் கொண்டு திரும்பியிருக்கிறார். எளிமை, திறமை இரண்டுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறார்.

● எஸ். இராமலிங்கம், தூத்துக்குடி



● வரி + வசூல்!



● மாலை + மக்கள் படை!

? உலகில் வெடிகுண்டை விட சக்தி வாய்ந்தது ஏதேனும் உண்டா...?

! உண்டே! வெடிகுண்டு இருந்தாலும் அதைப் பயன்படுத்தாதிருக்கும் மன உறுதி. குண்டை விட சக்தி வாய்ந்தது.

● ஆர். வஸந்தா, சென்னை - 86

? புதைபொருள் ஆராய்ச்சியில் செலவு செய்வதை விட்டுவிட்டு, தற்போது இந்தியாவில் உயிரோடிருப்பவர்களின் நலனில் அக்கறை செலுத்த அரசு முன்வர வேண்டாமா?

! அரசு, மக்களின் அன்றாட நலனில் ஆர்வம் காட்டுவது ரொம்ப முக்கியம்; சந்தேகமில்லை. ஆனால், அதற்காக வேறு பலவற்றைப் புறக்கணிக்க முடியாது!

புதைபொருள் ஆராய்ச்சி என்பது, மனிதனின் இயல்பான தேடல் முயற்சியில் ஓர் அம்சம். அகழ்வாராய்ச்சி இல்லையெனில் சரித்திரம் இல்லை; சரித்திர நூல்கள் இல்லை; சரித்திர இலக்கியம் இல்லை; கலைகளின் மறுமலர்ச்சி இல்லை; இன்னும் பலவும் இல்லை. வேண்டாம் அந்த நிலை.

● ஏ. கிருஷ்ணபாலா, சென்னை - 77

? ஒவ்வொரு இந்தியனும் எப்போது தான் இந்தியன் என்று உணர்கிறான்...?

! சுவாசிக்கும் ஒவ்வொரு கணத்திலும் உணர வேண்டும். இதற்குப் போய் நேரம் காலமா பார்த்துக் கொண்டிருப்பார்கள்!

● ஆண்டனிதமிழரசன், மும்பை ★

? சிபு சோரன் வசமாக மாட்டிக் கொண்டாரே...?

! ஏனய்யா! அவரைப் பார்த்தால் வசமாக மாட்டிக் கொண்டு வருத்தப்படுகிற மாதிரியா தெரிகிறது! மாலையும் கழுத்துமாக, மக்கள் கூட்டம் சூழ, ஏதோ பெரிய தியாகி போலல்லவா சிறைக்குப் போயிருக்கிறார்!

# அழகி

ஜானகி

"**யா**ருப்பா மேல, முனிசாமி, அந்த வலது பக்கம் பேபிய கொஞ்சம் திருப்புப்பா, போதும் போதும்.. மனோ, செட் ஆளுங்களைக் கூப்பிடு... அந்தச் செடிய விண்டோ பக்கம் கொஞ்சம் திருப்பி வைக்கச் சொல்லு, ஷாடோ விழுதுபாரு... என்ன மணி, லைட் ஓகேயா.. ஐரிஸ் செக் பண்ணுப்பா, வின்வென்ட், காலர் மைக்கெல்லாம் செக் பண்ணியாச்சா... பாதியில பாட்டரி மாத்த றேன்னு நம்ம பாட்டரிய டவுன் பண்ணி டாதப்பா...." ரவி என்கிற ரவிகிரன் மிகவும் பரபரப்பாக இருந்தான். சும்மாவா பின்னே, உலக அழகி செட்டுக்கு வரப்போறா, தஞ்சை மண்ணில் அதி அழகாகப் பிறந்து, அறிவாளி அப்பாவின் உத்தியோக நிமித்தம் ஊர் ஊராகச் சுற்றி, பல கலாசாரங்களில் புரண்டு, வளர்ந்து, மும்பையில் மாடலாகி இந்தியாவையே கலக்கி, இப்பொழுது உலகத்து இளைஞர்களை எல்லாம் ஜொள்ளு ஜுரத்தில் வீழ்த்திய உலக அழகி, ஸாண்டிஜே என்கிற ஸத்தியா ஜெயராம், தமிழில் 'ஐ டிவி'க்குப் பேட்டி கொடுக்கப் போகிறாள். ரவிக்கு உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை வியர்த்தது. கையிலிருந்த டவலால் வியர்வையை அழுந்தத் துடைத்தான்.

"கொஞ்சம் மாடியில போயி மல்லிகா மேடம் ரெடியான்னு பாரு. கேள்வியெல்லாம் சரி பாத்துக்கச் சொல்லு. முன்னாலயே பொஸிஷன் பாத்து ரெடியாயிருக்கணும். இன்னும் பத்து நிமிஷம்தான் இருக்கு..."

மல்லிகா அவன் பின்னாலிருந்து வந்தாள்.

"ரவி நான் ரெடி. ஏன் இவ்வளவு டென்ஷன். படபடக்காதீங்க. எனக்கும் இது நூறாவது ஷோ. அசத்திடலாம் கவலைப் படாதீங்க. கூல் டவுன் ரவி." அனுபவம் புன்னகை மாறாமல் அறிவுரை சொன்னது. மல்லிகா கடந்த இரண்டு வருடங்களாக, தொடர்ந்து ஐ டி.விக்காக "மனம் திறந்து..." நிகழ்ச்சியை நடத்தி, பேட்டி காண்பதில் மிகவும் கெட்டிக்காரி என்ற பெயர் வாங்கியிருந்தாள். இன்று அவளது நூறாவது பேட்டி. இதற்காக உலக அழகி நேரம் ஒதுக்கியது, மல்லிகாவுக்குக் கிடைத்த பெரும் பரிசு.

"அழகா வந்திருக்கு கிரி" மல்லிகா ஆர்ட் டைரக்டரை தனியாகக் கூப்பிட்டுப் பாராட்டினாள்.

"இதையே இனிமே கன்டின்யூ பண்ண லாம்னு ரவிசார் சொன்னாரு." கிரி மிகவும் மென்மையான குரலில் சொன்னான். இரண்டு முறை தேசிய அவார்ட் வாங்கியிருந்தாலும், அலட்டல் இல்லாத அற்புதக் கலைஞன்.

"மிஸ் யுனிவர்ஸ், செட்ட பாத்து அசந்து போயி பேச்சிழந்து போயிடப்போறாங்க" காமிரா மணி கிண்டலடித்தார். கிரி பதில் சொல்லவில்லை. அவனைப் பொறுத்தவரை வருவது உலக அழகியானாலும் சரி, சென்னியநல்லூரா் விவசாயியானாலும் சரி, உழைப்பு ஒன்றுதான்.



"மேடம் வந்தாச்சு" திறந்த வாய் திறந்தபடி, செட்டில் சகலரும் நுழைவாயிலைப் பார்க்க, ஐந்தடி பத்தங்குலமும் அழகு பொங்க அவள் வந்தாள்.

"சொம்மாவா உலக அழகி பட்டம் குடுப்பாங்க, கண்ணு ஒண்ணே போதும்பா..." லைட்பாய் முனுசாமி கபாலியிடம் கிசுகிசுத்தான்.

மல்லிகா அவளது அழகில் வியந்தாள்.

"த, அங்க பாத்துனு இங்க கோட்ட உட்றாத, மகி சாரு தொலச்சுடுவாரு" மகி என்கிற மகேந்திர பாபு தெலுங்கில் வியந்து கொண்டே இத்தனை அழகையும் எப்படி காமிராவுக்குள் திணிப்பது என்று யோசித்தான்.

"செட் ரொம்ப அழகாயிருக்கு" அவள் பேசிய முதல் வார்த்தை. எல்லாரும் கிரியின் பக்கம் திரும்ப, "கிரி வாப்பா இங்க... இவர் தான் ஆர்ட் டைரக்டர் கிரிதரன்... மூணு ஸ்டேட் அவார்ட், இரண்டு நேஷனல் அவார்ட் வாங்கியிருக்கார்." அவள் கண்களில் ஆச்சரியம் மின்ன கை நீட்டிய போது, கிரி கையிலிருந்த கறுப்பு மையைத் துடைத்துக் கொண்டிருந்தான். செட்டை விட, கிரி அவளை இன்னும் அதிகமாக ஆச்சரியப்படுத்தியது போல இருந்தது.

"பரவாயில்லை" அழகாகக் கைகூப்பினான். கிரி நழுவவிட்ட



வாய்ப்பை எண்ணி சகலரும் வருத்தப்பட, அழகி இரண்டடி முன்னேறி, மீண்டும் கிரியின் பக்கம் திரும்பினாள்.

நீங்க எந்த ஸ்கூல்?"

"பத்தாவது வரை பூனேயில படிச்சேன், அப்புறம் சென்னைதான்."

"மடையா, எந்த ஆர்ட் ஸ்கூல்னு கேக்க றாங்க" மகி இடித்தான். ஆனால் அழகி கிரி சொன்னதை காதில் வாங்கிக் கொண்டு, இருக்கைக்குப் போய்விட்டாள்.

"ஸைலன்ஸ்"... ரவி களத்தில் இறங்க, எல்லோரும் கருமமே கண்ணாயினர். விளக்கணைக்கும் முன், அழகி கிரியின் பக்கம் யதேச்சையாக ஒருமுறை பார்வையை வீசினாள்.

'விர்ர்ர்ர்' 'ரென்று காமிரா இயங்க, மல்லிகா பேட்டியை ஆரம்பிக்கத் தயாரானாள்.

"உங்களுக்குக் கவிதை பிடிக்குமா?"

"ம்ம்ம்..."

"தமிழ்க் கவிதைகள்?"

"படிப்பேன், ரொம்பப் பிடிக்கும், சிலது புரியாது."

"**ஸ**ந்தியா, இன்னிக்கி நான் பாட்டு கிளாசுக்கு வரலை. அம்மாட்ட சொல்லிடு."

"இன்னிக்கி புதுசா பாரதியார் பாட்டு சொல்லிக்குடுக்கப் போறா." ஸந்தியா கொக்கி போட்டாள்.

"நாளைக்கு சயன்ஸ் டெஸ்ட்" கிரி மறுத்தான்.

"அப்ப கிளாசே வேண்டாம்னு அம்மாகிட்ட சொல்லிடறேன்."

"ஏன் ஆனந்த், பிரபு, சௌம்யா, ப்ரியா எல்லாரும் வருவாங்களே."

"வரட்டும், நான் போகமாட்டேன்..."

"சனிக்கிழமை போட்டியிருக்கு தெரியுமில்ல, நீயும் ஆனந்தும் சேர்ந்து பாடணும்."

"எனக்கு ஆனந்தோட பாட பிடிக்கலை. அவன் சரியில்ல."

"கொஞ்சநாள் முன்னால பிரபுவ சரியில்லன்னு சொன்ன, இப்ப ஆனந்த், இன்னும் கொஞ்ச நாள் போனா என்னையும் அப்படித்தான் சொல்லுவ..."

"அப்படியில்ல, சரியில்லன்னா சரியில்லன்னுதான் சொல்ல முடியும். அவன் பார்வையே சரியில்ல. பக்கத்துல உக்காந்து பாடினா, வேணும்னே இடிக்கறான். எனக்கு அவனப் புடிக்கலை. நீ அப்படியெல்லாம் செஞ்சா, உன்னையும் சரியில்லன்னுதான் சொல்லுவேன்."

"நெடி எழுத்துகளைப் படிக்க முடியாமல் தலைவர் சிரமப்பட்டார்."

"அதற்காக 'வெள்ளெழுத்து வேந்தர்'னு பட்டம் தர்றதா? இதெல்லாம் டூ மச்!"

- எம். அசோக்ராஜா

ஸந்தியா போல அழகி பக்கத்தில் இருந்தால்... சும்மாயிருப்பது மிகவும் கஷ்டம். தமிழ்ச்சங்கத்துக்கு வரும் அநேக ஆண் பிள்ளைகள், அவளை தொட்டுப் பார்க்கத் துடிப்பது சகலரும் அறிந்த விஷயம். பாவம் ஸந்தியா. கிரி மட்டும்தான் அவளுக்கு ஒரே நண்பன். அவனிடம் அவள் எதையுமே மறைப்பதில்லை. 'நீ ஒருத்தன்தான் என் முகத்தைப் பார்த்துப் பேசற...'

அவள் கஷ்டம் அவனுக்குப் புரிந்தது. அவள், அவனைத் தலையில் குட்டிவிட்டுப் போனாள்.

"**கட்**" ரவி அலறினான்.

"மல்லிகா மேடம், ஆடியோ டிஸ்டர்பன்ஸ், புடைவை பார்டர் மைக்ல உரசுது. கொஞ்சம் சரிபண்ணிக்கங்க..." மல்லிகா எச்சிலை விழுங்கினாள். பேட்டியின் முக்கியக் கட்டத்தில் தடங்கல். கவனத்தைச் சிதற விடாமல் மன்னிப்புக் கேட்டுவிட்டு, புன்னகையுடன் பேட்டியைத் தொடர்ந்தாள்.

"உங்களுக்கு திரைப்படத்தில் நடிக்க அநேக அழைப்புகள் வந்தும், நீங்கள் ஏன் நடிக்கவில்லை?"

"இரண்டு காரணங்கள் - ஒன்று எனக்கு நடிக்கத் தெரியாது. இரண்டு எனக்கு அதில் நாட்டமில்லை."

'நறுக்'கென்று பதில் வந்தது.

"திருமணம்?"


"நான் அதைப் பற்றி இன்னும் யோசிக்கவில்லை."

"காதல்?"

"பலபேர் என்னைக் காதலிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் நான் இன்னமும் யாரையும் காதலிக்க ஆரம்பிக்கவில்லை" பொய்யில்லாத பளிச் பதில். படப்பிடிப்புத் தளத்தின் ஜொள்ளர்களெல்லாம் பெருமூச்சுவிட, காற்று சூடானது.

"கட்" ரவி, சமயோசிதமாய் ஆடுபுலி ஆட்டத்தை நிறுத்தினான்.

"இதுவரைக்கும் ரொம்ப நல்லா வந்திருக்கு. இன்னும் அஞ்சு நிமிஷம் போகலாம் போதும்."



''ஸந்தியா இருக்காளா?'' கிரி சைக்கிளை ஸ்டாண்ட் போட்டுக் கொண்டே கேட்டான்.

"ரூம்ல அழுதுண்டு இருக்கா... போய்ப் பாரு... ப்ரைஸ் கிடைக்கலைன்னு வருத்தப் பட்டால் ஆச்சா, சரியா பாடியிருக்கணும்." ஸந்தியாவின் அம்மா பொருமினாள்.

இவளுக்கு என்ன ஆச்சு என்று கிரி வியந்தான்.

ஜன்னலோரத்தில் உட்கார்ந்து வெளியே வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள் அவள்.

'நீ போட்டியில சரியாவே பாடலை... உனக்கு மட்டும் பிரைஸ் கொடுத்திருந்தா அது அப்பட்டமான ஓரவஞ்சனை... ப்ராக்டிஸ்லகூட நீ அவ்வளவு மோசமா பாடினதில்ல."

ஸந்தியா அவன் பக்கம் திரும்பிப் பார்த்தாள். கண்களில் அழுகையின் சாயல் இல்லை.

''இவ்வளவு பேசறியே, நான் ஏன் அவ்வளவு மோசமா பாடினேன்னு யோசிச்சியா?'' சீறினாள். கிரி அவளையே பார்த்தான்.

''அன்னிக்கி நான் பாடறதுக்கு முன்னாடி பாத்ரூமுக்குப் போகணும் போல இருந்தது. நான் போயிட்டு வரும்போது கரண்ட் போயிடுத்து. இருட்டுல அந்த வராண்டாவுல நான் தட்டு தடுமாறி வந்த போது, எதிரில யார் மேலயோ மோதிட்டேன். அது யாரோ ஆம்பிளை... அவன் என்னை எங்கெல்லாமோ தொட்டான்... எனக்கு எப்படியோ இருந்தது. அவனப் புடிச்சுத் தள்ளிட்டு மேடைப்பக்கம் ஓடி வந்தேன்... ஏன் கிரி... ஏன் எனக்கு மட்டும் இப்படி நடக்குது... என்னைப் பார்த்தா ஏன் அவங்களுக்கு இப்படித் தோணுது... சௌம்யா, ரேஷ்மா இவங்களுக்கெல்லாம் இப்படி ஆறதே இல்லை. அவங்கல்லாம் அவங்க கஸின்ஸ்கூட எவ்வளவு நல்லா விளையாடறாங்க தெரியுமா..." கண்ணைத் துடைத்து, மூக்கை உறிஞ்சிக்கொண்டே பேசினாள்.

"கிரி, உன்னைத் தவிர யாருமே எங்கிட்ட சரியா பழகறதில்லடா..."

இதைச் சொல்லும் போது சந்தியா பெரிதாக அழுதுவிட்டாள்.

"அந்த ஆள் நிச்சயமா நம்ம குரூப்புல யாருமில்ல. கொஞ்சம் பெரிய ஆளாட்டமா. அவன்கிட்டேயிருந்து தப்பிச்சு ஓடி வந்தப்போ, அவன் பாக்கெட்டிலிருந்த அவன் பேனா என் கையோட வந்திடிச்சு." உள்ளேயிருந்து பேனாவை எடுத்து வந்தாள். பேனாவின் மூடிப் பகுதியில் அவனுடைய அப்பாவின் கம்பெனிப் பெயர் இருந்தது.

இந்தச் சம்பவத்திற்கு பிறகு ஸந்தியாவை அதிகம் சந்திக்கவில்லை. அவள் அப்பாவுக்கு வெளிநாட்டுக்கு மாற்றலாகிவிட, அவர்கள் ஊரைவிட்டுக் கிளம்பிவிட்டார்கள். கிரியும் அப்பாவைப் பார்க்கும் பொழுதெல்லாம் பேனாவைப் பற்றி கட்டாயமாகக் கேட்க நினைத்து, வேண்டுமென்றே மறந்து விடுவான்.

''அழகாயிருப்பது பற்றி?"

"கொஞ்சம் கஷ்டம்... ஆனாலும் சகித்துக் கொள்ளலாம்."

"உங்கள் முன் கடவுள் தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்டால், என்ன கேட்பீர்கள்?" கச்சேரியின் முடிவில் பாடும் மத்தியமாவதிபோல சம்பிரதாயக் கேள்வி. இதற்கு அழகி தயங்காமல் உடனுக்குடன் பதில் வைத்திருந்தாள்.

"என் குழந்தைப்பருவத்தை ஒரு குழந்தையாக மீண்டும் வாழவேண்டும்."

"கட்... அமர்க்களம்... வெரிகுட்..." ரவி சந்தோஷமாக மேடையை நோக்கிப் போக, அனைவரும் கைதட்டினார்கள்.

திடீரென்று பரபரப்பு. ஆட்டோகிராஃப் வாங்க அலைமோதினார்கள். கிடைத்தவனிடம் பேனாவை இரவல் வாங்கிக் கொண்டு ஓடினார்கள். அழகி பொறுமையாக எல்லாருக்கும் கையெழுத்துப் போட்டுவிட்டு, கையிலிருந்த பேனாவை திருப்பிப் பார்த்தபடி, ''இந்தப் பேனா யாருது?'' அவள் பார்வை கிரியின் மேல் இருந்தது.

கிரி தலை குனிந்தபடியே, ''எங்க அப்பாவோட பேனா'' என்று குற்ற உணர்வோடு சொன்னான். சந்தியா, கிரியை சில கணங்கள் தீர்க்கமாகப் பார்த்தாள். பேனாவைத் தன் கைப்பையில் போட்டுக் கொண்டு, எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டாள்.





* எப்படியிருந்தது...



* ...இப்படியானது

# மக்களுக்காக ஓர் இணையம்!

* கோ. அய்யனார்

தச்சநல்லூர் ஆழ்வாருக்கு வயது ஐம்பத்தைந்து. தனியார் பால் பண்ணை ஒன்றில் சாதாரண எழுத்தர். திருநெல்வேலி - மதுரை பைபாஸ் சாலையில் சைக்கிளில் வந்து கொண்டிருக்கும்போது, கார் ஒன்று மோதி, அந்த இடத்திலேயே இறந்து போனார். மோட்டார் வாகன விதிகளின்படி அனைத்து சம்பிரதாயங்களும் காவல்துறை மூலமாக மேற்கொள்ளப்பட்டன. ஆழ்வாரின் மகன், பாளையங்கோட்டையில் ''குடிமக்கள் செயல் இணையம்'' என்கிற அமைப்பு பற்றி தெரிந்து கொண்டு, அங்கு சென்றார்.

அந்த இணையம் அவருக்கு உதவி செய்ய முன் வந்தது. விபத்து குறித்தான முதல் தகவல் அறிக்கை, மருத்துவ போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட், இரண்டையும் இணைத்து, அதனுடன் ஒரு மனுவும் சேர்த்தெழுதி திருநெல்வேலி கோட்டாட்சியரிடம் நேரில் சென்று தரப்பட்டது. "முதல் அமைச்சரின் வாகன விபத்து உதவித் திட்டம்" மூலமாக, விபத்து நிவாரண நிதியாக பத்தாயிரம் ரூபாய் பெற்றுத் தரப்பட்டது.



வாகன விபத்துகளில் இறக்க நேருகின்ற பெரும்பாலோரின் குடும்பங்களுக்கு, மோட்டார் வாகன விபத்துக் காப்பீட்டுத் தொகையானது, சில வருடங்கள் கழித்துக் கிடைத்து விடும். ஆனால் இதுபோன்ற, விபத்து நிவாரண நிதியினை மட்டும் பெரும்பாலோர் பெற்று விடுவதில்லை. பாதிக்கப்பட்ட குடும்பத்தினர், விபத்துக்குப் பின்னர் அதற்கான முயற்சிகளில் இறங்காமல் இருப்பதும் ஒரு காரணம்.

இது மட்டுமல்லாது, பொது மக்கள் தங்களின் பல்வேறு பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாமல் தவிக்கின்ற தருணங்களில், ஒரு வழிகாட்டியாகவும், செயல்பட வைக்கும் ஒரு காரணியாகவும் இருந்து வருகிறது, குடிமக்கள் செயல் இணையம்!

“நம்மிடையே குடிமக்கள்தான் இல்லை" என்று அங்கலாய்த்த அரசியல் அறிஞர் ரூஸோ, "குடிமக்களை உருவாக்குங்கள். உங்களுக்குத் தேவையானதெல்லாம் அதன் மூலம் கிடைக்கும். குடிமக்கள் இல்லாவிட்டால் உங்களுக்கு அடிமை





• கால்வாய் சீரமைப்பு...



• இணைய உறுப்பினர்கள்...

கள்தான் கிடைப்பார்கள்" என்று அறிவுறுத்தினார். மக்கள் தங்களுடைய பிரச்னைகளை, தங்களுக்குக் கிடைத்த விவரங்களின் துணை கொண்டு, மக்களோடு மக்களாகக் கலந்து பேசி முடிவெடுப்பதுதான் ஜனநாயகத்தின் உயிர் நாடி. இதனை அடியொற்றிச் செயல்பட உருவானதே குடிமக்கள் செயல் இணையம்.

முன்னாள் மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் மற்றும் மக்கள் சக்தி இயக்கத் தலைவர் எம்எஸ் உதயமூர்த்தி ஆகியோரால், சென்னையில் 2000ம் ஆண்டு துவங்கப்பட்ட இந்த இணையம், தி கேட்டலிஸ்ட் ட்ரஸ்ட் (The Catalyst Trust) எனப்படும், உந்துநர் அறக்கட்டளை சார்பாகச் செயல்பட்டு வருகிறது. பதினைந்து நகரங்களில் இந்த இணையம் உருவாக்கப்பட்டது. அதில் ஒன்று, பாளையங்கோட்டை மண்டல குடிமக்கள் செயல் இணையம்!

பேராச்சியம்மன் கோயில் அருகே தாமிரபரணி நதிக்கரையில், கல்மண்டபம் ஒன்று. இறுதிச் சடங்குகள் நடைபெற்று வந்த இடம். அதைச் சுற்றிலும் முள் மரங்களும், புதர்களும் மண்டி கிடக்கக் கடந்த பத்து ஆண்டுகளாக, நெல்லை மாநகர மக்களால் பயன்படுத்தப்படாமலே இருந்து வந்தது. நீத்தார் இறுதிக் காரியங்கள் செய்ய வருபவர்கள், நதிக்கரையில் வெயிலில் அமர்ந்தே செய்து வந்தனர். குடிமக்கள் செயல் இணையம் அதில் கவனம் செலுத்த, இப்போது பளிச்!

பாளையங்கோட்டை 24வது வார்டில் வெகு காலமாக உபயோகிக்கப்படாத கழிவறைக் கட்டடம் ஒன்று. (ஆங்கிலேயர் காலத்தியது!) இரவு நேரங்களில் சமூக விரோதக் காரியங்களுக்கு இருப்பிடமானது. குடிமக்கள் செயல் இணையத்தின் வேண்டுகோளை ஏற்று, அதனைத் தூய்மைப்படுத்தி, நூலகமாக மாற்றுவதற்கு மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அமைப்பின் சார்பாக "மாநகர நிலத்தடி நீர்ப் பாதுகாப்புச் சங்கம்" ஒன்று அமைக்கப்பட்டது. பதிவு பெற்ற அச்சங்கம் வாயிலாக, நெல்லை மாநகரின் நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு மற்றும் வாய்க்கால் பராமரிப்பு போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறது குடிமக்கள் செயல் இணையம்.

தாமிரபரணியின் பாளையங்கால்

வாய்க்கால் என்பது இரண்டரை கி.மீ. நீளம் கொண்டது. அதன் இரு புறங்களிலும் வாய்க்காலின் உட்புறங்களில் நீர்த் தாமரைச் செடிகள் மண்டிக்கிடந்து, தண்ணீர் ஓட்டத்துக்குப் பெரும் தடையாக இருந்து வந்துள்ளது. குடிமக்கள் செயல் இணையம், பொது மக்களிடம் அறுபத்தி மூவாயிரம் ரூபாய் நிதி திரட்டியது. அதனை மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைத்தது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் மாவட்ட நிர்வாகத்திடமிருந்து இரண்டரை லட்ச ரூபாய் பெறப்பட்டு, பாளையங்கால் வாய்க்கால் தூர்வாரி சுத்தப்படுத்தப் பட்டுள்ளது.

நெல்லை மாநகருக்குள் பதினாறு குளங்கள், தேடிப்பிடித்து அடையாளம் காணப்பட்டுள்ளன. சென்று பார்த்தால் ஒவ்வொரு பகுதிகளிலும் வீடுகள், கட்டடங்கள், அரசு அலுவலகங்கள் என எழும்பியுள்ளன. அதனால் குளங்களின் மீதமுள்ள, பகுதிகளையாவது காப்பாற்றி வைக்க முடிவு செய்துள்ளது இந்த அமைப்பு. அதன் நீர் வரத்துப் பாதைகளையும் செப்பனிடுவதன் மூலமாக அவை மழை நீர் சேகரிப்புக் குளங்களாக மாறலாம். அப்போது மாநகரப் பகுதிகளில் நிலத்தடி நீர் இருப்பு என்பது நிரந்தரமாகப் பாதுகாக்கப்படலாம் என்பதால், இப்போதே திட்டமிட்டுச் செயல்படத் துவங்கி விட்டனர்.



"எதுக்காக சீரியல்ல நடிக்கணும்னு ஒத்தைக்கால்ல நிக்குறே?"
"நிரந்தர வேலையில இருக்கிறவனுக்குத்தான் பொண்ணைத் தருவேன்னு என் லவ்வரோட அப்பா ஒத்தைக் கால்ல நிக்கறாரே!"
- விஷ்ணுகுமார்

மூளிக்குளம் என்பது குளத்தின் உட்பகுதி முழுவதுமாக கருங்கற்களால் கட்டப் பட்டிருப்பதாகும். குடிநீர் உபயோகத்துக்கென திட்டமிட்டுக் கட்டப்பட்டதாம். நாற்பதாண்டுகள் முன்பு வரைக்குமாக குடிநீர்ப் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது அந்த மூளிக்குளம். தற்போதும் தண்ணீர் அதனுள்ளே நிறைந்துள்ளது. ஆகாயத் தாமரைகள் மற்றும் நீர்த்தாவரங்களால் குளம் நிரம்பியிருக்கிறது. அவற்றை அகற்றி விட்டு, ஒரு பகுதியை நீச்சல் குளமாகவும், மறுபகுதியை மீன் வளர்ப்புக் குளமாகவும் மாற்றிவிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு பாளையங்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் நிதியிலிருந்து, இரண்டு லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

"அரசின் நலத்திட்ட உதவிகள் பலவும் ஏழை மற்றும் அடித்தட்டு மக்களை முழுமையாகச் சென்றடையவில்லை என்பதே உண்மை. அதனை மாற்றியமைக்க உதயமானதே குடிமக்கள் செயல் இணையம். 2002ல் தமிழகத்தில் பதினைந்து நகரங்களில் இந்த மையம் துவங்கப்பட்டது. தற்போது 2004ல் மேலும் எழுபத்தைந்து இடங்களில் குடிமக்கள் செயல் இணையம் உருவாக்கப் பட்டுள்ளது. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மத்திய மாநில அரசுகளின் திட்டங்களும், ஏழை மக்களுக்கு அரசின் உதவிகளும் சென்றடைய வேண்டிய பணியை முன்னின்று நடத்துவதே, குடிமக்கள் செயல் இணையத்தின் முக்கிய நோக்கம் ஆகும். தற்போது தமிழ்நாடு முழுவதும் பரவலாக ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகள் பலரும் வசித்து வருகின்றனர். அவர்களில் இதில் ஆர்வம் உள்ள அனைவரும், பிற துறை வல்லுனர்கள், சமூக நல ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களையும் ஒன்றிணைந்து இது போன்ற குடிமக்கள் செயல் இணையத்தை உருவாக்கிச் செயல்பட வேண்டும். அதன் மூலமாக நாம் நிச்சயமாக, உண்மையான மக்களாட்சியை நிலை நிறுத்திக் காட்ட முடியும்!" எனச் சொல்கிறார் குடிமக்கள் செயல் இணையத்தின் பாளையங்கோட்டை மண்டல அமைப்பாளர் கோ. அய்யனார்.

கட்டுரை, படங்கள்:
**ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**

# வாஸ்துப் பார்த்து டைடல் பார்க்!



பிரபலங்களைத் தான் பேட்டி எடுக்க வேண்டுமென்று விதியிருக்கிறதா என்ன? இந்தக் கோணத்தில் அண்ணா யுனிவர்சிட்டி கேன்டீனில் ரசித்து ருசித்து கோன்-ஐஸ்க்ரீம் சாப்பிட்டு முடித்திருந்த இரு கோன்களை மினிபேட்டிக்கு அழைத்தோம்.

**பூஜா** *(ஃப்ரம் ஆந்திராவாம்)*

"அம்மாயிகாரு நமஸ்தேவண்டி!"

'ஸ்ஸ்ஸ்... தெலுங்கை கொலை பண்ணாதீங்க. நான் தாங்க மாட்டேன். (கேட்டுக்குங்க தமிழச்சிகளே!) தமிழ் நல்லாவே தெலுகும். அதுலேயே செப்பண்டி!"

"ஓகே ஓகே. நாம ரெண்டு பேரும் மீட் பண்ணினது பற்றி?"

"எல்லாம் விதிதான். இல்லாட்டி உங்ககிட்ட எனக்கென்ன வேலை?"

"காலேஜ் லைஃப்ல ஃப்ரெண்ட்ஷிப் தேவையா?"

"ஒரே க்ளாஸ்ரூம்ல நாலு வருஷமா ஒருத்தரையொருத்தர் பார்த்துட்டு இருக்க முடியாதே. அதனால தேவைதான். ஏதாவது பிரச்னைன்னா, நாம மட்டும் மாட்ட மாட்டோம் பாருங்க!"

"எடக்கு மடக்காவே பேசறீங்களே? வீட்ல எப்படி சமாளிக்கறாங்க?"

"ஹா... ஹா... ஹா, வெளியில தான் புலி. வீட்டுக்கு போனா வாலைச் சுருட்டி வைச்சிடுவேன்ல."

(அடேங்கப்பா!)

அருகே 'ஆ'வென வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த லக்ஷ்மி, இந்தோ - மலேஷிய கூட்டுத் தயாரிப்பு ("என்னுத்தாத்தா லவ் பண்ணாங் களாம். அதான்")

"உங்களுக்குத் தமிழ்?"

"ம். நல்லாவே தெரியும். ஆனா ல, ள, ழ தான் சரியா வராது."

"ஏனுங்க?"

"ஹோலி ஏஞ்சல்ஸ்ல படிக்கும்போது தமிழ்ல மூச்சு விட்டாலே ஃபைன் போட்டிடுவாங்க. இதுக்குப் பயந்தே இங்கிலீஷை சுவாசிக்கப் பழகிட்டோம். அதனாலதான்."

"சரி, ஏன் இப்படி சாய்வா உட்கார்ந்து பேசறீங்க?"

"வாஸ்துபடி இப்படித்தாங்க நான் உட்காரணும். என்னை கேட்கறீங்களே, டைடல் பார்க், இந்த அண்ணா யுனிவர்சிட்டியெல்லாம் வாஸ்து பார்த்துதான் பூமியில உட்கார்ந்திருக்கு தெரியுமா?!"

"அப்படியா. அப்போ ராசி பார்க்குற பழக்கம்?"

"அதுல இன்னும் பைத்தியம். இந்த வாரத்துல கடக ராசிக்காரங்க சுறுசுறுப்பா இருப்பாங்க. மீனம் - கோபம், கன்னி - புத்திசாலி, ரிஷபம் - ஏமாற்றுப் பேர்வழி, துலாம் - அதிர்ஷ்டம், மிதுனம் - உழைப்பாளி... ஆமா நீங்க என்ன ராசி?

(ரிஷபம் சொல்லும்போதே மனது 'குறுக்'கென்றிருந்தது!)

'ஹி... ஹி... ஹி கன்னி ராசி!"

இனிமே பிரபலங்களைத்தாம்பா பேட்டி எடுக்கணும்!

**- ச.ந. கண்ணன்**

# 15



**வ**ழி எங்கிலும் முருக பக்தர்கள் காவடி எடுத்தவண்ணமும், அரகரோகரா முழங்கியபடியும், சிறு சிறு குழுக்களாகச் சென்று கொண்டிருந்தனர். டிரைவர் அண்ணாதுரையினால் வேகமாக வண்டியைச் செலுத்த முடியவில்லை. அதுவும் ஒரு விதத்தில் அவர்களுக்குச் சாதகமாகவே அமைந்தது.

"சம்பமா உன் தொழிலில் ஏதாவது பின்னடைவு உண்டா?" என்றான்.

"பின்னடைவுன்னா, ப்ராஸ்பரின் தயாரிக்கும் மருந்து கம்பெனிக்காரன் என் பலவீனத்தைப் பயன்படுத்தி, அவன் கொண்டு வந்த ப்ராஸ்ப்பிரின் ப்ளஸ் என்ற மருந்தை தலையில் கட்டினான். பற்று கூடிக்கிட்டே போச்சு. பைசல் பண்ண வழி தெரியல. கதிரேசனை மிரட்டி சஸ்பென்ஸில் பணம் வாங்கி, அவங்க கணக்கை அடைச்சிட்டேன். அந்தப் பணம் அப்படியே நிலுவையில் இருக்கு."

"எவ்வளவு மொத்தத் தொகை?"

"ஏழு லட்சம்."

"ப்பூ, இவ்வளவு தானா?

"தொகை சின்னது தான். எங்களால் ஈடு கட்ட முடியும். ஆனால் இது கூட்டு வியாபாரம். ரைட்-ஆஃப் பண்ண எல்லாருடைய சம்மதமும் வேணும்."

'கணக்கில் அந்தத் தொகை எப்படி இருக்கு?"

"ப்ராஸ்ப்ரின் ப்ளஸ்ஸின் பற்றை நேராக்கிய வகையில்னு இருக்கு."

"உன் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கா?"

"என் பேரை எழுதினா, போட்டுத் தள்ளிடுவேன்னு கதிரேசனை மிரட்டி வெச்சிருக்கேன்."

"மொட்டையா சஸ்பென்ஸ் கணக்குல பற்று வெச்சிருக்கியேன்னு அவனை யாரும் கேட்கலியா?"

"கேட்டாக. பெரியண்ணன் கேட்டாக."

"இவன் என்ன சொன்னான்?"

"அப்பவும் இவன் வாயைத் திறக்கலை."

"ஊமையா?"

"அமுக்கன். நல்ல குணவான்னு எல்லார்கிட்டேயும் பாராட்டு வாங்க நினைக்கறவன்."

"உன் வள்ளி மெடிக்கல்ஸ்"க்குக் கிடங்கு எங்கே இருக்கு?"

"கிடங்குன்னா, கல்லுக்கட்டி கடைக்குத் தள்ளி ஒரு சின்ன வீட்டுல இருக்கு."



# வலம்புரி முத்து

“தனி வீடா?”

“ஆமாம்.”

“சரக்கு எவ்வளவு இருக்கும்?”

“எங்க வியாபாரம் ஓவரா சரக்கு வாங்கிப் போட்டுப் பண்ணுறது கிடையாது. சரக்கு சேரச் சேர, எல்லா கடைகளுக்கும் சப்ளை செஞ்சிருவோம். என்ன, பத்து லட்ச ரூபாய்க்குள்ள சரக்கு இருக்கும்.”

“நீ என்ன செய்யற... கிடங்குல சரக்கு அதிகமா இருக்கற ஒரு நாளைத் தேர்ந்தெடு. கிடங்கில் உள்ள எல்லா மருந்துகளையும் அப்புறப்படுத்து. நம்பகமான ஆட்களைத் தேர்வு செய். கிடங்குக்குத் தீ வை.”

‘அடப்பாவிங்களா!’ என அண்ணாதுரை என்றழைக்கப்பட்ட டிரைவர் அதிர்ந்தான்.

நாகப்பன், திருஞானம் சொல்வதை வாய் பிளந்தபடி கேட்டுக் கொண்டிருந்தான்.

“பொய் சாட்சி சொல்ல உன் ஊழியர்கள்ல ஒருத்தனைத் தேர்ந்தெடு. பணத்தை வீசியெறிஞ்சா, ஆயிரம் பொய்சாட்சி கிடைக்கும். இன்ஷூரன்ஸ் கவரேஜ் கிடைக்கும்ன்ற காரணத்துக்குத்தான், கதிரேசன் தன்னைக் கட்டாயப்படுத்திக் கடையைக் கொளுத்தச் சொன்னாருன்னு பொய் சாட்சியை சொல்லச் சொல்லு! கதிரேசன் வாழ்க்கையே நாசமாயிடும். காணாமப் போயிடுவான்.”

“எனக்கு எதிரா திரும்பாதா?”

“திரும்பாது. நீ வெச்ச உடனே சொல்லப்படுற பொய்சாட்சி மூலம் கேஸ் புக்காயிடும். அதுக்கப்புறம் நீ செஞ்சதா இருந்தா என்ன, அவன் செஞ்சதா இருந்தா என்ன? கேசை அமுக்கப்பார்ப்பாங்க. அவன் பண்ணியிருக்கலாம் என்ற சந்தேகமே அவனை நாசமாக்கிடும்.”

காரோட்டி இருப்பதை நாகப்பன் ஜாடையில் திருஞானத்துக்கு உணர்த்தினான்.

“அட, நம்ம அண்ணாதுரை! நம்ம டிரைவருக்கு அடுத்த வாரம் ஓவர்சீஸ் ப்ரமோஷன். புரியலியா? எங்க சிட்ஃபண்டோட சிங்கப்பூர் கிளைக்கு அண்ணாதுரையை அனுப்பப் போறோம். இல்லை அண்ணாதுரை?”

“ஆமாம் சார்.”

அண்ணாதுரைக்கு ஓர் அப்பாவியின் வாழ்வை இவர்கள் அநியாயமாகச் சூறையாடப் போகிறார்களே என்ற நினைப்பு, அவனை வருத்தப்பட வைத்தது. கதிரேசன் என்ற பெயர் மனத்தில் ஆழமாகப் பதிந்தது.

நாகப்பனுக்கு திருஞானத்தின் செய்கைகள் ஆச்சரியமாக இருந்தன. எவ்வளவு நுணுக்கமாக, வெளிப்படையாக இல்லாமல், டிரைவருக்கு அவன் சொல்ல நினைத்ததைப்

**சத்தியப்ரியன்**

புரிய வைத்து விட்டான்!

"நமது அடுத்த இலக்கு தாமரையின் அண்ணன் அருணாசலம்" என்றான்.

"பணத்தால அவனை வீழ்த்துறது கஷ்ட மாயிருக்காது" என்றான் நாகப்பன்.

அவன் சொன்னது நிஜம்தான். நாகப்பன், அருணாசலத்தை அவன் அம்மானிடமிருந்து பிரித்துக் கொண்டு வந்து திருஞானத்திடம் அறிமுகப்படுத்தி வைத்தான்.

"அருணாசலம்! இவர் திருஞானம். என் நெருங்கிய நண்பர். ஸ்ரீகணேஷ் க்ரூப் ஆஃப் இண்டஸ்ட்ரீஸ் கேள்விப்பட்டிருக்கிங்களா? இவரு அந்த க்ரூப்பைச் சேர்ந்தவர்."

அருணாசலம் வியப்பில் வாயடைத்து நின்றான். எவ்வளவு பெரிய நிறுவனம்!

"ஒரு சின்ன கடையின் கணக்கு, வழக்கைப் பார்க்கும் எனக்கு முடியைப் பிச்சுக்கலாம்னு இருக்கே, உங்களால் எப்படி அத்தனை நிறுவனங்களையும் கட்டி மேய்க்க முடிகிறது?"

"ரொம்பச் சுலபம். ஒவ்வொரு யூனிட்டிலிருந்து இவ்வளவு லாபம் வர வேண்டும் என்பதைச் சொல்லி விடுவோம். உருட்டி, புரட்டும் வேலை அந்தந்த யூனிட்டின் ஜெனரல் மேனேஜர்கள் பாடு."

"சிந்தூரா டால்கம் பவுடர் உங்க தயாரிப்புதானே?"

"ஆமாம். ஹைதராபாத்தில் ஃபாக்டரி இருக்கு."

"மார்க்கெட்டில் நல்ல பேரு."

"உங்களுக்கு அதன் டிஸ்ட்ரிப்யூஷன் ரைட்ஸ் வேணுமா? ஒரு நயா பைசா செலவு இல்லாம! No bank guarantee; obligant co obligant தொந்தரவு இல்லாம?"

குடைராட்டினத்தில் ஏறி இறங்கியது போலானது அருணாசலத்திற்கு. கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்துவிட்டதா? பழனி நடைப்பயணம் வீண் போகவில்லையா? 'கந்தனிடம் உந்தனையே சொந்தமென விட்டுவிடு, சந்ததிக்கு செல்வமெல்லாம் கூட வருமே' என்ற வாக்கு நிஜமானதா?

"என்ன அருணாசலம், வாயடைச்சு நிக்கிற?"

"அவுகளுக்கென்ன கோடீஸ்வரங்க. அப்படித்தான் பேசுவாக" என்றான் அருணாசலம் ஒப்பினையாக.

"கருக்கடையாப் பேசுறவருப்பு அவுக. இலேசுப்பட்டவுக இல்ல" என்றான் நாகப்பன்.

'விடு! விடு நாகப்பு! நீ புரிஞ்சுக்கினா மாதிரியா எல்லாரும் புரிஞ்சுக்கப் போறாக.

## யாராலயும் பிரிக்க முடியாது!

'கணையாழி'யில நான் இருந்தபோது, அதன் ஆசிரியர் கஸ்தூரிரங்கன், ஐந்நூறு காப்பியை டெல்லிக்கு அனுப்புன்னு சொன்னார். எப்படி அனுப்பணும்னு எனக்குத் தெரியலை. ரயில்வே ஸ்டேஷன் போய் விசாரிச்சேன். முதல்ல 'காம்ளிமெண்டரி' இதழ் கேட்டாங்க. அப்புறம் அதை எடுத்துக்கிட்டுப் போய் கையில கொடுத்துட்டு, புத்தகத்தை பார்சலாகக் கட்டி அனுப்பி வச்சேன். சில நாட்களுக்குப் பிறகு டெல்லியில் இருந்து தந்தி வந்தது. வந்து சேரலைன்னு. என்னன்னு விசாரிச்சா, பார்சலை சரியாக கட்டாததால திருப்பி அனுப்பியிருந்தாங்க. அப்புறம் ஒழுங்கா பார்சல்கட்ட கத்துக்கிட்டேன். எழுதறதுக்கு முன்னால இதைத்

நம்ம இனம் நல்லா இருக்கோணும்னுதான் சொன்னேன். மதுரை ஏஜண்ட்டு ஒரு அய்யமாரு. ரொம்ப எடுத்தெறிஞ்ச பேச்சு. ஸப்-ஏஜண்டுகளை மதிக்கிறதில்லைன்னு புகார் வந்துச்சு. அவ்வளவு பெரிய ஏரியாவை அவனுக்குக் கொடுப்பானேன்னு பார்க்கறேன். வேண்டான்னா விட்டுறலாம்."

"ஆத்தி! கரும்பு சும்மா தின்னாலும் இனிக்கத்தானே செய்யும்" என்றான் அருணாசலம். அவன் அகம் மலர்ந்தது. முகம் பிரதிபலித்தது.

சொன்னதோடு நில்லாமல், அவர்களுடைய சென்னை அலுவலகத்தைத் தனது செல்ஃபோன் மூலம் தொடர்பு கொண்டான்.

"வடபழனியில் ஆற்காடு சாலையில்தானே உங்க அலுவலகம் இருக்கு?"

"ஆமாம்! ஸ்ரீ கணேஷ் டவர்ஸ். அங்கதான் ஃபோன் பண்றேன். யாரு? ஜி.எம். சேல்ஸ் பாஸ்கர் ராவா? ராவ்! நான் திருஞானம்! குட் ஈவினிங். பத்மநாபன்தானே சிந்தூரா டால்கோட மதுரை, ராம்னாட் டிஸ்ட்ரிப்யூட்டர்? மதுரை, திருநெல்வேலியோட அவங்க டிஸ்ட்ரிப்யூஷன் போதும்னு ஒரு நோட் அனுப்பிடுங்க. ராம்னாட், புதுக்கோட்டை மாவட்டங்களுக்கு, நான் புதுசா ஒரு டிஸ்ட்ரிப்யூட்டரை அப்பாயின்ட் பண்ணலாம்னு இருக்கேன். நான் இப்ப அவரைப் பேசச் சொல்றேன். என் பக்கத்தில் தான் இருக்கார். அட்ரெஸ் வாங்கிக்குங்க. என் சிநேகிதர்... அஞ்சு பைசா முன்




தான் செய்தேன். இப்ப கூட உயிர்மை இதழை எங்கிட்ட கொடுங்க. நான் கட்ட றேன். யாராலயும் பிரிக்க முடியாது."

- 'உயிர்மை' ஓராண்டு நிறைவு விழாவில் அசோகமித்ரன்

— அப்பு

படம் : ஸ்ரீஹரி

தொகையா வாங்கக் கூடாது. என் சிநேகிதர் என்பதே முன் தொகைன்றியா?.. கியாரண்டி எல்லாமா? யோவ்! ஃப்ளாட்டர் பண்ணாத! இதோ செல்லை அவரிடம் கொடுக்கறேன்! மிஸ்டர் அருணாசலம்! உங்க அட்ரஸ் கொடுங்க."

அதிர்ச்சியிலிருந்து மீளாமல் அருணா சலம் செல்ஃபோனை வாங்கி, தன் காரைக் குடி முகவரியைச் சொன்னான்.

பாதவிநாயகர் கோவிலைத் தொழுது விட்டு, ஆயிரக்கணக்கான மக்களுடன் தாமரையும், கதிரேசனும் மலை ஏறத் தொடங்கினார்கள்.

''எழுநூறு படியாவது இருக்கும்'' என்றான் கதிரேசன்.

"ஆத்தி!" என்றாள் தாமரை.

பின்னால் வந்த அருணாசலம் தாமரை யையும், கதிரேசனையும் சேர்ந்து பார்த்த தால் எரிச்சலுற ஆரம்பித்தான். இந்தப் போக்கை, பாதயாத்திரையின் கடைசி இரண்டு தினங்களாகக் கண்டு வந்த மாணிக்கத்திற்கு வினோதமாக இருந்தது. ஏன் இவன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்? முத்தையா செட்டியாரிடம் கதிரேசனைப் பற்றி பட்டயம் வாங்கிக் கொண்ட பின்பு, முனைப்புடன் அழகப் பனைப் பார்த்து, கலியாணம் பேசி முடித்து விடுவான் என்றுதான் எதிர்பார்த்தார். நாகப்பனும் தோதாக இவன் கூட சுற்றவே, விஷயம் வெரசா முடிஞ்சிடும் என்றுதான் இருந்தார். ஆனால் நாகப்பனின் சேர்க்கை நல்லதற்கில்லை என்பது புரிய ஆரம்பித்தது. தெய்வசங்கல்பம் என்ன எனத் தெரியாமல் பரிதவித்தார்.

"தாமரை! எங்க கூட வா" என அருணாசலம் இரைந்தான்.

'நீங்க போங்கண்ணே! நான் கதிரு கூட வாரேன்'' என்றாள் தாமரை இயல்பாக.

அருணாசலம் முறைத்தபடி மேலேறினான். புஸ், புஸ்ஸ" என மாணிக்கத்தின் மனைவியும், தன் பருமனான உடலை சிரமப்பட்டுத் தூக்கியபடி படி ஏறினாள்.

நாகப்பனும், திருஞானமும் முற்றிலும் அருணாசலத்தின் மனத்தைக் கலைத்த திருப்தியுடன் ஆயக்குடியிலேயே காரைத் திருப்பிக் கொண்டு, காரைக்குடி நோக்கிக் கிளம்பினார்கள். நாகப்பன் அருணா சலத்திடம், திருஞானம் தாமரையை முறைப் படி கலியாணம் செய்து கொள்ள ஆசைப் படும் விஷயத்தையும் அரசல், புரசலாகச் சொல்லி வைத்தான். நாகப்பனுக்கு கல்லுக் கட்டி கடையில் வேலை பார்க்கும் ராமச் சந்திரன் மூலம் நிறைவேற்றப்பட வேண்டிய செயல்கள் இருந்தன என்பதால், அவனும் பழனி வரை செல்லவில்லை.

லட்சோப லட்ச பக்தர்கள் ஊர்ந்து வரிசையில் செல்ல, கதிரேசனின் க்ரம் பற்றி தாமரையும் முருகன் சந்நிதி நோக்கி நகர்ந்தாள்.

மேற்கு நோக்கிய நிலையில் இறைவன் முருகவேள் நின்று கொண்டிருந்தான். இணையற்ற திருமுகம்; கருணை பொங்கும் கண்கள்; புன்னகை தவழும் திருவாய்; அணி கலனுடன் பூரிக்கும் திருமார்பு; ஒல்லியான இடையில் ஒயிலாக வைத்த இடக்கரம்; ஞானதண்டமேந்திய வலது கரம்; சரணடை யும் திருவடிகள்; அழகிய திருத்தண்டைகள்.

தாரை, தாரையாக தாமரையின் கண்களி லிருந்து கண்ணீர் வழிந்தது. தொழுதாள்.

"ஐயா! முருகவேளே! வள்ளி மணாளா! காதற் பெருங்கடவுளே! இதோ என் அருகில் எந்தக் களங்கமும் இல்லாமல், என் துணையாக நிற்கும் கதிரேசன் காலம் முழுவதும் என்னுடனே இருக்கும் வரம் தா, கடம்பா" என வேண்டி நின்றாள்.

முருகவேள் பேரழகு சிந்தும் முகத்தில் குறுஞ்சிரிப்பைத் தவழவிட்டான். காலத்தைக் கடந்து, அவன் காதலின் சாட்சியாக அப் புன்னகை விளங்கியது.

(தொடரும்)

# அழகிய தீயே

முற்றிலும் மாறுபட்ட முயற்சி... இதுவரை சொல்லப்படாத கதை... தமிழ் சினிமா வரலாற்றில் முதல் முறை... இப்படியெல்லாம் விளம்பரம் செய்யப்படுகிற படங்கள், நம்மை ஏமாற்றிவிடுவதே கடந்த கால வாடிக்கை. ஆனால் 'அழகிய தீயே' அந்த ரகமல்ல. கொடுத்த வாக்கைக் காப்பாற்றி இருக்கிறார்கள்.

கோடம்பாக்கத்து சினிமா வியாபாரிகள் போட்டு வைத்திருக்கும், செல்லரித்த கோட்பாடுகளைத் தூக்கி குப்பைக் கூடைக்குள் போட்டுவிட்டு, புத்தம் புதிதான ஒரு ஜனரஞ்சக சினிமாவுக்கு முயற்சி செய்திருக்கிறார் இயக்குனர் ராதா மோகன்.



சமுகத்தின் வெவ்வேறு அடுக்குகளைச் சேர்ந்த நாயகனும் நாயகியும், வாழ்க்கை தரும் நெருக்கடியால் முதலில் காதலர்களாக நடிக்கிறார்கள். மீண்டும் நெருக்கடி துரத்த, தவிர்க்க முடியாமல் பதிவுத் திருமணம் செய்து கொள்ளும் அவர்கள், ஒரே வீட்டில் நல்ல நண்பர்களாக வசிக்கிறார்கள். அவர்களது நட்பு தனது அடுத்த பரிணாமத்தை எப்படி எட்டுகிறது என்பதை, உணர்ச்சிக் கவிதையாக வடித்திருக்கும் இயக்குனருக்கு, யதார்த்தத்தின்மீது அழுத்தமான நேசிப்பு இருக்கிறது. இன்றைய தேதிக்கு தங்கள் திறமையைவிட ஆபாசத்தை அதிகம் நம்பும் சில இளம் இயக்குனர்களின் கையில், இது போன்றதொரு கதை கிடைத்திருந்தால், என்ன ஆகியிருக்கும் என்பதை நினைத்துப்பார்க்கவே அச்சமாக இருக்கிறது.

இந்தப் படத்தின் கதை இளைஞர்களைச் சுற்றிப் பின்னப்பட்டது என்றாலும், எந்த வயதினரும் குடும்பத்தோடு போய் கொண்டாட வேண்டிய தகுதியோடு, நம் வீட்டிற்கு அருகில் நடப்பது போலவே படமாக்கப்பட்டிருப்பது பலம்.

எல்லா நடிகர், நடிகைகளும், பாத்திரங்களாக மட்டும் தங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் இந்தப் படத்திற்கு, கதையோட்டத்தை யொட்டிய ஆரோக்கியமான நகைச்சுவை, மேலும் இயல்பு கூட்டுகிறது.

நிஜத்தில் பேசும் வார்த்தைகளோடு, கொஞ்சம் கவித்துவம், கொஞ்சம் தத்துவம் கலந்து வசனம் எழுதியிருக்கும் விஜி, திரைக்கதையின் வேகத்தைப் புரிந்து கொண்டு படத்தைத் தொகுத்திருக்கும் முகாசி விஸ்வநாத், குறைவான இரைச்சலோடு மெட்டுக்களில் வரிகளை விடுவித்திருக்கும் இசையமைப்பாளர் ரமேஷ் விநாயகம், என எல்லோருமே ஆத்மார்த்தமாய் உழைத்திருக்கிறார்கள். இவர்களை விடவும், இந்தக் கதை மீது நம்பிக்கை வைத்து பணம் போட்ட தயாரிப்பாளர், சினிமாவை ஆழ்ந்து காதலிப்பவராக இருக்க வேண்டும். அழகிய தீயே, கதகதப்பான கவிதை.

**- 'விஷுவல்'தாசன்**

● அபவ் அவரெஜ்

**மேஷம்:** தெளிவான மன நிலையோட எல்லாக் காரியங் களையும் சாதிக்கிற தெம்பு உங்ககிட்டே இருக்கு! குறிப்பாக, உத்தியோகஸ்தர்களுக்கு அனு கூலமான வாரமா இருக்கும். பதவி உயர்வு, இட மாற்றம்னு உங்கள் கோரிக்கைகள் நிறைவேறும். சுய தொழில் செய்யறவங்களுக்கு பிரகாசமான வாய்ப்புகள் இருக்கு. வாகனம், டிராவல்ஸ், இயந்திரம், தொழில் உபகரணங்கள் ஆகிய துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. குரு பலம் நிறைந்திருப்பதால், குடும் பத்தில் மகிழ்ச்சி நிலவும். குல தெய்வப் பிரார்த்தனை நலம் தரும்.

# நடக்குமென்பார்; நடக்கும்!



சோனியா அகர்வாலுக்கு (மிதுனம்) குரு பார்வை பலமாக இருப்பதால் சுப மங்கள காரியங்கள் நடக்க வாய்ப்பிருக்கிறதாம்!

**ரிஷபம்:** ரிஷபராசிப் பெண்கள் போட்டு வைச்ச திட்டமெல்லாம், லட்டு லட்டாக நடக்கப் போகுது. அதன் பலனாக, குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை இருக்கும். இதுவரை உறவு களில் இருந்து வந்த விரோதம் மறைந்து, கலகலப்பு திரும்பும். உடல் ஆரோக்கிய மேன்மை அடை யும். மாணவர்கள் சகல வகையிலும் முன்னேற்றமே காண்பார்கள். தெய்வ பலம் அதிகரிக்க விரும்புகிறவர்கள், சனி கிரகப்ரீதி செய்ய வேண்டும். ஞானிகள் தரிசனம் மன அமைதி தரும்.

**மிதுனம்:** அகலக் கால் வைத்து, அவஸ்தையான அவஸ்தைபட்டுக் கொண்டிருந்தீர்கள் அல்லவா? இந்த வாரம் எதிர்பாராத இடத்திலிருந்து பண உதவி வந்து சேர்ந்து, வயிற்றில் ஆவின் பால் வார்க்கும். கவலை வேண்டாம். குரு பார்வை காரணமாக சுப மங்கள காரியங்கள் நிறைவேறும். உடன் பிறந்தவர்கள் அனுகூலமாக இருப்பார் கள். மக்கள் நலனில் கவனம் தேவை. பூர்வீக சொத்து விவகாரங்கள் அனு கூலமான திருப்பம் தரும். பயணங்களில் எச்சரிக்கை இருக்கட்டும். பெண்களுக்கு அதிர்ஷ்டமான வாரம்.

**கடகம்:** உங்கள் ராசியில், குருவும்

## இது நல்ல நேரம்

| கிழமை | தேதி | நட்சத்திரம் | திதி | மற்றவை |
|---|---|---|---|---|
| புதன் | ஆகஸ்ட் 11 (ஆடி - 27) | மிருகசீரிஷம் | ஏகாதசி | ஸர்வ ஏகாதசி |
| வியாழன் | ஆகஸ்ட் 12 (ஆடி - 28) | திருவாதிரை | துவாதசி | ராமேஸ்வரம் திருவாடானை உற்சவம் |
| வெள்ளி | ஆகஸ்ட் 13 (ஆடி - 29) | புனர்பூசம் | திரியோதசி | பிரதோஷம் ஸ்ரீவி. ஆண்டாள் பிரம்மோற்சவம் |
| சனி | ஆகஸ்ட் 14 (ஆடி - 30) | பூசம் | சதுர் | விவேகானந்தர் நினைவு நாள் |
| ஞாயிறு | ஆகஸ்ட் 15 (ஆடி - 31) | பூசம் | சதுர் | சுதந்திர தினம் ஆடி அமாவாசை சமுத்திர ஸ்நானம் |
| திங்கள் | ஆகஸ்ட் 16 (ஆடி - 32) | ஆயில்யம் | அமா | படைவீடு ரேணுகாம்பாள் பவனி |
| செவ்வாய் | ஆகஸ்ட் 17 (ஆவணி - 1) | மகம் | பிரதமை | ஸ்ரீவி. கருட சேவை |

செவ்வாயும் இரண்டில் சஞ்சாரம் என்பதால், சகல காரியங்களிலும் வெற்றிக் கொடி கட்டுவீர்கள். குறிப்பாக உத்தியோக விஷயத்தில், உயர் அதிகாரிகளின் பாராட்டு, பதவி உயர்வு, ஊதிய உயர்வு, வாய்க்கும். புதியவர்கள் அறிமுகம் ஏற்பட்டு, அதனால் நல்ல பலன்களும் கிடைக்கும். சுய தொழில் செய்யறவங்க, புதிய முதலீடுகள் செய்யாமல் இருப்பது நல்லது. பெண்களுக்கு, வெளிநாடுகளிலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும். மாணவர்கள் எதிர்பார்த்த நல்ல செய்தி வரும்.

**சிம்மம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும் வாரமாக அமையப் போகிறது. சுப காரியச் செலவுகளுக்காக பேங்க் பாலன்ஸ் கரையும். அதனல் என்ன? கல்யாணம், மக்கட்பேறு பாக்கியம், புதுமனை புகுவிழா என வீடே களை கட்டப் போகுதே. பெண்களுக்கு உற்சாக மான வாரம். பொன், பொருள் ஆபர ணச் சேர்க்கை ஏற்படும். ஆரோக்கிய மேன்மை, சரளமான பணவசதி, தெய்வீக ஈடுபாடு, உல்லாசப் பயணம் என ஏற்றம் தரும் வாரமாக அமைந்துள்ளது.

என்ஜாய்!

**கன்னி:** கல்வி, கேள்வி, எழுத்து, ஆராய்ச்சி, விஞ்ஞானம் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள், நல்ல முன்னேற்றம் அடையும் காலமிது. பதினொன்றில் சூரியன் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருப்ப தால், அரசாங்க விவகா ரம் அனுகூலமாகும். அரசியல்வாதிகளின் மதிப்பு, அந்தஸ்து, செல் வாக்கு உயரும். பிரபு தனவான்களின் நட்பு கிடைத்து, அதனால் பலவகையிலும் சாத கமான முன்னேற்றத் தையே பெறுவீர்கள். கூட்டுத் தொழில்களில் அபிவிருத்தி இருக்கும். மாணவர்கள் மேற்படிப்புக்காக வெளி நாடு போவார்கள். இடர்கள் வரும் போது, ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமியைத் தரிசித்து வரவும். மன அமைதி கிடைக்கும்.

**துலாம்:** நாயர் கடையில் சிங்கிள் டீக்கு கடன் சொல்லி வைத்த காலம் எல்லாம் மீட்டர்கேஜ் ரயிலேறிப் போயாச்சு! இப்ப காசு கொட்டப் போகுது. தவிட்டைத் தொட்டாலும் ஹால்மார்க் தங்கமா மாறப் போகுது. உத்தியோகஸ்தர்களுக்கும், வியாபாரி களுக்கும் சிறப்பான வாரம். பொருளா தார மேன்மை கண்டிப்பாக இருக்கும். வெளிநாட்டுப் பயணம் மகிழ்ச்சி தரும். கூட்டுத் தொழில்களில் அனுகூலமான திருப்பம் ஏற்படும். கலைத்துறையைச் சேர்ந்தவங்க, நல்ல முன்னேற்றம் காண்பார்கள். வீடு, மனை, நிலம், ரியல் எஸ்டேட், இனங்களில் எக்கச்சக்க வருமானம் இருக்கும். உடல் ஆரோக்கி யத்தில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** குடும்பஸ்தானத்தை

## ஆகஸ்ட் 11 முதல் 17 வரை

குருபகவான் பார்ப்பதால், சுப காரியங்கள் நிறைவேறும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். சொத்து, வீடு, விவகாரங்களில் அனுகூலமான திருப்பம் ஏற்படும். அரசாங்க விவகாரங்கள் அனுகூலமாகும். பெண்களின் எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தவர்களால் நல்ல ஆதாயம் உண்டு. வயதானவர்கள் பயணத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மனைவி, மக்கள் உடல் நலன் பாதிக்கக் கூடும், எச்சரிக்கை. மாணவர்களின் திறமையும் உழைப்பும் வீண் போகாது என்றாலும், அஜாக்கிரதையாக இருக்கக் கூடாது. தானதருமம் நலம் தரும்.

**தனுசு:** காத்திருந்த நல்ல காலம் கைக்கு எட்டும் சமயம் வந்தாச்சு. ஆக்கப் பொறுத்தீங்க, ஆறப் பொறுக்கக் கூடாதா? உங்கள் ராசி நாதன் குருபகவான், 9ம் இடத்தில் செவ்வாய், புதனுடன் கூடி சஞ்சாரம் என்பதால், எடுத்த காரியங்களில் வெற்றிமேல் வெற்றியே காணச் செய்யும். தாராளமான பண நடமாட்டம் இருக்கும். புதிய தொழில் யுக்திகள் 'கிளிக்' ஆகி, வியாபாரத்தில் திருப்பம் ஏற்படும். ஏற்றுமதி இறக்குமதி லாபம் தரும். பெண்கள் மனமகிழ்ச்சி கொள்வார்கள். நவக்கிரக சாந்தி, ஹோமம் செய்தால் தடைகள் யாவும் நீங்கும்.

**மகரம்:** 'மாமியார் உடைச்சா மண்சட்டி, மருமகள் உடைச்சா பொன் சட்டி'னுதான் இத்தனை நாளும் உங்களை அலுவலகத்திலே ஏய்ச்சுக்கிட்டிருந்தாங்க! இனி அந்தப் பிரச்னை வாட்டாது. சக ஊழியர்களின் ஒத்துழைப்போடு, உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். வேலையில் கூடுதல் கவனம் கொண்டு உழைத்தால், சகஜமான நிலைமை உருவாகும். அலுவல்களிலும், வியாபாரத்திலும் புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடவும். கூட்டுத் தொழில்களில் மாமூல் பலன்கள் தடைப்படாது.

**கும்பம்:** உத்தியோகத்தில் அனுகூலமான திருப்பம் ஏற்படும். சுயதொழில் வியாபாரத்தில் எதிர்பாராத முன்னேற்றம் ஏற்பட்டு, 'ஓகோ'னு உசந்துடுவீங்க. கடன் தொல்லை இருக்காது. வெளியூர் அல்லது வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல தகவல்கள் வந்து சேரும். பெண்கள் நினைத்த காரியம் நடக்கும். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். மாணவர்கள் வெற்றி நடை போடுவாங்க.




''கற்பனைக் குதிரை ஓடவே மாட்டேங்குது டாக்டர்!''
''நான் என்ன செய்ய முடியும்? வெட்னரி டாக்டரிடம் போங்க!''
- உ. ராஜாஜி

தெய்வீகப் பிரார்த்தனை, தான தருமம், மகான்கள் தரிசனம் மூலம் நன்மைகள் பெறலாம்.

**மீனம்:** 2ல் ராகு, 8ல் கேது என்பதால், வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. கணவன் - மனைவிக்கு இடையே சலசலப்புகளும், கருத்து வேற்றுமைகளும் நிகழும். விட்டுக் கொடுத்து விவேகத்துடன் நடந்து கொண்டால், உறவு விரிசல்களைத் தவிர்க்கலாம். வார இறுதியில் உடல் நலம் பாதிக்கப்படலாம். அதிலும் கவனத்துடன் நடந்து கொண்டால், சிக்கல்கள் ஏற்படாது. சனி, குரு, ராகு, கேது, ப்ரீதியுடன் சிவதரிசனம் செய்வது பிரச்னைகளைத் தீர்க்கும்.



# பெல்ஹாம் பெண்ணே

பொறுப்பான சினிமா நிருபரென்றால், துணை நடிகர்களைப் போல, ஸ்டுடியோக்கள் பக்கம் சுற்றியபடியே இருக்க வேண்டும். ஆனால் இதில் இனிமையான ஆபத்துகளும் உண்டு. லட்சுமிராய் போன்ற கோதுமை நிறப் பதுமைகளைப் பார்க்க நேர்ந்தால், அந்தக் கணமே ரிப்போர்ட்டிங்கை மறந்து, கவிஞனாக முடிசூட்டிக் கொள்ளும் ஆபத்து நேர்ந்துவிடுகிறது. இப்படித்தான் லட்சுமி ராயை முதல்முறையாகப் பார்த்ததும், "பேனா வில் மை இல்லாமல் உதறியபோது,

மைபூசிய உன் விழிகளை என் கையருகில் கொண்டு வந்தாய்!'' என்ற கவிதை (?)யை எழுதி அவரிடம் நீட்டினோம். ''ச்சீய்'' என்ற படி நகர்ந்தவரை அடுத்தமுறை பார்த்த போது, கண்களின் மை குறைந்திருந்தது. ''எல்லாம் உனக்காகத்தான் ஸ்ரீ!'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். நமது கண்களோ, மெல்லக் கலங்கி, ''என்னை இழந்ததாய் நினைக்கும் போதெல்லாம், நீ என்னருகில் இருந்து விடுகிறாய்.'' என்பதாய் அடுத்தக் கவிதை அவதரித்தது.

''என்ன நீ! அடிக்கடி நாம் சந்தித்துக் கொள்கிறோம். ஆனால் என்னை ஒருமுறை கூட பேட்டியெடுக்கவில்லையே?'' என்று ராய் அதட்டலாகக் கேட்டபோதுதான், ''சரி உங்களைப் பற்றிச் சொல்லுங்கள்'' என்று ராயின் முகத்தைப் பார்க்க ஆரம்பித்தோம். ''கலக்கல், கற்க கசடற, குறுக்கெழுத்து இவையெல்லாம் என்னவென்று தெரியுமா?'' என்றார். ''சொன்னால்தானே தெரியும்'' என்றதும் வந்தது கோபம்! ''அடப்பாவி! நீயெல்லாம் ஒரு நிருபரா? நான் பிஸியாக நடிக்கும் மூன்று படங்களின் தலைப்புகள்'' என்று தலையில் செல்லமாகக் குட்டினார்.


உற்சாகம் தொற்றிக் கொள்ள, பேட்டி சூடு பிடித்தது. ''உங்களுக்கு எந்த ஊர் சொல்லுங்கள்'' என்றதும் ''நான் பெல்ஹாம் பெண்'' என்றார். அவ்வளவுதான். ''பெல்ஹாம் பெண்ணே, நீ யாரோ?'' என்று ரோஜாக் கூட்டம் ஸ்ரீகாந்த் போல ஒற்றை வரியை உல்டா செய்து பாட, ''நிறுத்து! நிறுத்து! நான் மிஸ் பெல்ஹாம் 2002 - 2003. இரண்டு வருடம் தொடர்ந்து பெல்ஹாம் அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன்'' என்றும் உச்சஸ்தாயில் குரல் கொடுத்தார்.

''உங்கள் ஊரில் அழகிப் போட்டிக்கு வருகிற நடுவர்களுக்கெல்லாம் பார்வையில் பிரச்னையா?'' என்று கிண்டலடிக்கப் போய், ''அடப்பாவி! என்னைப் பற்றி இதுவரை நீ எழுதிய கவிதைகள் எல்லாம் கப்சாவா?''

# நீ யாரோ?

என்றபடி என் குரல் வளையை நோக்கி கைகளை நீட்டினார். ''தேவதைகள் ஒரு போதும் கொலை செய்வதில்லை'' என ஐஸ் வைத்ததும் ''நல்லா பேசு! பேட்டியை கோட்டை விட்டுரு'' என்று தன்னைப் பற்றிய விஷயங்களை அடுக்க ஆரம்பித்தார்.

''மும்பையிலே பத்மினி ஸ்கூல் ஆஃப் ஆக்டிங்கில் ஆறு மாதம் நடிப்பு கத்துகிட்டேன். சின்ன வயசுலேர்ந்து வெஸ்டர்ன் டான்ஸ், அப்புறம் மாடலிங் பயிற்சி முடிச்சேன். தமிழ்ப் படத்துலே தான் முதல் முதலா நடிக்கணும்கிறது திட்டம். ஆனால் கன்னட சூப்பர் ஸ்டார் ராஜ்குமாரின் புதல்வர், ஷிவ் ராஜ் குமாரோட 'வால்மீகி' படத்தில் நடிக்க அழைப்பு வந்தது. அதில் நடிச்சு முடிச்சுட்டு நேரே சென்னைக்கு வந்துட்டேன். இங்கே விஜய்கூடத் தான் நடிப்பேன்னு அடம் பிடிச்சேன். ஆனால் விஜய்யோட தம்பி விக்ராந்துக்கு ஜோடியா 'கற்க கசடற' படத்துலே நடிக்க வெச்சுட்டாங்க. அப்புறம் 'கலக்கல்'ன்னு ஒரு கலக்கலான இளமைப் படம், குறுக்கெழுத்து என் தலையெழுத்தையே மாத்தினாலும் மாத்திடும்'' என்று சொல்லிக் கொண்டே போன லட்சுமிராய், பி.எஸ்.சி. பயோடெக் படிப்பை பாதியில் விட்டுவிட்டு நடிக்க வந்தாராம். கடவுளே! இத்தனை நல்ல படிப்பை சினிமாவுக்காக காவு கொடுக்க வேண்டுமா? என்று உச்சுக் கொட்டினால் ''படிப்பெல்லாம் அப்புறம்!



முதல்லே பணம்! பொழைக்கத் தெரியாத ஆளா இருக்கியே'' என்று இந்த முறை கொஞ்சம் அழுத்தமாகவே நம் தலையில் குட்டிய ராயின் அப்பா, பெல்காமில் ஒயின்ஷாப் வைத்திருக்கிறாராம். ''அப்பா, செய்வது மது வியாபாரம். பெண், தமிழ் ரசிகர்களை மயக்கத்தில் ஆழ்த்த வந்துவிட்டார்.'' பேட்டிக்கான கடைசி 'பஞ்ச்' வரிகள் கிடைத்துவிட்ட சந்தோஷத்தில், இந்த முறை கவிதை எழுதுவதைத் தவிர்த்துவிட்டு, கட்டுரை எழுத ஆரம்பித்தோம்.


- ஸ்ரீ

படங்கள் : கலக்கல் படத்திலிருந்து



• விழாவில்

# அமைச்சரைத் திருத்திய ஆலோசகர்!



• ஜேக்கப்

**கா**லை மணி 8.40. மௌபரேஸ் சாலையில், பள்ளிக் கூட பஸ்ஸைத் தவற விட்டு விட்ட இரண்டு மாணவர்கள், கையைப் பிசைந்து கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். அன்று மாதாந்திரத் தேர்வு வேறு! சாம்பல் நிறக் கார் ஒன்று அப்போது அவர்கள் அருகே வந்து சட்டென்று நின்றது. "ஏறி உட்காருங்கள்!" என்றார், காரை ஓட்டி வந்தவர். இரண்டு மாணவர்களும் உட்கார்ந்து கொண்டார்கள். "உங்கள் தலைமை ஆசிரியரை கார் டிரைவர் போல நடத்தலாமா?" என்று காரோட்டி வந்தவர் கேட்டதும், ஒரு மாணவர் பதறிப்போய் எழுந்திருந்து, முன் இருக்கையில் அவரோடு அமர்ந்து கொண்டார். பள்ளியில் உள்ள சின்னச் சின்னக் குறைகளை இரண்டு மாணவர்களும் சொல்லிக் கொண்டே வந்தார்கள், பள்ளி வந்து சேரும் வரை. அடுத்த இரண்டு வாரங்களில் மாணவர்கள் குறிப்பிட்ட குறைகள் எல்லாம் நீக்கப்பட்டிருந்தன! முன்னால் வந்து அமர்ந்த மாணவர்: எம்.எஸ். ஆனந்த். (இன்று ஐ.ஐ.டி. இயக்குனர்!) காரோட்டி வந்தவர்: குருவில்லா ஜேக்கப். மெட்ராஸ் கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர்!

மறைந்த குருவில்லா ஜேக்கப்பின் நூற்றாண்டு விழாவை, அவருடைய முன்னாள் மாணவர்கள் ('ஹிந்து' ராம், பிரேக்ஸ் இண்டியா எஸ்.விஜி, எம்.ஆர்.எஃப். மம்மன் உட்பட) அமர்க்களமாகக் கொண்டாடினார்கள்.

"நான் அந்தப் பள்ளியில் படித்த மாணவன் அல்ல. அப்படி இருந்தும், இந்தப் புகழ் பெற்ற முன்னாள் மாணவர்களுடன் சேர்ந்து பாராட்ட என்னை அழைத்ததற்கு நன்றி" என்றார் விண்ணியல் ஆராய்ச்சி நிபுணர் டாக்டர் கஸ்தூரிரங்கன்.

"அவருடைய பைபிள் வகுப்புகள் சுவாரசியமா இருக்கும். மத போதனை மாதிரியே இருக்காது. இத்தனைக்கும் பள்ளியில் பெரும்பாலான மாணவர்கள் இந்து. அவர் யாரையும் (மதம்) மாற்றிவிடவில்லை!" என்றார் மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம்.

"அவருடைய அறையை அடுத்த ஆடியோ விஷுவல் ஹாலில் கிரிக்கெட் ஆடியதற்காக அவரிடம் பிரம்படி வாங்கியதும் உண்டு" என்று சிரிப்புகளுக்கு இடையே உண்மையைச் சொன்ன சிதம்பரம், 'ஐம்பதுகளில் நான் அங்கே படித்த காலம், பொற்காலம்!" என்றார் நெகிழ்வுடன்.

**பி**ரதமரின் முக்கிய ஆலோசகர் பதவி வகிக்கும் எம்.கே. நாராயணன், நாற்பதுகளில், குருவில்லா ஜேக்கப் தலைமை ஆசிரியராக இருந்த போது அங்கே பயின்றவர். "ஐம்பதுகள் அல்ல பொற்காலம். உண்மையில் நான் படித்த நாற்பதுகள்தாம் நிஜமான பொற்காலம். பாருங்கள், அமைச்சரின் வார்த்தைகளை நான் திருத்த வேண்டியிருக்கிறது!" என்று கிண்டலாய்ச் சொன்னார் நாராயணன்.

**வி**ழா முடிந்ததும், தமது முன்னாள் ஆசிரியர்களில் ஒருவரான ஆசிரியர் சவரிராயனை நோக்கி மளமளவென்று மேடையிலிருந்து இறங்கி வந்து, ப. சிதம்பரம் வணங்கியது நெகிழ்ச்சியான காட்சி!

- சாருகேசி

# அரசியல் கணக்கு!

வீர வன்னியப் பேரவையின் பொதுக் குழுவைக் கூட்டி, அரசியல் இயக்கமாக மாற்ற, கருத்துக் கேட்டார் ஜெகத்ரட்சகன்! எல்லோருமே 'ஆமாம்' போட, மௌனம் காக்கிறார் ஜெகத்ரட்சகன். ஏனாம்? சட்டமன்றத் தேர்தலின் போது எப்படியும் சீட்டு பங்களிப்பில், பா.ம.க. முறைத்துக் கொண்டு வெளியே போய் விடுமாம். அப்போது அரசியல் இயக்கமாக மாறும் வன்னியர் பேரவை, கலபமாக தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்று விடுமாம். இது ஓர் அரசியல் கணக்கு!



* ஜெகத்ரட்சகன்

நாமக்கல் ஜெயக்குமாரைப் பார்த்து காங்கிரஸில் பொறாமைப் படுபவர்கள்தான் அதிகம் இருக்க முடியும். பல காங்கிரஸ் பிரமுகர்கள் மாதக் கணக்கில் தில்லியில் முகாமிட்டு, எம்எல்ஏ., எம்.பி. ஸீட் எதுவும் கிடைக்காமல், வெறும் கையுடன் திரும்புவது சகஜம். ஆனால் கமுக்கமாக இருந்துவிட்டு, அகில இந்திய காங்கிரஸின் செயலாளர் பொறுப்பை பெற்று வந்திருக்கிறார் இவர்.

''இவரைப் பார்த்து பொறாமைப் படத் தேவையில்லை. வெளிநாட்டில் படித்தது உட்பட எட்டு பட்டங்கள் வாங்கியிருக்கிறார். இது தவிர, தாழ்த்தப்பட்டோர் நிதி நிறுவனத்தில் உயர் அதிகாரியாக இருந்து, அதை ராஜினாமா செய்துவிட்டு கட்சியில் சேர்ந்தவர்'' என்கிறார் ஜெய்குமாரின் தோழர் ஒருவர். இவருக்கு தில்லியில், மகாராஷ்ட்ரா முதல்வர் ஷிண்டேயும், ஆந்திர காங்கிரஸ் தலைவரான ஜி. வெங்கடசாமியும் பக்க பலமாம்!

பா.ம.க. தரப்பிலிருந்து 'தமிழோசை' என்ற பத்திரிகை வெளிவர இருக்கிறது. பா.ம.க. குடும்பத்திலிருந்து ஏற்கெனவே 'கனல்', 'பெண்ணே நீ', பசுமைத் தாயகம்' என்று இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

அரசியல்வாதிகள் பெரும்பாலானோர் (ஜெ.யிலிருந்து கண்ணப்பன் வரை) நியூமராலஜிபடி பெயர் மாற்றிக்கொள்ள கிளம்பிவிட்டார்கள்.

''மூன்று வருஷத்துக்கு முன்னால நியூமராலஜின்னா யாருமே திரும்பிப் பார்க்க மாட்டாங்க. இப்ப இது ஒர்க் அவுட் ஆகறதால அரசியல்வாதிகள் வர ஆரம்பிச்சுட்டாங்க. வாழ்க்கை பிஸியா யிடுச்சு எங்களுக்கு'' என்கிறார் அரசியல்வாதிகளுக்குப் பெயர் மாற்றும் ஜோஸியர் ஒருவர்.



* நாமக்கல் ஜெயக்குமார்

- கௌசி

படங்கள் : ராஜன்

# அரவிந்த அமுதம்-19

பாரதியாரின் நண்பர்களில் மிக முக்கியமானவரான அரவிந்தர் ஒரு பெரிய ஞானி... பாரதியாரின் வாழ்க்கையில் மிக நெருக்கடியான நிலையில், அரவிந்தர் புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார். அச் சமயத்தில் இந்திய அரசாங்கத்தின் அடக்குமுறைக் கொடுமைகளினால் பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த எல்லாப் பத்திரிகைகளும் நின்று போய் விட்டன. தன்னுடைய நாட்டுச் சேவைக்கு இனிமேல் வாய்ப்பு இல்லாமலேயே போய்விடுமோ என்று பாரதியார் மனம் குமுறிக் கொண்டிருந்த வேளையில், அரவிந்தரது விலைமதிப்பற்ற தோழமை அவருக்குக் கிடைத்தது.

'பாரதியாரின் வாழ்க்கையும் நூல்களும்' என்ற ஆய்வு நூலில்
பேராசிரியர் வை. சச்சிதானந்தன்.

புதுவையில் சங்கரன் செட்டியார் வீட்டில் இருந்தபோது, தன்னளவில் பல பரிசோதனைகளைச் செய்து பார்த்தார் ஸ்ரீஅரவிந்தர். வேதநெறிகளையும் அது கூறும் விதிகளையும் தன்னில் சோதித்துப் பார்த்து, அதன்பின் அவற்றின் உண்மையுணர்ந்து ஏற்பதுதானே அரவிந்தரின் வழக்கம்? மெய்ஞ்ஞானத்தை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து பார்ப்பதுதானே அவரது வழி?

உண்ணாவிரதமும் அத்தகைய ஒரு முயற்சிதான். தாவரங்கள் வாய்திறந்து உணவா சாப்பிடுகின்றன? ஆனால் அவை தங்களுக்குத் தேவையான சக்தியைத் தாங்களே தயாரித்துக் கொள்ள

## திருப்பூர் கிருஷ்ணன்

வில்லையா? தாவரங்களால் அப்படித் தயாரித்துக் கொள்ள முடிகிறபோது, மனிதர்களால் ஏன் முடியாது? அதையும் பார்த்து விடுவோம். கடும் உபவாசம் இருக்கத் தொடங்கினார் அரவிந்தர்.


ஏற்கெனவே சிறையில் இருந்தபோது அவர் பதினொரு நாட்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டதுண்டு. சற்று எடை குறைந்ததே தவிர, மற்றபடி உடல் வலிமையில் எந்தப் பாதிப்பும் தெரியவில்லை அப்போது. இப்போது இருபத்தி மூன்று நாட்கள் உண்ணாவிரதம். ஆனால் சாப்பிடுவதைத் தவிர மீதி எல்லா வேலைகளையும் வழக்கம் போல் செய்து கொண்டிருந்தார். நாள்தோறும் சுமார் எட்டு மணி நேரம் நடப்பவர் அவர். உண்ணாவிரத நாட்களிலும் தொடர்ந்து நடந்தார். மூளை வேலையையோ, பிற அலுவல்களையோ, யோக சாதனைகளையோ, எதையும் நிறுத்தவில்லை. அவருக்கு உடல்ரீதியாக எந்தவித அலுப்போ, களைப்போ ஏற்படவில்லை.

அவரது உபவாசத்தால் பெரிதும் வருந்தியது செட்டியாரின் மனம். தெய்வமே வீடு தேடி வந்திருக்கிறது என்று பார்த்தால், தெய்வம் நைவேத்தியத்தை ஏற்க மறுக்கிறதே! சாப்பிடாமல் இருந்தால் உடம்பு என்னத்திற்காகும்! சாப்பிட்டு விட்டுத் தியானமோ, யோகமோ எதை வேண்டுமானாலும் செய்யலாமே! திரும்பத் திரும்ப அரவிந்தரிடம் குழந்தை போல் சாப்பிடுமாறு வேண்டினார் செட்டியார். அவரது தாய்மைக் கனிவான உபசரிப்புக்குக் கட்டுப்பட்டது அரவிந்

## தெய்வீக மலரைத்

தரின் அன்புள்ளம். இருபத்தி மூன்று நாட்களுக்குப் பின் உபவாசத்தை முடித்துக் கொண்டார் அவர். அப்போதும் பொதுவாக உபவாசம் இரு...

வர்கள் செய்கிற முறைப்படி விரதத்தை முடிக்கவில்லை. அதாவது எலுமிச்சைச் சாறு சாப்பிட்டோ, முதலில் குறைவாகச் சாப்பிட்டுப் பின், சிறிது சிறிதாக அதிகப்படுத்தியோ,



அவர் உண்ணவில்லை. உபவாசம் முடிந்த உடனேயே, முன்போல் சாப்பிடலானார். அப்பாடி! செட்டியாரின் மனம் அரவிந்தர் உண்பதைக் கண்ட பின்தான் நிம்மதி அடைந்தது.

# தேடிவரும் வண்டுகள்...

பரமஹம்ஸ யோகானந்தர் எழுதிய 'ஒரு யோகியின் சுயசரிதம்' என்ற நூலில், அவர் காலத்தில் ஐம்பத்தாறு ஆண்டுகளுக்கும் மேலாக, உணவு உண்ணாமலே வாழ்ந்துவந்த கிரிபாலா என்ற' பெண்மணியைப் பற்றிய தகவல் வருகிறது. தாவரங்களைப் போல் தம் உடல் மூலமே, இயற்கையிலிருந்து தமக்குத் தேவையான உணவைத் தயாரித்துக் கொள்ளும் சக்தி, தமக்கு அருளப்பட்டதாக யோகானந்தரிடம் சொல்கிறாள் அந்தப் பெண்மணி. ஆனால் அது எவ்விதம் என்ற ரகசியத்தைப் 'பிறருக்கு

அறிவிக்கத் தமக்கு அனுமதியில்லை எனக் கூறி, அதற்கு மேல் தகவல் தெரிவிக்க மறுத்து விடுகிறாள்.

அரவிந்தரின் அன்பர் மோனி, அரவிந்தருக்கும் முன்பாகவே, கல்கத்தாவிலிருந்து ஒரு முன்னேற்பாடு போல பாண்டிச்சேரிக்கு வந்திருந்தார். அரவிந்தருடன் விஜய் என்ற இளைஞர் கப்பலிலேயே கூட வந்திருந்தாரே! இந்த இரு அன்பர்களுடன்தான் செட்டியார் இல்லத்தில் வசித்து வந்தார் அரவிந்தர்.


பெரும்பாலும் மாடியிலேயே தம் அறையிலேயே தான் இருப்பார் அவர். மாடியில் குளிப்பதற்கு வசதி கிடையாது. அதற்காக மட்டும் கீழே வந்து செல்வதுண்டு. அரவிந்தரோ, அவருடன் தங்கியிருந்த மற்றவர்களோ தொடக்கத்தில் கொஞ்ச காலம் வெளியே போகாமல், அஞ்ஞாத வாசம் போல் வீட்டிலேயே இருந்து வந்தார்கள். சுமார் மூன்று மாத காலத்திற்குப் பின்தான் மோனி, விஜய் இருவருக்கும் அரவிந்தர் வெளியே சென்று வர அனுமதி கொடுத்தார்.

அரவிந்தர் கல்கத்தாவை விட்டுச் சென்றுவிட்டார் என்பதும், பாண்டிச்சேரிக்குப் போய்த் தங்கியிருக்கிறார் என்பதும் சிறிது காலத்திற்குள் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குத் தெரியவந்தது. உலகெல்லாம் கண்கள் உண்டே அதற்கு! எப்படிக் கல்கத்தாவை விட்டுப் பாண்டிச்சேரிக்குப் போனார் அவர் என்ற மர்மம் தான் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்குத் தெரியவே இல்லை! அரவிந்தர் பெரிய ஆன்மிக ஞானி என்கிறார்களே! ஒருவேளை காற்றாய் மாறி, பாண்டிச்சேரிக்குச் சென்று மறுபடி உடல் பெற்றுவிட்டாரோ! எத்தனை கண்காணிப்பு இருந்தது கல்கத்தாவில்! அப்படியும் ஒருவர் தப்பித்து வெளியேற முடிந்ததென்றால், அது சாமான்ய சித்து வேலை அல்ல. எப்படித்தான் தப்பித்துப் போனார் அவர் என்றறிய இயலாமல், பிரிட்டிஷ் போலீசாரின் தலை சுற்றியது!

மெல்ல மெல்ல அரவிந்தர் பாண்டிச்சேரியில் இருக்கிறார் என்ற செய்தி, அரவிந்தர் சார்ந்திருந்த தேசியக் கட்சித் தொண்டர்களுக்கும் தெரிய வந்தது. அரவிந்தர் முன்போல் அரசியலில் ஈடுபட்டு உழைக்க வேண்டும் என, அவருக்கு வேண்டுகோள்கள் கடித வடிவில் வந்து குவியலாயின. மீண்டும் அரசியலுக்குத் திரும்பும்படி மகாத்மா தன் புதல்வர் தேவதாஸ் மூலம் அரவிந்தரை அழைத்தார். லாலா லஜபதிராய் அரவிந்தரை நேரில் சென்று அழைத்தார். சிறையிலிருந்து அரவிந்தருக்கு விடுதலை வாங்கித் தந்த சித்தரஞ்சன் தாஸ், அரவிந்தர் மறுபடி சுதந்திரப் போரில் ஈடுபட வேண்டும் என வேண்டிக் கடிதம் எழுதினார்.

## அருள்வாக்கு

ஒருத்தர் அம்மா - அப்பா இரண்டு பேருக்கும் புத்ரராயிருந்தாலும், லோகம் பூராவிலுமே வழக்கத்தில் அப்பா தான் head of the family-யாகக் கருதப்படுவதற்கேற்ப, 'இன்ன அப்பாவுடைய புத்ரர்' என்றுதான் சொல்வதாக இருக்கிறது. பத்திரமோ, அப்ளிகேஷன் ஃபாரமோ, எதுவானாலும் இன்றைக்கும் father's name- தான் கேட்கிறார்கள்! இனிஷியலும் அப்படித்தான் போட்டுக் கொள்வதாக இருக்கிறது! இந்த விஷயத்தில் இப்போதும் ஸ்த்ரீ ஸமத்வப் போராட்டக்காரர்கள்கூடப் போராட்டம், agitation ஆரம்பித்ததாகத் தெரியவில்லை! ஒருவேளை இப்போது நானேதான் இதைச் சொல்லி, அது வேறு ஒன்று கிளறிக் கொடுக்கிறேனோ, என்னவோ!



லோகம் பூரா பரவியுள்ள இந்த வழக்குக்கு வித்யாஸமாக, நான் சொன்ன அந்த இடத்தில் (ப்ருஹதாரண்யக உபநிஷத்தின் முடிவுப் பகுதியில்) லிஸ்ட் ஆரம்பத்திலிருந்து ரொம்ப தூரம் வரை, ஒவ்வொரு ரிஷியின் பேரையும், அவர் 'இந்த அம்மாவின் புத்ரர், இந்த அம்மாவின் புத்ரர்' என்பதாகத் தாயார்மார்களின்

இனி சுதந்திரப் போரைக் கண்ணன் வழிநடத்துவான் என்றும், கண்ணன் காட்டிய ஆன்மிக வழியில் தான் முழுமையாக ஈடுபடப் போவதாகவும், இந்த முடிவில் தம் வாழ்நாள் முழுதும் இனி மாற்றமில்லை என்றும் ஸ்ரீஅரவிந்தர் அறிவித்து விட்டார். கடைசிவரை அவர் தம் முடிவில் பின்வாங்கவும் இல்லை.

ஆனாலும் அரவிந்தரிடம் பிரிட்டிஷ் அரசுக்கு, ஓர் எச்சரிக்கை உணர்வு எப்போதும் இருந்துகொண்டே தான் இருந்தது. சூடுபட்ட பூனை அது. அரவிந்தர் தம் பேச்சாலோ, எழுத்தாலோ, மறுபடியும் சூடு போடுவாரோ என்று அது அஞ்சியதில் வியப்பில்லை.

அரவிந்த மலரின் தெய்வீக நறுமணம் மெல்ல மெல்லப் பரவத் தொடங்கியது. அந்த மலரின் ஆன்மிகத் தேனை நாடிப் பல வண்டுகள் உலகெங்குமிருந்து வரத் தொடங்கின. 1910ல் அரவிந்தரைச் சந்தித்தவர்களில் மிக முக்கியமான ஒருவர், பால் ரிச்சர்ட். ஒரு தேர்தல் சம்பந்தமாகப் புதுவைக்கு வந்தார் அவர். அரவிந்தரின் யோக சாதனை பற்றிக் கேள்விப்பட்டு அரவிந்தரைச் சந்திக்க விரும்பினார். அனுமதி கிடைத்ததும் இரண்டு நாட்கள், ஒவ்வொரு நாளும் சுமார் மூன்று மணி நேரம், ஆன்மிக உரையாடலில் ஈடுபட்டார். அவர் கேட்ட பல கேள்விகளில் ஒன்று, தாமரை மலரின் குறியீட்டுப் பொருள் பற்றியது. மனிதனின் ஆன்மிக உணர்வு இறைவனை நோக்கி விரிவதையே தாமரை குறிக்கிறது, என ஸ்ரீஅரவிந்தர் விளக்கினார். பதில்களால் நிறைவடைந்த பால் ரிச்சர்ட்டின் நெஞ்சம், அரவிந்தரின் உயர்வைப் புரிந்து கொண்டது. ஒருசில ஆண்டுகளுக்குப் பின் ஜப்பானில் அறிஞர் கூட்டமொன்றில் பேசும்போது, அவர் தாம் சந்தித்த பெருமகனான ஸ்ரீஅரவிந்தரைப் பற்றிக் குறிப்பிட்டார். "தெய்வீக புருஷர்களை ஆசியாவெங்கும் தேடி அலைந்தேன். அவர்களில் சிறந்தவரைப் புதுச்சேரியில் கண்டேன். அவரே நாளைய உலகை வழிநடத்தப் போகிற ஆன்மிகத் தலைவர். அவர் பெயர் ஸ்ரீஅரவிந்த கோஷ்!" ஒரு பிரகடனம் போல், உணர்வு பூர்வமாக அவர் இதைச் சொன்ன போது, ஜப்பான் அறிஞர்கள் வியந்து கைதட்டினார்கள். இந்த பால் ரிச்சர்ட் வேறு யாருமல்ல. பின்னாளில் அரவிந்த இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டு, தெய்வீக அன்னையாக உயர்ந்த மிர்ரா என்னும் மீராம்பிகையின் கணவர்தான் அவர். மிர்ராவின் கனவில் அடிக்கடி காட்சியாகக் கிடைத்ததுதான், இரண்டு முக்கோணங்களுக்கு இடையேயான தாமரை மலர்க் குறியீடு. பால் ரிச்சர்ட் அதற்குத்தான் விளக்கம் கேட்டறிந்தார் ஸ்ரீஅரவிந்தரிடம்.

ஸ்ரீஅரவிந்தரைச் சந்தித்து அவரால் ஈர்க்கப்பட்ட இன்னொரு பிரமுகர் சுவாரஸ்யமானவர். கவிதைக்கு பாரதி என்றால், கட்டுரைக்கு அவர் என இன்றளவும் கொண்டாடப்படும் தற்கால இலக்கியச் சாதனையாளர். பின்னாளில் தன்னை நாத்திகர் என்று இனங்காட்டிக் கொண்டவர். ஆனால் தம் வாழ்வின் கடைசிச் சில மாதங்களில் இறை நம்பிக்கையோடு வாழ்ந்தவர். 'அக்கிரகாரத்தில் பிறந்த அதிசயப் பிறவி' என்று வேறு குழாமைச் சேர்ந்த சிலரால் புகழப்பட்டவர். பாரதியின் ஆளுமையால் ஈர்க்கப்பட்டு, பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர். அவர்...

(அமுதம் பெருகும்)

---

பேர்களை வைத்தே கொடுத்திருக்கிறது.

'இதென்ன, இப்படிப் பண்ணியிருக்கிறதே!' என்பதற்குப் பதில் ஆசார்யாளின் பாஷ்யத்திலிருந்து தெரிகிறது. என்ன சொல்கிறாரென்றால், "புத்ரன் குணவானாக இருப்பதற்கு ஸ்த்ரீயே - அதாவது அவனுடைய தாயாரே - ப்ரதானமான காரணம் என்பது வெகுவாகப் புகழ்ந்து சொல்லப்படும் விஷயம். ஸ்த்ரீ ஜாதிக்குள்ள அந்த விசேஷத்தினாலேயே புத்ரன் விசேஷம் பெறுவதால்தான் இங்கே ஆசார்ய பரம்பரை இப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது" என்கிறார்.

**- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.**

# கலக்குது பார்

தமிழகத்தின் கடைக் கோடி கிராமம் செவனியம்மாளுக்கு. வானம் பார்த்த பூமி. என்றாலும் கிராமத்து ஜனங்கள் மண் பானையை மறந்து, உலோகப் பானைகளில் சமைக்கத் தொடங்கினார்கள். ஆனால் மண்பாண்டம் செய்வதையே பரம்பரைத் தொழிலாக செய்து வந்த செவனியம்மாள் வீட்டில் மட்டும் சமைக்க வழியில்லை. கணவருக்கு ஒத்தாசையாக களிமண் பிசைந்து, அழகிய பானைகள் செய்த தமது கைகளால் கருவேல முள் வெட்டி, விற்றுவிட்டு அரை வயிறு நிரப்பிக் கொள்ள வேண்டிய அவல நிலை. இந்த நேரத்தில் தான், மகளிர் சுய உதவிக் குழுக்கள் பற்றி செவனிக்குத் தெரிய வர, அதில் சேர்ந்தார்! சேமித்த சொற்பப் பணத்தில் அவரவர்க்குத் தெரிந்த கைவினைப் பொருள்களைச் செய்து விற்க முடிவெடுத்தார்கள். கைமுறைக் காகிதம் மூலம் செய்த அட்டைப் பெட்டிகள், பனை ஓலைப் பொருள்கள், கற்றாழை நாரில் செய்த ஒட்டடைக் குச்சிகள், என்று அவரவருக்குத் தெரிந்த கைவினைப் பொருள்கள் செய்ய, செவனி செய்ததோ டெரகோட்டா பொம்மைகள்!





• பஞ்சாட்சரம்




கைநிறையப் பணம் சம்பாதித்து விடலாம் என்ற கனவுகளோடு, கைவினைப் பொருள்களையும் சுமந்து கொண்டு, அருகிலுள்ள நகருக்கு விற்கச் சென்ற பெண்களுக்கு பெரிய ஏமாற்றம்! விரக்தியோடு வீடு திரும்பியவர்களுக்கு சிப்பா (SIPA-FEDERATION OF SOUTH INDIAN ASSOCIATIONS) என்ற அரசு சாரா தொண்டு நிறுவனத்திடமிருந்து கடிதம் வந்திருந்தது.

"உங்களுக்கு விற்பனைத்திறன் பயிற்சி அளிப்பதும், உங்கள் தயாரிப்புகளை சென்னையில் உள்ள எங்கள் ஷோ ரூம் மூலம் விற்பனை செய்து தருவதும் தான் எங்கள் சேவை'' என்ற தகவல் கிடைத்ததும், சிப்பாவை தொடர்பு கொள்ள, செவனி மட்டுமல்ல, அவரது சுய உதவிக் குழுவினரின் வாழ்க்கையே மாறிப் போய் விட்டது!

மார்க்கெட்டிங் என்றால் என்னவென்று செவனியம்மாளுக்கு இப்போது தெரியும். இதைவிட ஆச்சரியம்! தாங்கள் செய்யும் ஒவ்வொரு கைவினைப் பொருளுக்கும், அதற்கான அடக்க விலையோடு லாபத்தையும் சேர்த்து, விற்பனை விலையை நிர்ணயிக்கும் உரிமையை, 'சிப்பா' தங்களிடமே தந்துவிட்டதை நினைத்து மகிழ்ந்து போகிறார்கள்!

''செவனியின் குழு மட்டுமல்ல, புதுவை உள்ளிட்ட ஐந்து தென் மாநிலங்களில், பொருளாதார ரீதியாக பின் தங்கிய சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவுக் குழுக்கள், தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து விளிம்பு நிலை மக்களின் கைவினைப் பொருள்களையும் கலைப் பொருள்களையும் நூறு சதவிகித விற்பனை உத்திரவாதத்துடன் சேகரிக்கும் 'சிப்பா', ஆண்டுதோறும் அவற்றை



# இந்த ஸ்டைலே!

மூன்று கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்து வருகிறது. ஏற்றுமதிக்கான ஷோ கேஸ் உத்தியாகவும், மாநகர வாடிக்கையாளர்கள், சுற்றுலாப் பயணிகளின் கலைப் பொருள் தாகத்தைத் தணிக்கவும், சென்னை வள்ளுவர் கோட்டத்தின் அருகில் 'சிப்பாஸ் கிராஃப்ட்லிங்க்' என்ற பெயரில் நிரந்தர விற்பனைக் கூடத்தை நடத்தி வருகிறது. இங்கே நடுத்தர மக்களும் கலைப் பொருள்களை விரும்பி வாங்கும் வண்ணம், பத்து முதல் ஆயிரம் ரூபாய் வரையிலான விலையில், வகை வகையான கலை மற்றும் கைவினைப் பொருள்கள். பார்த்தால் 'கலக்குது பார் இந்த ஸ்டைலே' என்று பாடத் தோன்று கிறது. அத்தனை அழகு! அத்தனை நேர்த்தி!

''வாடிக்கையாளர்கள் விரும்பும் தரத்தை உற்பத்தியாளர்களுக்கு எடுத்துச் சொல்லி, தரம் உயர பயிற்சியும் கொடுக்கிறோம். இதனால் நல்ல பொருள், நியாய விலை என்பதுதான் 'சிப்பா'வின் வெற்றி ரகசியம். மேலும் 'ஃபேர் டிரேட் ஸ்டாண்டர்டு'ஆக உருவாக்கப்பட்டிருக்கும் ஒன்பது தரக் கொள்கைகளின் அடிப்படையில், கலைப் பொருள்களை உற்பத்தி செய்யும் குழுக்களை மட்டுமே சிப்பாவில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்கிறோம்'' என்கிறார் அதன் செயலாளரான கு. பஞ்சாட்சரம்.

தொண்டு நிறுவனம் என்றால் லாபம் என்ற வார்த்தையை உச்சரிக்கக் கூடாது என்றிருந்ததை மாற்றி, லாபம் உற்பத்தியாளர்கள் பலருக்கும் சென்று சேர வேண்டும் என்ற புதிய கோட்பாட்டை உருவாக்கியிருக்கும் சிப்பாவிடம், விற்பனை உத்திகள் குறித்த ஆலோசனைகளை மாநில அரசு அடிக்கடி கேட்டுப் பெறுவதே அதன் வெற்றிக்கு அடையாளம்.




– ஸ்ரீ சக்கரம்

படங்கள்: டிஜிட்டல் சண்முகம்



• குஞ்சராணி



• மல்லேஸ்வரி

# ஒலிம்பிக்ஸ் கணிப்பு!

ஒலிம்பிக் தங்கம் என்பது நம் நாட்டைப் பொறுத்தவரை குறிஞ்சி மலர், மாமாங்கம், உத்தம அரசியல்வாதி. அதனால் ஒலிம்பிக்ஸில் நமக்கு எவ்வளவு பதக்கங்கள் கிடைக்கும் என்பதை, கொஞ்சம் அடக்கியே வாசிப்பது இயல்பு.

ஆனால் பல மேலை நாடுகள் (விளையாட்டைப் பொறுத்தவரை கொண்டையுள்ள சீமாட்டிகள்) தேர்தல் கருத்துக் கணிப்புகளுக்கு நிகராக, இந்த ஒலிம்பிக்ஸில் எந்தெந்த நாடு, எவ்வளவு பதக்கம் பெறும் என்கிற யூகங்களை வெளியிட்டு வருகின்றன.

பல அமைப்புகளும், விளையாட்டு இதழ்களும் இந்தக் கருத்துக் கணிப்புகளை நடத்தியுள்ளன. ஒன்றுவிடாமல் அத்தனை கணிப்புகளும் சுட்டிக் காட்டுவது ஒன்றைத்தான். மிக அதிகமாக தங்கங்களை தட்டிச் செல்லப் போவது புஷ்தேசம் தான்.

பெரும்பாலான கணிப்புகளின்படி அடுத்தடுத்த இடங்களைப் பிடித்திருப்பது ரஷ்யா, சீனா மற்றும் ஜெர்மனி.

கனடா மொத்தம் ஏழு பதக்கங்களை அடித்துச் செல்லுமாம் - முக்கியமாக படகோட்டும் பந்தயங்களில். ஆஸ்திரேலியாவுக்கு எட்டு தங்கங்கள் - பெரும்பாலானவை நீச்சலில்.

"பிரமாதமா ரேங்க் வாங்கலேன்னாலும், பாஸ் பண்ணித் தொலைக் கூடாதா?" என்று பதறும் பெற்றோர்களைப் போல, பதக்க நாடுகளின் பட்டியலில் வால்பகுதியிலாவது இந்தியா இடம் பெறுமா? என்ற தேசப்பற்று ஆதங்கம், நம் மனதில் எட்டிப் பார்ப்பது இயல்பு.

"இந்தியா இருபத்தியேழாவது இடத்தைப் பிடிக்கும் (இருக்கட்டும்). பத்து பதக்கங்களைப் பெறும் (ஆஹா! காதில் தேன்)" என்கிறது ஒரு கணிப்பு.

ஆனால் பிரபல பத்திரிகையான ஸ்போர்ட்ஸ் இல்லஸ்ட்ரேடட் கூறும் கணிப்பு, காதில் தேள் கடித்ததுபோன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. இந்தியாவுக்கு ஒரே ஒரு பதக்கம்தானாம். அதுவும் வெண்கலம்.

அந்த ஒருவர் யாரோ? இரண்டே க்ளூக்கள். அவர் ஒரு பெண்மணி. எடை தூக்கும் பிரிவில் சாதனை படைத்தவர். "தெரியுமே கர்ணம் மல்லேஸ்வரிதானே?" என்கிறீர்களா? அல்ல. சிட்னி ஒலிம்பிக்ஸில் 69 கிலோ கிராம் பிரிவில், வெண்கலம் வென்ற மல்லேஸ்வரி, 75 கிலோ பிரிவுக்கு "முன்னேறி", சென்ற ஆண்டு நடைபெற்ற உலகப் பந்தயங்களில் பத்தாவது இடத்தைத்தான் பிடித்திருக்கிறார்.

வெண்கல வீராங்கனையாக மேற்படி அமெரிக்க இதழ் சுட்டிக்காட்டுவது, மல்லேஸ்வரியின் சீனியரான குஞ்சராணியைத்தான்.

இந்தக் கணிப்பெல்லாம் தொடங்கிய பிறகுதான் நம்ம லியாண்டர் பயஸும் மகேஷ்பூபதியும் கைகோத்திருக்கிறார்கள். தவிர, எட்டு தங்கங்களை வென்ற இந்திய ஹாக்கிப் பிரிவு, இம்முறை மீண்டும் அந்த அதிசயத்தை நடத்தக்கூடும். எனவே நாம் விடும் (பெரு) மூச்சில் நம்பிக்கை கொஞ்சம் அதிகமாக இருக்கலாம், தப்பில்லை.

- ஜி.எஸ்.எஸ்.

# மேலும் ஒரு சிகரம்!

முன்னாள் இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் ராமதாசுக்கு, இந்த ஆண்டுக்கான மகசேசே விருது கிடைத்திருக்கிறது.

ராமதாசுக்கும், அப்துர் ரஹ்மான் என்கிற 'பாகிஸ்தான் டைம்ஸ்' முன்னாள் ஆசிரியருக்கும் இணைந்து, சர்வதேச நல்லுணர்வு மற்றும் அமைதிக்காகப் பாடுபட்டதற்காக இந்த விருது வழங்கப்படுகிறது. இருவரும் சேர்ந்து, பாகிஸ்தான் இந்தியா சமாதான, ஜனநாயக அமைப்பை, செப்டெம்பர் 1994ல் உருவாக்கினார்கள். பிறகு தொடர்ந்து இரு நாட்டு மக்களிடையே நட்பு வளர உரையாடல்கள், சந்திப்புகள் என்று உழைத்தார்கள். பத்து வருடங்களாகப் பாடுபட்டதன் பலன் – இதோ மகசேசே விருது!

ராமதாசுக்கு எப்போதுமே அணு ஆயுதப் போராட்டங்களுக்கு எதிரான முயற்சிகளில் தீவிர ஈடுபாடு உண்டு. பல கூட்டங்களில், பல நாடுகளில் அவர் இது பற்றிப் பேசி வருகிறார்.

ஹிரோஷிமாவில் குண்டு விழுந்த நினைவு தினத்தன்று, பல முறை அங்கே போய் அஞ்சலி செலுத்திவிட்டு வந்திருக்கிறார். ஒரு முறை இவர் சார்பாக 'ஹிந்து' என். ராம் சென்றார்.

"பாகிஸ்தானுடன் நமது நட்பு வளர, பேச்சுவார்த்தைகளிலிருந்து ஆரம்பித்து தொடரத்தான் வேண்டும். போரில் பகைமையை வளர்த்துக் கொள்வதைவிட, சமாதான நோக்கில் இரு நாட்டு மக்களும் பரஸ்பர நட்பு கொண்டால், வேற்றுமை உணர்வும், குரோத மனப்பான்மையும் குறையும். இதைத்தான் நான் நண்பர்களோடு செய்து கொண்டிருக்கிறேன்!" என்று, சென்ற முறை சென்னை வந்திருந்தபோது, கூறினார் ராமதாஸ்.

ஒரு கடற்படைத் தளபதியாக இருந்தவர், சமாதானம் பற்றிப் பேசியது வித்தியாசமாக இருந்தது.

இப்போது ஹைதராபாத்தில் இருக்கும் அட்மிரல் ராமதாசுடன் தொடர்பு கொண்டோம். "சற்றும் எதிர்பாராமல் கிடைத்த விருது இது. மகிழ்ச்சியாக இருந்தது. என்னோடு அமைதிக்காக உழைத்த நண்பர்களுக்கும் சேர்ந்தே இந்த விருது கிடைத்ததாக எண்ணுகிறேன்" என்றவர், "இப்போதெல்லாம் யார் அமைதி பற்றிப் பேசுகிறார்கள்? வன்முறைகளுக்கும், போராட்டங்களுக்கும்தானே முதலிடம் கிடைக்கிறது!" என்று அங்கலாய்த்தார். "அரசு தொடர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் கண்டு வருவது, ஆறுதலும், நம்பிக்கையும் தருகிறது. எங்கள் முயற்சிகள் வீண் போகாது" என்கிறார் ராமதாஸ்.

ராமதாசுக்கு பரம விசிஷ்ட சேவா பதக்கம், அதிவிசிஷ்ட சேவா பதக்கம், வீர சக்ரா முதலிய உயர் விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. மகசேசே விருது இப்போது மேலும் ஒரு சிகரமாக அமைகிறது.

**- சித்தார்த்**



# கிராஃபிக்ஸ் ராணி!

கிராஃபிக்ஸ் கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கப் போகிறார் சூப்பர் ஸ்டாரின் இளைய மகள், சௌந்தர்யா ரஜினிகாந்த்!

''ஆஸ்திரேலியாவின் எடித் கோவன் பல்கலைக் கழ கத்தில் கம்ப்யூட்டர் மற்றும் மல்டிமீடியா கிராஃபிக்ஸ் படித்துக் கொண்டிருக்கிறேன். இரண்டு வருடப் படிப்பு. ஒருவருடம் அங்கேயே தங்கிப் படித்தேன். எஞ்சிய ஒரு வருடத்தை இங்கிருந்தே தொடரலாம். கிராஃபிக்ஸ் படிப்புக்களை வெளிநாட்டுக்குச் சென்று தங்கி, படிக்க முடியாத எவ்வளவோ மாணவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குச் சர்வதேச கிராஃபிக்ஸ் கல்வியை, மிகக் குறைந்த கட்டணத்தில் இங்கேயே ஏன் கொடுக்கக் கூடாது என்று தோன்றியது. அம்மாவிடம் சொன்னபோது ஆமோதித்தார். மேட்ரிக்ஸ், எக்ஸ்மேன், ரிங், மிஷன் இம்பாஸிபிள் முதல், இன்றைய ஸ்பைடர் மேன் வரை ஹாலிவுட்டின் பிளாக்பஸ்டர் படங்களுக்கு, கிராஃபிக்ஸ் செய்து கொடுத்த கனடா நாட்டின் டிஸ்கிரீட் நிறுவனத்தின் த்ரிடி மாக்ஸ் உள்ளிட்ட சாஃப்ட்டுவேர்களை இங்கேயே சொல்லித் தரப் போகிறோம். இந்தப் படிப்புக்கான சாஃப்ட்டுவேர்கள், பாடப்புத்தகங்களை மட்டுமல்ல, படிப்பு முடிந்ததும் டிஸ்கிரீட் நிறுவனமே டிப்ளமோ தருகிறது'' என்று கோர்ஸ் பற்றி சொல்லிக் கொண்டே போன சௌந்தர்யாவுக்கு, சிறுவயது முதலே ஓவியத்தில் அதிக ஆர்வமாம். ''எனது ஓவியத் திறமையை அம்மாவும் அப்பாவும் ரொம்பவே ஊக்கப்படுத்தினார்கள். அதனால்தான் எனக்கு கிராஃபிக்ஸ் துறையில் ஆர்வம் வந்தது'' என்று சொல்லும் சௌந்தர்யா, ''அம்மா வழியில் கல்விப் பணியில் இறங்கி, அவரது நம்பிக்கையைப் காப்பாற்றுவேன்'' என்கிறார்.

அப்பாவின் ஜக்குபாய் படத்துக்கு நீங்கள்தான் கிராஃபிக்ஸ் செய்யப் போகிறீர்களா?'' என்றால் அர்த்தம் பொதிந்த ஆமோதிப்பாக புன்னகைத்த சௌந்தர்யா, ஆஸ்ரம் ஸ்கூல் ஆஃப் மல்டி மீடியா அண்ட் கிராஃபிக்ஸின் துறை ஒருங்கிணைப்பாளராக பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

- ஜெய்



டயமண்ட் பிளாக்ஸ்
FOR HIGH QUALITY
CONCRETE HOLLOW & SOLID BLOCKS
DIAMOND BLOCKS
Arcot Road, Kunrathur - Sri Perumbudur Road, Amaramedu Village, Chennai - 602 109
Ph : 99340909 Mobile : 98410 45455

கல்கி வழங்கும்
# சென்னை ஸ்கேன்
கல்கி ஜன்னலில் ஒரு மின்னல்!
(சென்னை பெருநகருக்கு மட்டும்)

Ink for Better Printing
GRAPHIKOLOR
No.3, Veeramamunivar Street, Kandanchavadi, Perungudi Post, Chennai - 600 096.
Ph : 24960079, 24960976

8 பக்கங்கள் 15, ஆகஸ்ட் 2004 இதழுடன் இலவச இணைப்பு



# பீரோ புல்லிங்
## பீதியூட்டும் ஒன் மேன் ஷோ!

இப்போதெல்லாம் சென்னை மக்கள் வயிற்றில் புளியைக் கரைக்கும் விஷயம் என்னவென்றால், அது பீரோ புல்லிங் எனும் மாடர்ன் திருட்டு. அது என்ன பீரோ புல்லிங்? ஜன்னல் வழியாக படம் 1ல் காட்டப்பட்டுள்ள ஆயுதத்தால் (தஞ்சாவூர் பக்கம் 'அலக்கு' என்பார்கள்) பீரோவை பக்குவமாக இழுத்து அதிலுள்ளவற்றைக் கொள்ளையடிப்பதுதான் பீரோ புல்லிங். இதுவரை சென்னையில் சுமார் அறுபது முறை இந்த பீரோ புல்லிங் நடந்துள்ளது. அனைத்திலும் தொடர்புடையவன் ஒரே ஆள். இன்றுவரை சென்னை போலீஸுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கி வரும் இந்த ஜெகஜ்ஜால கில்லாடியின் முக்கிய இலக்கு, தங்க நகைகள் மற்றும் பணம் என்றும், அன்னப்பறவை டைப்பில் கவரிங், வெள்ளி நகைகளை ஒதுக்கிவிடுவது இவனது சிறப்பு! என்றும் கூறுகிறார் காவல்துறை உதவி ஆய்வாளர் ஒருவர்.


இன்றும் இத்திருட்டு தொடர்வதற்கும், இதுவரை அவன் பிடிபடாமல் இருப்பதற்கும் என்னதான் காரணம் என விசாரித்த போது, பெரும்பாலான காவல் துறையினர், பொது மக்களின் அலட்சியத்தையே காரணமாகக் குறிப்பிட்டனர். அதாவது ஜன்னலுக்கு அருகே பீரோவை வைப்பதும், பீரோவைப் பூட்டியோ (அ) பூட்டாமலோ சாவியை அதன் துவாரத்திலேயே விட்டுவிடுவதும், பீரோ உள்ள அறையில் தூங்குவதைத் தவிர்ப்பதும், ஜன்னல் கதவுகளை மூடாமலிருப்பதும்தான், என்கிறது காவல் துறை தரப்பு. இதுவரை இந்த பீரோ புல்லிங் திருடன் பிடிபடாமலிருப்பதற்குக் காரணம், காவல் துறையில்



1




2



10,000 CDs 200+Companies Rs.59/- onwards
Computer CDs
Exhibition cum SALE upto 50%
• Rhymes • Stories • Educational VCDs • Kids Education
• DTP CDs • CBSE & Matric • Language Tutors • Home Design
• GRE & TNPCEE • Management • Software Tutor • Games CDs
ஜாதகம், பாடல்கள், கதைகள், அமுதம், திருக்குறள், நூல்கள்.
Aug. 5th to 15th at CHETTIAR HALL, T.T.K. Road. Ph: 28346297

AAI Deemed University, Allahabad
(Distance Education) ADMISSION 2004 - 05
M.Sc. Microbiology B.Sc. Microbiology
M.Sc. Biochemistry B.Sc. Biotechnology (Biochemical Technology)
M.Sc. Biotechnology B.Sc. Biotechnology (Indust. Microbiology & Ferment. Tech.)
* B.Sc. Biochemistry * B.Sc. Med Lab Tech * B.Sc. Optometry * B.Sc. Bioinformatics
* Swami Vivekananda University of Sc & Tech
Study Centre, Mother College of Arts & Science (DESC)
(Near Saidapet New Bus Stand) No.4, East Jones Road, Saidapet, Chennai - 600 015. Ph : 5518 9077, 2431 0015
LIMITED SEATS



"வரலக்ஷ்மி பூஜையை செய்தாலே அஷ்டலக்ஷ்மிகளையும் பூஜிப்பதால் ஏற்படும் பலன்கள் கிடைக்கும்"
தங்களின் வரலக்ஷ்மி விரத பூஜை பரிபூரணமாய் சிறக்க மனமுருகி பிரார்த்திக்கின்றோம்
எங்களிடம் வரலக்ஷ்மி பூஜைக்கு தேவையான சீப்பு, கண்ணாடி, மஞ்சள், குங்குமம், மண்டபம், அம்மன் பாவாடை, ஒட்டியாணம், கிரீடம், நெத்திச்சுட்டி, கைவளையல், கொலுசு, சுவாமி குடை போன்றவைகளும் மற்றும் அன்பளிப்பு பொருட்களும் கிடைக்கும்
25 YEARS
VIJAYA STORES
No. 42, North Mada Street, Mylapore, Chennai - 600 004.
Ph: 2464 2500 Res: 2464
Near Kapaleeswarar Temple Office

மெத்தனப் போக்குதான் என்கிறார்கள் பாதிக்கப்பட்ட பொது மக்கள். "சரி. திருடன்தான் பிடிபடவில்லை. பீரோ புல்லிங்கையாவது தடுக்கலாமே அதற்கு ஏதாவது திட்டம் உள்ளதா" என்று காவல் துறையினரிடம் கேட்டோம். "இத்திருட்டை தடுக்க இயன்றவரை பேட்ரோலிங் செய்து வருகிறோம். இருந்தாலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பொது மக்கள் தமது உடைமைகளைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு தனியார் நிறுவனம் சேஃப்டி சிஸ்டம்களை தயாரித்து வருகிறது" என்று கூறி அதன் முகவரியைத் தர அங்கு சென்று விசாரித்தோம். அண்ணாசாலை நரசிங்கபுரம் தெருவில் இருக்க 'மோகன் எலக்ட்ரானிக்ஸ்' (தொலைபேசி : 25733864, 28520592) கடையில் இருந்து இதற்கெனத் தயாரிக்கப்பட்ட பீரோ புல்லர் அலாரம் (காண்க : படம் 2). இதனை பீரோவின் அடிப்பாகத்துடன் இணைத்து விட வேண்டும். பீரோவை திருடன் இழுக்கும்போது, அலாரம் சிஸ்டத்தில் உள்ள சென்சார் பீரோ இழுக்கப்படுவதைக் கண்டறிந்து அபாய ஓசையை எழுப்பும். இதன்மூலம் பீரோ புல்லிங்கைத் தடுக்க முடியும் என்கிறார் இதன் தயாரிப்பாளர். இதன் விலை எழுநூறு ரூபாய் என்றும் காவல்துறை உயரதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த அலாரத்தை, மிகக் குறைவான மதிப்பில் தயாரித்துள்ளதாகவும் கூறுகிறார் இவர்.

அடுத்து வெளியூர் செல்லும் போது மொத்த வீட்டையும் திருட்டிலிருந்து காப்பாற்ற, ஒரு பர்குலர் அலாரத்தை இவர்கள் தயாரித்துள்ளனர். அதன்படி வீட்டை விட்டு வெளியே செல்லுகையில் இந்த அலாரம் சிஸ்டத்தை ஆன் செய்து விட்டால் போதும். திருடன் வீட்டின் எந்தக் கதவை உடைக்க முயற்சித்தாலும் இந்த அலாரம் உடனடியாக அபாய ஒலியெழுப்பும். அதே சமயம் ஓர் குறிப்பிட்ட தொலைபேசி எண்ணை இதில் ரிஜிஸ்டர் செய்துவிட்டால், அந்த எண்ணிற்கு தொலைபேசி அழைப்பு செல்லும். இதன் மூலம் மொத்த வீட்டையும் திருட்டிலிருந்து பாதுகாக்க முடியும் என்கிறார் இந்த அலாரத்தைத் தயாரித்தவர். இதன் விலை நாலாயிரம் ரூபாய். இந்த இரு அலாரங்களின் இணைப்புகளைத் துண்டிக்க முயற்சித்தாலும் உடனே அலாரம் அடிக்குமாம். இதுபோன்ற அலாரங்களுக்கு மடிப்பாக்கம்- நங்கநல்லூர் பகுதியில் நல்ல வரவேற்பு உள்ளதாம்.

எப்படியோ இது போன்ற சேஃப்டி அலாரங்கள் மூலம் நாமும் நமது உடைமைகளும் சேஃபாக இருந்தால் சரிதான்!

+ கலை


---

## எழுத்தாணி



# இணைய தளம்.. வெடிமருந்து.. பேய்க் கதைகள்..

இலக்கிய சிறு பத்திரிகைகள் வளர்ச்சியடைந்து 'பெரிய' பத்திரிகைகளாக மாறிவரும் இன்றைய சூழலில் உயிர்மை தனது முதலாமாண்டு நிறைவு விழாவையும் அதன் இணைய இதழ் தொடக்கவிழாவையும் நடத்தியுள்ளது.




சுஜாதா க்ளிக் செய்து பெரிய திரையில் உயிர்மை இணைய தளத்திற்கு உயிரளித்தார். பார்வையாளர்களிடம் பரவியிருந்த இறுக்கத்தை தளர்த்தும் வகையில் அவரது பேச்சு அமைந்திருந்தது. "புத்தகத்தை வேண்டிய நேரத்தில் வேண்டிய இடத்திலிருந்து படிக்கலாம். தேவைப்படும் பொழுது அடிக்கோடிட்டுக் கொள்ளலாம். புத்தகம் சரியில்லை என்றால் தூக்கியடித்து விடலாம். கணிப்பொறியை அவ்வாறு செய்ய இயலாது. என்ன கொஞ்சம் செலவாகும்" என்ற பொழுது அரங்கம் சிரிப்பலையில் அதிர்ந்தது.

"இணையதளத்தில் நல்லது கெட்டது இரண்டும் கிடைக்கும், எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார். ஒரு முறை ஆர்.டி.எக்ஸ். வெடி மருந்தை பற்றிய குறிப்புகளை வலை வீசி தேடிக் கொண்டிருக்கையில் அவருக்கு கிடைத்தது வீட்டிற்குள்ளேயே வெடிமருந்து தயாரிப்பது எப்படி என்பது போன்ற டிப்ஸ்களாம்! (சற்று தள்ளி நின்றவும் வெடிக்கும் என்று வேறு குறிப்பிட்டிருந்தார்களாம்.)

அசோகமித்திரனின் எழுத்தைப் போலவே அவரது பேச்சும் மெலிதான நகைச்சுவை இழையோடி காணப்பட்டது. எழுதுவதை விடவும் சிரமமானது புத்தகங்களை அடுக்கி வைத்து 'பண்டல்' கட்டுவது என்றார் அவர். சுவையான சில கடந்த கால பத்திரிகை நினைவுகளையும் அவர் பகிர்ந்து கொண்டார்.

"தமிழைவிட மலையாளச் சூழலே எனக்கு அந்நியமாக படுகிறது" என்று அறிவித்துக் கொண்டார் ஜெயமோகன். பேய்க் கதைகள் தமிழில் எழுதப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பேய்க் கதைகள் என்று தனியாக இல்லாவிட்டாலும், பல படைப்புகள் பேய்க் கதைகளுக்கு சுடாக வாசகர்களை பயமுறுத்தவே செய்கின்றன என்பது வேறு விஷயம்.

ஓர் ஆண்டு தான் முடிந்திருக்கிறது. உயிர்மையின் தாக்கத்தை சற்றுப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் எனும் அசோகமித்திரனின் வார்த்தைகள் அர்த்தம் பொதிந்தவை. இலக்கியவாதிகள் தங்களுடைய இலக்கியப் பிரச்னைகளையும் விவாதங்களையும் கடந்து சென்று மக்களின் மெய்யான சமூகப் பிரச்னைகளை முன் வைத்து எழுத்துக்கள் மூலம் மாற்றங்களை ஏற்படுத்த முயல வேண்டும். அதற்கு ஏற்ற தளம் சிறு பத்திரிகை. இவ்வாறிருக்க, ஒரு சிறு பத்திரிக்கையின் வளர்ச்சி என்பது அது எவ்வளவு அதிகமாக விற்பனையாகிறது, முன்னணி எழுத்தாளர்கள் எத்தனைப் பேர் அதில் எழுதுகிறார்கள் என்பதை பொறுத்து அமைவதாக பலர் எண்ணி வருகிறார்கள். உயிர்மை இத்தகைய வளர்ச்சியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சிறக செயலாற்றும் என்று நம்புவோம்.

மருதன்

---

## அதிர்ஷ்டக்கார சென்னை

தமிழக சட்டமன்ற வரலாற்றிலேயே மிகக் குறுகிய கூட்டத் தொடர் என வர்ணிக்கப்பட்ட இக்கூட்டத் தொடரில், சென்னை மக்களுக்காக பல்வேறு திட்டங்களும், சலுகைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. இக்கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்ட பல்வேறு கொள்கை விளக்கக் குறிப்புகளில் இடம் பெற்ற சென்னைக்கான திட்டங்கள் :

- பஸ் செல்ல இயலாத குறுகிய பகுதிகளுக்கு மினி பஸ் விடும் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.
- சென்னை மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்க(?) எழுநூறு கோடியில் அவசரத் திட்டமொன்று செயல்வடிவம் பெற உள்ளது.



- சென்னை முழுவதும் 22 கோடி செலவில் மழைநீர் வடிகால் தூர்வாரும்பணி மேற்கொள்ளப்பட உள்ளது.
- சென்னையிலுள்ள குப்பைகளை அகற்ற, பத்துக் கோடி ரூபாயை தனி நிதியாகப் பயன்படுத்த அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.
- போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 54 கோடி செலவில் ஏழு பாலங்கள் கட்டப்பட உள்ளன.
- குடிசைப் பகுதி மக்களுக்கு அடுக்கு மாடி வீடுகள் அமைத்துத் தர, 117 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மெரினா கடற்கரையை மேம்படுத்த, புதுப்பிக்க, 5 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் ஒழுங்காக செயல்படுத்தப்பட்டால்(!) நிச்சயம் சென்னை மக்கள் அதிர்ஷ்டக்காரர்கள்தாம்.

முத்து

FAST SIGNS
48 HRS. QUICK DELIVERY 48 HRS.

| | |
|---|---|
| CLOTH BANNER | 3.50/- |
| VINYL REPLACEMENT | 55/- |
| DIGITAL PRINTING | 45/- |
| FRONTLIT FLEX | 95/- |
| VINYL GLOW SIGNS | 155/- |
| FLEX GLOW SIGNS | 225/- |
| NEON SIGNS (running feet) | 200/- |

Above Rates Are Valid Only For 30 Days

| | SQ. INCH |
|---|---|
| METAL LETTERS | 4.25p |
| ACRYLIC LETTERS | 5.50 p |
| BRASSNAME PLATES | 15.50p |

✆ 24612299
9840084832

LOCKERS NOW AVAILABLE

* Lockers available in 11 different sizes
* More than 8000 happy customers
* One of the oldest and safest locker companies in India

KOTHARI SAFE DEPOSITS LTD
"Century Centre", (Basement), No.75 (Old No.39) T.T.K. Road, (Opp. Narada Gana Sabha), Alwarpet, Chennai - 600 018. Ph: 2498 3832

Bring this Advt. Cutting Book a locker & avail 10% Discount on Rental



LOCKERS ALSO AVAILABLE AT

| | |
|---|---|
| GEORGE TOWN | Ph : 2534 2431 |
| NUNGAMBAKKAM | Ph : 2833 4552 |
| PURASAVAKKAM | Ph : 2532 2398 |
| ANNA NAGAR (New Branch) | Ph : 2620 7271 |

RENTAL * Rs.500/- p.a. ONWARDS

The Safest Safety Vault in the city

TRUSTED BY GENERATIONS SINCE 1936

* conditions apply

# திறக்காத கேட்... பிறக்குமா விடிவு?

தீண்டாமை - சில மனிதர்களுக்கு மட்டுமல்ல, அவர்கள் வைக்கும் கோரிக்கைகளுக்கும் தான் என்பதற்கு உதாரணம், ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியிலுள்ள போஜராஜநகர் சீனிவாசபுரம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையொன்று இன்றுவரை நிறைவேறாமல் கிடப்பது. அவர்களது கோரிக்கை தான் என்ன?

சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து பேசின் பிரிட்ஜ் வழியாக கொருக்குப்பேட்டை செல்லும் ரயில் பாதை, பீச் ஸ்டேஷனிலிருந்து அம்பத்தூர், ஆவடி செல்லும் ரயில் பாதை மற்றும் கும்மிடிபூண்டி செல்லும் ரயில்பாதை, ஆகிய மிக முக்கிய மூன்று ரயில் பாதைகளால் முற்றிலுமாக விலக்கிடப்பட்டுள்ள பகுதிதான் மேற்கூறிய பகுதி. இத்தகைய ரயில் பாதைகளில் ஏறக்குறைய கால் சதம் சரக்கு ரயில்கள் சென்று வருகின்றன. அப்பகுதி வாழ் மக்கள் தமது அன்றாடப் பணிகளுக்காக ரயில் பாதைகளைக் கடக்க ஒரேயொரு கேட் மட்டுமே உள்ளது.

சிக்னல் கிடைக்கவில்லை என்பதற்காக, அப்பாதையில் சரக்கு ரயில்கள் பெரும்பாலும் இரண்டு, மூன்று மணி நேரம் அசையாமல் நின்று விடுகின்றன. அச் சமயங்களில் பள்ளி செல்லும் குழந்தைகளும், கூலித் தொழிலாளர்களும் வெகு நேரம் காத்திருக்க நேரிடுகிறது. அவ்வாறு காத்திருக்கப் பொறுமையற்ற சிலர், சரக்கு வண்டியின் சக்கரங்களுக்கு இடையே புகுந்து வெளியே வர எத்தனிக்கும் போது, தலையில் இடித்துக் கொண்டும், வழுக்கி விழுந்தும் ரத்தம் சிந்த வெளி வருகின்றனர். குறிப்பாக நிறைமாதக் கர்ப்பிணிகள் பலருக்கு நடு ரோட்டிலேயே பிரசவம் ஆகி, தாயும் சேயும் இறந்தும் உள்ளனர். இதனை விபத்துச் செய்தியாக நாளிதழ்கள் வெளியிட்டாலும், இதற்குத் தீர்வு காண இதுவரை சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. இன்றும் இந்த அபாயம் தொடர்கிறது.



• B. செல்வி

இப்பிரச்னைக்குத் தீர்வு காண தொடர்ந்து முயற்சித்து வருவதாகக் கூறும் இப்பகுதியின் மாநகராட்சி உறுப்பினர் B. செல்வி, இப்பகுதியில் ஓர் மேம்பாலம் அல்லது சுரங்கப் பாதை அமைத்தால், இப்பகுதியிலுள்ளவர்கள் பயனடைவர் என்றும், இது தொடர்பாக ஆட்சியர், பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர், ஆளுநர் மற்றும் அதிகாரிகள் அனைவருக்கும் கடிதம் எழுதியுள்ளதாகவும், இதற்காக மத்திய அரசு 50% நிதியை அளிக்க சம்மதித்த பின்னரும், தமிழக அரசும் சென்னை மாநகராட்சியும் இதற்கு ஒப்புதல் தரவில்லை என்றும் சோக ராகம் பாடுகிறார். உடனடியாக சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் தமது மௌனராகத்தைக் கலைத்து இத்திட்டம் செயல் வடிவம் பெற பூபாளராகம் பாடுவார்களா?

(குறிப்பு: இத்தொகுதி சென்ற முறையும் சரி, இந்த முறையும் சரி ஆளுங்கட்சி வசமே இருந்தது இருந்து வருகிறது)


+ இரா. முத்துக்குமார்

## ஒன்றா... இரண்டா ஊசிகள்...

கழுத்தில் வலி என்று இவரிடம் போனால் அநேகமாக உங்களது வலது கையிலோ, இடது கையிலோ, சிறிது சிறிதாக சில ஊசிகளை மெதுவாக இறக்கி விடுவார்கள். கழுத்து வலிக்கும் கையில் ஊசி குத்துவதற்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? இருக்கிறது. உங்களது உடல் வலிகள் உண்டாவதற்குக் காரணமான சில முக்கியப் புள்ளிகளைக் கண்டுபிடித்து சீன அக்குபஞ்சர் முறைப்படி ஊசிகளைக் குத்தி உங்கள் வலிகளை இவர்கள் விடுவிக்கிறார்கள். 15 - 20 நிமிடத்திற்குப் பின் ஊசிகள் எடுக்கப்பட்டுவிடும். ஆண், பெண், குழந்தைகள் எல்லோருக்கும் ஏற்ற ஊசிகள் உண்டு. "எறும்பு கடித்தால் எவ்வளவு வலிக்குமோ, அவ்வளவுதான் வலிக்கும்" என்கிறார்கள். அப்புறமென்ன, உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை இனி எங்கே என்ன வலி வந்தாலும் கவலை வேண்டாம்.

Meera Acupunture Hospital
New No: 67, Old:31 Middle St,
Opp.Rasi Silks, Mylapore,
Chennai- 04. Ph: 28352736

ஃபோக்கஸ்



# லஜ்ஜாவதி வர்றா!




நல்ல இசைக்கு மொழி அவசியமில்லை என்பது மீண்டும் நிரூபணமாகியிருக்கிறது. 'லஜ்ஜாவதியே' பாடல் இளைஞர்களிடையே சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கிறது. மெகா பட்ஜெட்களில் உருவான தமிழ்ப் படங்களுக்கு மத்தியிலும், கல்லூரி மாணவர்களின் உச்சகட்ட எதிர்பார்ப்பிற்கு உள்ளாகியிருக்கிறது, டப்பிங் படமான 4 ஸ்டூடண்ட்ஸ். நீண்ட நாட்களாக 'உதயம்', 'இதயத்தை திருடாதே', 'இது தாண்டா போலீஸ்' படங்களுக்குப் பிறகு, தமிழ் ரசிகர்கள் டப்பிங் படங்களைத் தள்ளியே வைத்திருக்கின்றனர். 'லஜ்ஜாவதி' திருப்புமுனை ஏற்படுத்துவாளா? இம்மாதம் தெரிந்து விடும்.

## ஊசி போட்ட ஹைகோர்ட்

'ஊருக்கு இளைத்தவரா கமல்' எழுதிய நேரமோ என்னவோ, பெயர்ச் சிக்கலிலிருந்து விடுபட்டுள்ளது 'வசூல்ராஜா எம்பிபிஎஸ்'படம். 'டைட்டிலில் மட்டுமல்ல, பாடல் வரிகளில் கூட எம்பிபிஎஸ் என்கிற வார்த்தை வருகிறதே' என்ன செய்ய, என்று கையைப் பிசைந்த கமல், சரணுக்கு "யூ ஆர் ஆல்ரைட்" என்று சர்டிபிகேட் கொடுத்த ஹைகோர்ட், மருத்துவர் சங்கத்திற்கு பெரிதான ஊசி ஏற்றவும் தயங்கவில்லை. இருக்கட்டும், கமலின் அடுத்த படத்தின் சர்ச்சைக்குரிய டைட்டில் என்னவாகவிருக்கும். Any guess? (கமலுக்கு இந்த முறை எந்தப் புற்றிலிருந்து எந்தப் பாம்பு வெளிவரப் போகிறதோ?)





பனியில் மலர்ந்த மலராய் சில்லென இருக்கும் அசின், சமீபத்தில் யாரிடமிருந்து வாழ்த்து பொக்கே வாங்கினார் தெரியுமா, நதியாவிடமிருந்து. எம்.குமரன், S/O மகாலெட்சுமி படப்பிடிப்பின் பொழுது அசினை அருகில் அழைத்து செத்திற்கும் புகழ்ந்து தள்ள, பதிலுக்கு அசினும் "நீங்க மட்டும் என்னவாம். விட்டா எங்களுக்குப்போட்டியா வந்திடுவீங்க போலிருக்கு" என்று ஐஸ் வைக்க, 'அட.., ஒருவருக்கொருவர் பாராட்டிக் கொள்ளும் அதிசயப் பெண்களா!' என யூனிட் வியந்திருக்கிறது. 'உள்ளம் கேட்குமே' வெளிவராத நிலையில் 'குமரனை' பெரிதும் நம்பி காத்திருக்கிறார் அசின்.

✍ எழில்

# 'ஷாக்'கிற்கே ஷாக்!



தமிழ் சினிமா கடல் கடந்து போனாலும் விடாது கருப்பாய் தொடர்கிறது திருட்டு விசிடி என்கிற ராட்சஸன். ஊரெல்லாம் மிரட்டிக் கொண்டிருக்கும் 'ஷாக்'கிற்கு இது வைத்த செக் இருக்கிறதே. ரொம்பவே சுவாரஸ்யம்.

ஒரு படத்தை திருட்டு விசிடி என்ற பாழும் கிணற்றிற்குள் தள்ளி விடும் பெரும் பங்கு எஃப்.எம்.எஸ். எனும் ஓவர்சீஸ் ரைட்ஸிற்குத் தானுண்டு. இருந்தாலும் இதிலிருந்து கிடைக்கும் தாராள லட்சமி முன் மற்றதெல்லாம் தூசாகி விடுகிறதே.

பிரசாந்திற்கு சிங்கப்பூர், மலேசியாக்களில் எண்ணிலடங்கா ரசிகைகள் இருப்பதால், தமிழின் முதல் நூறு சதவிகித திகில் படமான 'ஷாக்'கிற்கு தமிழகத்தை விட அங்கே தகதகக்கும் எதிர்பார்ப்புகள் அதிகமாகிவிட, இவர்களுக்கு மேலாக ரெடியாகவிருந்தது அங்குள்ள திருட்டு விசிடி கும்பல்.


தியேட்டர்களில் வெளியிடும் முன்பு மலேசியாவிலும் தமிழ்ப் படங்களுக்கென்று தனியாக சென்சார்ஷிப் உண்டு. இங்கிருந்து தான் திருட்டு விசிடி மெல்ல மெல்ல முளைவிடும்.

தன் சொந்தப் பாக்கெட் பணத்தில் எடுத்த படமாச்சே ஷாக். இதனால் ஒரு புது யுக்தியை கையாண்டார் தியாகராஜன். மலேசியாவிற்கு அனுப்பிய படப்பெட்டியோடு, ஒரு உதவியாளரையும் நிழலாக அனுப்பினார். சென்சார் செய்த இடத்திலும், படம் ரிலீஸான தியேட்டர்களிலும் காவலாளியாய் நிற்க வைத்து, பைரசி கும்பலுக்கு ஷாக் கொடுத்திருக்கிறார் தியாகராஜன்.

இதுபோக திருட்டு விசிடி பிரதிநிதிகளோடு ஒரு மீட்டிங்கும் போட்டிருக்கிறார் 'ஷாக்' பிரதிநிதி. "ஹீ, உங்களைப் பத்தி எங்களுக்கு நல்லாவே தெரியும். இப்போ நாங்க சொல்றதைக் கேளுங்க. ஷாக் ஒரு மூணு வாரம் ஒழுங்கா இங்க ஓடட்டும். அதுக்குப் பிறகு உங்கள் விளையாட்டை வைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் தடுக்கப் போவதில்லை" என்று ஜென்டில்மேன் அக்ரிமெண்ட் போட, கடந்த சில வாரங்களாக பாதுகாப்பாக ஓடியிருக்கிறது 'ஷாக்'!

அநேகமாக நீங்கள் இச்செய்தியைப் படிக்கும்போது, பதிலடியாக தியாகராஜனுக்கு 'ஷாக்' கொடுப்பதற்கான வேலைகளில் இறங்கியிருப்பார்கள் கைகள் கட்டவிழ்க்கப்பட்ட பைரசி வியாபாரிகள்.


✍ ச.ந. கண்ணன்



# SWEETS HOME

## நினைத்தாலே இனிக்கும்

அரை விநாடிக்குள் திருநெல்வேலிக்குப் போக நீங்கள் தயாரா? ஓ.கே. ரெடி ஸ்டார்ட்! முதலில் வாயை நன்றாகத் திறந்துக் கொள்ளுங்கள். தி.நகர் சவுத் உஸ்மான் ரோடு ஸ்வீட் ஹவுஸிலிருந்து வாங்கிய அல்வாவை எடுத்து வாயில் போட்டுக் கொள்ளுங்கள். மெதுவாகக் கண்களை மூடுங்கள் (வாயையும் தான்). சில ரசாயன மாற்றங்கள் நிகழத் தொடங்கும். பயம் வேண்டாம். பிறகு? அட ஆமாம் திருநெல்வேலிக்கே போய்ட்டோமே என்று ஆச்சரியப்படுவீர்கள். எல்லாம் அல்வாவின் மகிமை.



வாயில் போட்டவுடன் மெதுவாக வழுக்கிக் கொண்டே போய் சிறிது சிறிதாக அது கரைந்து போகும். சுவை இருக்கிறதே... அடடடா... நினைத்தாலே இனிக்கிறது.


ஸ்வீட் ஹவுஸில் கொஞ்சம் ஸ்வீட் கொஞ்சம் காரம் என்று எல்லாம் கூடச் கிடைக்கும் என்றாலும் மெயின் ஹீரோ நம்ம அல்வா தான்.

திருமணம் போன்ற விசேஷங்களுக்கு ஆர்டர் கொடுத்தால் அல்வா சப்ளையில் அசத்திவிடுவோம் என்று வேறு சொல்கிறார்கள். அப்புறமென்ன, இனி எல்லோருக்கும் அல்வா கொடுக்க வேண்டியது தானே!

📷 ஷிவ் ✍ கங்கா

---


# கடவுள் பஜார்!



ஒரு வியாபார ஸ்தலத்திற்குள்தான் செல்கிறோம். ஆனால் இரு கைகளும் தானாக கூப்பி கும்பிடுகிறது. உடல் சிலிர்க்கிறது. பின்னே! காணும் பக்கமெல்லாம் கடவுள் படங்கள், சிற்பங்கள். காது நனைக்கிறது "கௌசல்யா சுப்ரஜா ராம..."

"நான் எலெக்ட்ரானிக்ஸ் பிஸினெஸை ரிச்சி தெருவில் செய்து வருகிறேன். என் மாமனாருக்கு அறுபதாம் கல்யாணம் நடந்தபோது, ஆளாளுக்கு நகை, பட்டுப் புடவைகள் பரிசளிக்கும்போது, நான் மட்டும் ஐயாயிரம் மதிப்புள்ள டபமண்ட் வெங்கடாஜலபதியை பரிசளித்தேன். பிறகொரு நாள் அவர் சுதர்சன ஹோமம் வளர்த்த போது, நடு ஹாலில் பாலாஜி அமர்ந்திருக்க, எல்லோரும் என்னை மொய்க்க, அன்று பிறந்தது இதற்கான பிஸினஸ் ஐடியா" என்று டிவைன் கலெக்ஷன், தி.நகர் ராமேஸ்வரம் தெருவில் (அடடா?) உதித்த கதையைச் சொல்கிறார் இதன் உரிமையாளர்.

ரூ.3 முதல் 30,000 வரை விதவிதமான தெய்வங்கள். சென்னையிலேயே கடவுள் வழிபாட்டிற்கான



தேவைகள் அனைத்தும் இங்கு மட்டுமே உண்டு என எதிரேயுள்ள கடவுள் மீது சத்தியம் செய்து சொல்கிறார்.

ஆஸ்திரேலிய வைரங்கள் பதித்து ஜப்பான், சீன லைட்டிங் மத்தியில் வெங்கடாஜலபதி ஜொலிக்கும்போது சொக்கிப் போய் நிற்கிறோம். 'ஜருகண்டி' யாரும் சொல்வதில்லை. அப்பாடா!

📷 முகில் ✍ அரவிந்த்

---

# சென்னையில் ஸ்விட்சர்லாந்து!

எத்திராஜ், குயின்மேரீஸ், ஸ்டெல்லா மேரீஸ், எம்.ஜி.ஆர். ஜானகி, காயிதே மில்லத், வள்ளியம்மாள், செல்லம்மாள், வைஷ்ணவா, அன்னா ஆதர்ஷ், டாக்டர் ஜானகி, பாரதி... இவைகளெல்லாம் சென்னையிலுள்ள சிம்லா, டார்ஜிலிங்குகள் என பச்சையப்பன், நந்தனம், நியூ, விவேகானந்தா இன்ன பிற கல்லூரி மாணவர்கள் வர்ணித்து மகிழும் போதும், சின்னப் பொண்ணு இவ படிப்பது எத்திராஜா, ஸ்டெல்லா மேரீஸா, குயின் மேரீஸா தென்றல் வீசும் பூந்தோட்டம் என்றெல்லாம் வாலி, வைரமுத்து இளமை சொட்ட எழுதும் போதும்... தோன்றுகிறது அத்தனை கண்களிலிருந்தும் ஒரு ஸ்விட்சர்லாந்து குளுமையுள்ள பெண்கள் கல்லூரி மறைந்தே இருந்திருக்கின்றது இத்தனை நாளும். How can you dear?

காதையும் கண்ணையும் எப்பொழுதும் திறந்தே வைத்திருப்பவர்கள் 'டக்'கென்று சொல்லி விடுவீர்கள். யெஸ், தி ஒன் அண்ட் ஒன்லி டபிள்யூ.சி.சி. தான் அது. லயோலாவிலிருந்து கன்னிமாராவிற்கு வளைந்து நெளிந்து செல்லும் வழியில் தென்படுகிறது இந்த சென்னை சின் ஸ்விட்சர்லாந்து.

கண்ணைப் பறிக்கும் பெண்களும் அவர்தம் அணிந்த அடுத்த நூற்றாண்டிற்கான அழகழகான உடைகளும், ஸ்பென்சர் ப்ளாசா, காபி டேவிலும் மட்டுமே இது போல காண முடியும் என்ற கணிப்பை தகர்த்தெறிகிறது.

ஊற்றாய், அட்சயப் பாத்திரமாய், புற்றீசலாய்... எப்படி வேண்டுமானாலும் எழுதிக் கொள்ள வசதியாக நாலாபுறமும் பெண்கள் மேகக் கூட்டமாய் நகர்ந்து கொண்டேயிருக்கிறார்கள். கடவுள் மரமாகக் கனிந்து விட்டான் போல. நாம் முழுவதும் இங்குள்ள நூற்றாண்டு மரங்கள், கடக்கும் பூந்தோட்டங்கள் தலைமீது பூச் சொரிந்து கொண்டேயிருக்கின்றன. கண்ணில் தென்பட்ட அத்தனை பெண்களிடமும் பேசினோம். (சரி சரி, காதுல புகை விடாதீங்க). மீடியாக்களை இத்தனை நாட்களாக தங்களது கேம்பஸிற்குள் காணாதவர்கள், நம்மைக் கண்டதும் ஓடோடி வந்தார்கள்.

"வருக, வருக! சென்னை

ஸ்கேனே, கல்வியில் 'நடக்குமென்பார் நடக்கும்' தவறாமல் படிப்போம். இந்த வாரம் 'புது விருந்தாளி' என்று போட்டிருந்தது. ஓ.. அது நீங்க தானா" என்று ஜஸ் வைத்தார் ஐஸ்வர்யா (ராய் சேர்த்துக் கொள்ளலாம். அப்படியொரு உள்ளூர் அழகி)

"எங்க பொண்ணுங்கள பார்த்தீங்கள்ல, எவ்வளவு ஸ்மார்ட்டா இருக்காங்க (ஆமா, ஆமா). இங்கே எந்தவித ட்ரெஸ் கோடும் கிடையாது (ம், தெரியுது) கூட இவ்வளவு ஜாலியா சுதந்திரமா இருந்ததில்லை! ஊர்க் கண்ணு குறிப்பாக பசங்க கண்ணு இந்த காலேஜ் மேல படாமலிருக்கிறது ரொம்பவே சௌகர்யமா இருக்கு" என்று அடுக்கிக் கொண்டே போனார். நேரம் போனதே தெரியவில்லை.

வாழ்வில் எத்தனை எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா! என்றெண்ணிக் கொண்டு எல்லோருக்கும் டாட்டா காட்டிவிட்டு திரும்ப மனமில்லாமல் தான் திரும்பினோம்.

📷 ஷிவ் ✍ ச.ந.கண்ணன்



## வரி விளம்பரம்


ஜோதிடம்

ஜாதகம் கணிக்க, முகூர்த்தம் பார்க்க, கல்யாணப் பொருத்தம் நிர்ணயிக்க, ப்ரச்னம் சொல்ல, பொதுப்பலன் அறிய, யோக காலம் தெரிந்து கொள்ள, வார நாட்களில் மட்டும் பகல் 10 முதல் 1 மணி வரை அணுகவும்.

**கோமாண்டூர் ஸ்ரீநிவாசன், அஸ்ட்ரோ ஸ்கொயர், சாஸ்திரி நகர் முதல் மெயின் ரோடு. (வாட்டர் டேங்க் எதிரில், முதல் மாடி), அடையார், சென்னை - 20. தொலைபேசி : 24469160.**

ஜோதிடம், கைரேகை, எண்களின் பலன்கள், அதிர்ஷ்ட பெயர் எண் அமைத்தல், தொழிலகம், விற்பனைப் பொருட்களுக்கு அதிர்ஷ்ட Brand Name அமைத்தல். அணுகவும்:

**காருகுறிச்சி ஸ்ரீனிவாசன். தொலைபேசி : 2255 4228.**

# 'அம்மா' நாடகம்

**நா**டகத்தை அழிக்க டி.வி. சீரியலெல்லாம் இனி தேவையேயில்லை. நாடகக் கலைஞர்களே அதைப் பார்த்துக் கொள்வார்கள் என்றுதான் தோன்றுகிறது எஸ்.வி.சேகரின் லேட்டஸ்ட் நாடகமான 'மெகா வருவல்' பார்க்கும் பொழுது.

மேடை நாடகத்திற்குத் தேவையான இம்மியளவு கதை கூடக் கிடையாது. புதிதான, வலுவான ஜோக்குகளும் இல்லை. இதையெல்லாம் விட்டுவிட்டு நாடக மேடையை அ.தி.மு.க.விற்கு சாதகமாக குத்தகைக்கு எடுத்து விட்டார் எஸ்.வி.சேகர். (பக வதை தடைச் சட்டத்தை ஏன் அவர்கள் எதிர்க்கிறாங்க தெரியுமா? ஏன்னா அது 'அம்மா'ன்னு கூப்பிடறதால தான்!) கலைஞரையும் ராமதாஸையும் கிண்டலடிப்பதற்கென்றே தனித்தனியாக கேரக்டர்கள். இதோடு விட்டாரா, வைகோ, ஸ்டாலின், அன்புமணி, தயாநிதி மாறன் இவர்களுக்கும் ஆங்காங்கே 'பஞ்ச்'கள். சூர்யா - ஜோதிகா காதல், பில் ராத் ரிலையன்ஸ் போன் மற்றும் நாளிதழ்களில் காணப்படும் பரபரப்பான செய்திகள்... என விவேக் ஸ்டைலில் ஊர் உலகத்தைக் கிண்டல் செய்தாலும் பத்திரமாக அதிமுகவைக் கட்டிக் காத்த நாடகம்தான் 'மெகா வருவல்'.

அரசியல்வாதிகளே பின்னால் வேறு, அரசியல் வேறு என்று இயங்கும்போது, உங்களுக்கு மட்டும் ஏனிந்த வீண் வம்பு சேகர்?

✍ எழில்

# CDயாஞ்சலி

**கு**ம்பகோணம் தீ விபத்து தொடர்பாக கலைஞர் எழுதிய கவிதாஞ்சலி நம்ம ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முன்னாள் பிரதமர் வாஜ்பாய் ஆகியோரை மெய் சிலிர்க்க வைத்துவிட்டது போல. உடனடியாக அவர்கள் கடிதமெழுத, உற்சாகமாகிப் போன கலைஞர் அக்கவிதைக்கு பரத்வாஜ் மூலம் இசையமைத்து சி.டி.யில் பதிந்து, விற்பனை செய்யவும், அதன் மூலம் கிடைக்கும் வருவாயை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், மற்ற குழந்தைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தவும் திட்டமிட்டுள்ளார்.



✍ ஸ்வரா



# இது கூட காங்கிரஸ்ல கிடைக்கலையே!

## -குமுறும் வாழப்பாடி வாரிசு

**டெ**ல்லி அரசியலைக் கலக்க இதோ ஓர் இளைஞர் புறப்பட்டுள்ளார். அவர் மறைந்த வாழப்பாடி இராமமூர்த்தியின் வாரிசு இராம. சுகந்தன். தற்போது பா.ஜ.க இளைஞர் அணியின் தேசிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரை நமது CIP (சென்னையின் முக்கியப் பிரமுகர்) பகுதிக்காக சாஸ்திரி நகர் அலுவலகத்தில் சந்தித்தோம். மனிதர் படு அமைதி. கேட்கும் கேள்விகளுக்கு சுருக்கமான பதிலை ரெடிமேடாகவே வைத்துள்ளார்.

**அப்படி என்ன கோபம் காங்கிரஸ் மேல. காங்கிரஸுக்கு எதிர்ப்பா பி.ஜே.பில சேர்ந்துட்டீங்க?**

எங்க அப்பாவோட உழைப்புக்கும் தியாகத்துக்கும் உரிய மரியாதை தர காங்கிரஸ் தவறிடுச்சு. இந்த ஏக்கம் ரொம்ப நாளாவே எனக்குள்ள இருந்துச்சு. அதோட பி.ஜே.பியோட கொள்கையும் எனது கொள்கையும் ஒத்துப் போச்சு. அதனாலதான் பா.ஜ.கவுல சேர்ந்துட்டேன்.

**அந்த ஏக்கத்தை தேர்தல் நேரத்துல தான் வெளிப்படுத்தணுமா?**

அவசியமில்லை. இருந்தாலும் தோணுச்சி. உடனே சேர்ந்துட்டேன். அதுவும் காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் அறிவிக்கறதுக்கு முன்னாடியே விலகிட்டேனே!

**காங்கிரஸ்ல கிடைக்காத மரியாதை பி.ஜே.பி.யில கிடைச்சுட்டதா?**

இதோ இந்த மிகப்பெரிய பொறுப்பைத் தந்திருக்காங்களே. சரியான அங்கீகாரத்தை தந்துள்ளார்களே. இதுகூட காங்கிரஸ்ல கிடைக்கலையே!

**தமிழகத்திலிருந்து எம்.பி யிருக்கிற தயாநிதி, அன்புமணி போன்றவங்களுக்கு சரி கொடுக்கவே பதவி தந்துள்ளதாகவும், மற்றபடி எதற்காகவும் அல்ல என்கிறார்களே!**

அதற்காகத் தந்திருந்தால் அதனை ஏத்துக்கறேன். அவர்களுக்கு ஈடு கொடுப்பேன்கிற நம்பிக்கை எனக்கும் இருக்கு. தலைமைக்கும் இருக்கு.

**தயாநிதி - அன்புமணி ஆகியோருடன் நட்பு பாராட்டுவதுண்டா?**

அதுல நான் அப்பா மாதிரி. அன்புமணி அமைச்சரானவுடனேயே வாழ்த்துக் கூறினேன். ஆனா தயாநிதிக்கு வாழ்த்துக்கூற முடியல.

**உங்க அப்பா ஒரு தொழிற்சங்கவாதியா மக்களுக்கு அதிமுக ... மானார். ஆனால் நீங்க ஒரு சாதிய பிரதிநிதியாத்தானே ரஜினியை சந்திச்ச, அதன் மூலமாத்தானே அரசியலுக்கு வந்தீங்க... இது சரியா?**

ரஜினியை சந்திச்சது ஒட்டுமொத்த வன்னியர்களோட ஏகோபித்த தலைவரா தன்னை நினைச்சுக்கிட்டு வன்னியர்களை ரஜினிக்கு எதிராகப் போராடத் தூண்டும் ராமதாஸைப் பற்றியும், எங்கள் இனத்தவரோட நிலைப் பாட்டையும் தெளிவுபடுத்தவே போனேன். மற்றபடி வேறு எந்த நோக்கமுமில்லை. அப்படி சாதிப் பிரதிநிதியா போயிருந்தாலும் அதுல ஒண்ணும் தப்பு இல்லையே.

**இந்துத்வா பற்றி எந்த அளவுக்கு உங்களுக்கு பரிச்சயம்!**

இதுவரைக்கும் எந்தப் பயிற்சி வகுப்புகளுக்கும் போனதில்ல. இனிமே ஏதாவது பயிற்சி வகுப்பு நடத்துவாங்கன்னா, அதுல நிச்சயமா கலந்துகிட்டு எல்லாத்தையும் தெரிஞ்சுக்குவேன்!)

**சென்னை பற்றி...**

பிறந்தது சேலமாக இருந்தாலும், சென்னை எங்க வாழ்க்கையில ரொம்ப முக்கியமான பகுதி. அதிகமா பிராப்ளம் இருக்குற ஏரியாவும் சென்னைதான். முக்கியமா, குடிநீர்ப் பிரச்னை. சென்னையில் ரொம்ப பிடிச்சதுன்னா, ECR ரோட்டுல கார்ல மகாபலிபுரம் வரைக்கும் ஸ்பீடிலேயே போறதுதான்.


**உங்க அப்பா தமிழகத்தோட உயிர்ப் பிரச்னையான காவிரிப் பிரச்னைக்காக பதவியையே உதறி விட்டு வந்தார். நீங்க எப்படி?**

அந்த குணத்துல நான் அப்பாவோட சரியான வாரிசு. நிச்சயம் அது மாதிரி சூழ்நிலை வந்துச்சுன்னா, அப்பா வழியிலேயே செயல்படுவேன்.

✍ இரா.முத்துக்குமார்

📷 ராஜன்

சி.ஐ.பி



## FOLLOW UP

நமது சென்னை ஸ்கேனுக்கு (25.2.04) பேட்டியளித்த பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே. மகேந்திரன், வர இருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில், பெரம்பூர் பாலம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்துப் பேச உள்ளதாக தெரிவித்திருந்தார். ஆனால் அவர் சட்டமன்ற நிகழ்ச்சிகளில் பங்கேற்கவில்லை. ஏன் என்று அவரை மடக்கினோம்.


"சட்டமன்றத்திலே அனைத்து மானியக் கோரிக்கைகள் குறித்தும் விவாதிக்க, குறைந்தபட்சம் ஒரு மாதமாவது வேண்டும் எனக் கோரியிருந்தோம். ஆனால் எட்டு நாட்களே சட்டமன்றம் கூடியது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக, நாங்கள் இக்கூட்டத் தொடரில் பங்கேற்கவில்லை. வருங்காலத்தில் கூட இருக்கும் கூட்டத் தொடரில் நிச்சயம் கலந்து கொண்டு பெரம்பூர் தொகுதிக்காக குரலெழுப்புவேன்" என்றவரிடம், "வரும் கூட்டத் தொடரும் குறுகியதாக இருந்தால் என்ன செய்வீர்கள்? இதே போல் புறக்கணிப்புதானா?" எனக் கேட்டதற்கு, "நிச்சயமாக அது மாதிரி நடக்காது. கூட்டத் தொடர் நீண்ட நாட்கள் நடக்கும் என்பதில் நம்பிக்கை இருக்கிறது. அப்போது தொகுதிப் பிரச்னைகளை மன்றத்தில் எடுத்து வைப்பேன்" என்றார் உறுதியாக.

✍ இரா.முத்துக்குமார்

---

## ஆடுகளம்





சமீபத்தில் ஒரு விழாவில் முன்னாள் ஹாக்கி ப்ளேயர் பாஸ்கரன் கலந்து கொண்ட போது, அவர் முன் பேசிய பலரும் "சாம்பியன் பட்டம் வென்றதற்குப் பின் இந்தியாவிற்கு கிட்டவேயில்லை" ... என்று பாஸ்கரனுக்கு புகழ்மாலை சூட்டியதை அவர் விரும்பவேயில்லை. விடுவிடுவென மைக் முன்னால் வந்தவர் "இத்தனை நாள் கிடைத்திருக்காமல் போகலாம். ஆனால் இந்த முறை நிச்சயம் தங்கம் வெல்வோம். நம்பிக்கையோடு காத்திருப்போம்" என்று உணர்ச்சிவயமாகப் பேச பலத்த கைத்தட்டல் எழுந்தது.

தொடர்ந்து இரண்டு தடவை ரஞ்சி ட்ராபி பைனலில் எட்டிப் பார்த்த பிறகு தமிழகம் மீது ஒரு கண் வைத்திருக்கிறது பி.சி.சி.ஐ. பாலாஜி, பதானி தேர்வுகளுக்குப் பிறகு, அனைவரும் எதிர்பார்த்த விக்கெட் கீப்பர், பேட்ஸ்மேனான தினேஷ் கார்த்திக்கின் செலக்ஷன் கொஞ்சம் சீக்கிரமாகவே அமைந்து விட்டது. ரஞ்சி ஃபைனலில் விக்கெட்களெல்லாம் மளமளவென விழும்போது, மும்பை பவுலர்களின் பந்துகளை பவுண்டரிக்கு விரட்டி அடித்து செஞ்சுரி போட்ட போதே தினேஷின் விதி, தலைகீழாக மாறத் தொடங்கிவிட்டது. இந்தியன் டீமில் செலக்ஷன் ஆன போதும் அடுத்ததாக இந்தியா தொடர்ந்து ஒன்-டே மேட்சுகளாக 3 போட்டிகளில் விளையாடவிருப்பதால் ட்ராவிடைத் தாண்டி, நம் தினேஷ் கார்த்திக்கிற்கு வாய்ப்புகள் எந்தளவிற்கு கனியும் என்பது சந்தேகமே.

✍ எழில்

---

✉ 'பொலிட் பீரோ' வின் இறுதியில் 'சிப்பன் மாணிக்க எப்போ பொன்னாடையப் போதுவ்'ன்னு கேட்கிற நிருபர் 'எப்போ இடமப் போகிறது?' என்றல்லவா கேட்டிருக்க வேண்டும்.

- கவிஞர் அய்யாறு வாசுதேவன், மடிப்பாக்கம்

✉ சின்ன முடிக்க வக்காக்கட் பூரண மருத்துவ சிகிச்சையில் இருக்கும் 'கிருஷ்ணசாமி' எந்த சமயத்தில் 'திருப்பாச்சி' பக்கம் தலை வைக்க படிக்கப் போகிறாரோ? பாவம் 'விஜய்' குழுப்பம்.

- சுகந்தி நாராயண், வியாசர் நகர்,

✉ சென்னை மாநகராட்சியை தொடர்ந்து கலக்கி கட்டுரை எழுதினால் நிச்சயம் ஒழுங்காக இயங்கத் துவங்கிவிடும். ஷானின் இன்டர்வியூ, சிப்பின் துப்பாக்.

gh_ru@yahoo.co.in



✉ உங்கள் கருத்துக்களை chennaiscan@kalkiweekly.comல் தெரிவிக்கவும்.

பூமராங்

---

உங்களுக்குப் பிடித்த மெனு என்ன? நீங்கள் விரும்பி அணியும் காஸ்ட்யூம் எது? உங்கள் செல்லப் பிராணியின் பெயர் என்ன? இது போன்ற பல அறிவியல் - விஞ்ஞானக் கேள்விகளை நடிகர்களிடமும் நடிகைகளிடமும் பேட்டி எனும் பெயரில் பலர் கேட்டு பார்த்திருப்பீர்கள். சாகித்ய அகாதமி ஒளிபரப்பிய பேட்டிகள் வைத்து குறும்படங்களை இயக்கியிருக்கிறது சாகித்ய அகாடெமி. பாராட்டத்தக்க முயற்சி.

மியூசிக் அகாடமி வளாகத்தில் ஜெயகாந்தன் இந்தப் பட விழாவை துவக்கி வைத்தார். அசோகமித்திரன், பாலமணி அம்மாள், பாரதியார் என்று பல்வேறு படைப்பாளிகளைப் பற்றி சில நிமிடங்களில் சில படங்கள்.

## சில நேரங்களில் சில படங்கள்



சற்று வித்தியாசமானவை.

முதல் குறும்படம் தொடங்குகிறது. ஒரு பெரிய மரத்தைச் சுட்டிக் காட்டுகிறார் ஜெயகாந்தன். இங்குதான் எனது கதை உருவானது என்கிறார். அவரது படைப்புகள் தொடர்பான சில கேள்விகள் எழுப்பப்படுகின்றன. யோசிக்கிறார். மெதுவாக நடந்தவாறே சில கருத்துகளைச் சொல்கிறார். அவரது புத்தகங்கள் சிலவற்றிலிருந்து சில பக்கங்கள் வேறொருவரால் படிக்கப்படுகின்றன. அசோகமித்திரன் அவரைப் பாராட்டுகிறார். காட்சி மாறுகிறது. தனது குடும்பத்தாருடன் ஜெயகாந்தன் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார். அவர் எழுதி இயக்கிய திரைப்படத்திலிருந்து சில காட்சிகள் ஒளிபரப்பாகின்றன...

அடுக்கி வைக்கப்பட்ட புத்தகங்களுக்கிடையே எழுத்தாளர்களை நிறுத்தி வைத்து சில சம்பிரதாயக் கேள்விகளைக் தொடுக்காமல் இயல்பாக அவர்களைப் பேச

அட! எழுத்துகளைப் படித்து அறிந்து கொள்வது போலவே எழுத்தாளர்களைப் பார்த்து அறிந்து கொள்வதும் சுகமான அனுபவமாகத் தான் இருக்கிறது.

✍ மருதன்

---


சென்னை ஸ்கேன்

| Advertisement Rates | | |
|---|---|---|
| Display (col/cm) Column width 5 cm | B & W | 4 Colour |
| Regular page | Rs. 80 | Rs. 150 |
| Premium Pg.1 | Rs.120 | Rs. 220 |
| Back Pg. | Rs.100 | Rs. 180 |
| Ear Panel (5.5cm x 4cm) | — | Rs.900 |
| Classifieds Rs.150 for first 20 words, Rs.10 for every additional word, Max. 80 words. | | |

To Advertise contact

2232 4281 / 2231 4673




முகில்


# சாரதா'ஸ்

ஆடித் திருவிழா

10% முதல் 50% வரை

சிறப்பு தள்ளுபடி

அனைத்து சேலை ரகங்களுக்கும் வாடிக்கையாளர்கள் இவ்வரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள அன்புடன் அழைக்கிறோம்.

சாரதா'ஸ்

(முகூர்த்த பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)


827, அண்ணா சாலை, தவுசண்ட்லைட்ஸ், சென்னை - 2. போன் : 28521177

45, என்.எஸ்.பி.ரோடு, திருச்சி - 2. போன் : 2702077


## தளபதி பக்தி!

சமீபத்தில் தமக்கு வழங்கப்பட்ட 'டாக்டர்' பட்டத்தை தமது பெயருக்கு முன் போடக் கூடாது என தொண்டர்களுக்கு மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டிருந்தார். தற்போது அதனை மீறி சென்னையில் குறிப்பாக புறநகர்ப் பகுதிகளில் டாக்டர் தளபதி என போஸ்டர் அடித்து ஒட்டியுள்ளார்கள் திமுக இளைஞரணியினர். இதுதான் தளபதி (குரு) பக்தியோ?!

கலை



## போஸ்ட் கார்டு POLL

சென்னை ரயில்களில் மற்றும் ரயில் நிலையங்களில் ஊனமுற்றோர் வியாபாரம் செய்வதை

- அனுமதிக்க வேண்டும்
- தடுத்து மாற்று ஏற்பாடு செய்ய வேண்டும்
- ரயில்களில் அனுமதிக்காமல் ரயில் நிலையங்களில் மட்டும் அனுமதிக்கலாம்.

இந்த மூணுல உங்க சாய்ஸை போஸ்ட் கார்டுல அல்லது ஈ-மெயில்ல தட்டி விடுங்க... ரிசல்ட் அடுத்த வாரம்.


சென்ற வார Poll ரிசல்ட்

வரவேற்கலாம் 48%

வேண்டாம். பிரச்னைகள்தான்! 42%

எந்தவித மாற்றமும் ஏற்படாது. 10%

முகவரி: போஸ்ட் கார்ட் Poll,
சென்னை ஸ்கேன்,
47- NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 600 097
Email:
chennaiscan@kalkiweekly.com



பட்டி தொட்டிகளிலெல்லாம் கேபிள் ஒயர் ஊடுருவ அதனால் சமூகமான "மெட்டி ஒலிகளின்" மெகா சப்தத்தில் நாம் எத்தனையோ விஷயங்களைத் தொலைத்திருக்கிறோம். அதில் ஒன்று கிராமியக் கலைகளான பொம்மலாட்டம்.

இப்பொழுது தான் கிராமங்களே அதிகம் இல்லையே. பிறகு பொம்மலாட்டம் மட்டும் எப்படி இருக்கும் என்கிறீர்களா? அதுவும் வாஸ்தவம்தான்.

கடந்த வாரம் அலையன்ஸ் பிரான்சைஸ் நீ எங்கே எனும் தலைப்பில் பொம்மலாட்டத் திருவிழா ஒன்றை நடத்தினார்கள். தமிழ்நாட்டிலிருந்து மட்டுமின்றி ஆந்திரா, மஹாராஷ்டிரா, கேரளா, ஒரிஸ்ஸா போன்ற இடங்களிலிருந்தெல்லாம் பொம்மலாட்டக் கலைஞர்கள் வந்து உற்சாகமாக பொம்மைகளை ஆட்டுவித்தார்கள். 'தையதக்கா தையதக்கா' என்று பொம்மைகள் ஆடுவதும் இடையிடையே இசைக்கேற்ப ஆடுவதும் தனி அழகு. கதை எப்படி, சண்டைக் காட்சிகள் இருக்கிறதா, பாடல் காட்சிக்கு ஆஸ்திரேலியா போகலாமா என நேரம் தொந்தரவு செய்யாமல், இழுத்த இழுப்புக்கெல்லாம் ஆடியும் பாடியும் சமர்த்தாக நடித்துக் கொடுத்தன அந்த பொம்மைகள்.

இதிகாசங்கள் மட்டுமின்றி சமூகக் கதைகளிலும் இவர்கள் ஈடுபாடு காட்டுவது வரவேற்கத்தக்கது.

கங்கா







இப்பொழுதெல்லாம் புறாக்கள் கிடைப்பதில்லை. அதனால் எலியின் காலில் (ஈ-மெயில்)எனது இதயத்தை கட்டி உனக்கு அனுப்பியிருக்கிறேன். பார்த்தாயா?

கவிதை நடையில் எனக்கு எழுத வராது. அதனால் குழந்தையின் மொழியில் மழலையாக சில வார்த்தைகள்! ஒருவேளை வைரஸ் என்று நினைத்து ஒதுக்கி விட்டாயோ!

—மார்ட்டின்,
அம்பத்தூர்

(வாசகர்களின் காதலிஸங்கள் வரவேற்கப்படுகின்றன)

Regd. with the Registrar of Newspapers of India under No. 144/57 ... Registered ... TN/PMG(CCR)/572/03-05 Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 368/03-05
Registered as a Newspaper in Sri Lanka Supplement to the Kalki issue Dated 15.8.2004

# YOU CAN CHOOSE YOUR DOOR

## THAT IS YOUR RIGHT & RESPONSIBILITY

# MAYURAM TIMBER

Offers you wide variety of Doors at
Varying prices suiting your budget



## BE AWARE




Contact :


MAYURAM TIMBER & GENERAL TRADING CORPORATION

No.83 GST Road, West Tambaram, Chennai - 600 045.

Phone : 22415297 / 22381281

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 / 03 - 05 * Registered as a Newspaper in Srilanka


அனுபவியுங்கள் ஜீவா.
ஓர் ஆயுர்வேதிக் சோப்பு
27 மடங்கு
சிறப்பானது,
உங்கள் சருமம் புத்துயிர் பெற.



27
[illegible]

உசாகந்தரு
சதபுஸ்பா
பிரபாத்ரா
பிரம்மிஹி
தேவதாரு
ஜோதிஸ்மதி
நரிகேலா
குக்குலு
தாம்பகம்
தாருஹரித்ரா
திராகா
வனஹரித்ரா
ஏலா
விதங்கா
மாதுரிகா
மதுகா
வாரிடா
குதுரு
கர்பூரா
கிருஷ்ணதிராகா
வருணி
ரக்தசந்தன
சித்ரா
மதுஸ்னுஹி
அர்த்ரகம்
அஜமோடா
பூனிம்பா

அனுபவியுங்கள் ஜீவா. உங்கள் சருமத்திற்கு உகந்த சோப்பு. ஜீவாவிலுள்ள 27 அத்தியாவசிய ஆயுர்வேத உட்பொருள்கள் சருமத்திற்கு ஊட்டமளித்து, மெருகூட்டி, பாதுகாக்கிறது. இதன் ஒப்பற்ற நுரை சரும துவாரங்களை திறப்பதோடு மட்டுமின்றி, இதில் நிறைந்த ஆயுர்வேத நற்குணங்கள் சருமத்தில் ஊடுருவிப் பாய்கிறது. எனவே உங்கள் சருமத்தில் இளமை, மென்மை மற்றும் பொலிவு பூத்துக் குலுங்குகிறது. மேலும் சருமத்திற்கு தருவதோ புத்துயிர்.




சருமம் புத்துயிர் பெறும்

From the house of Jyothy Laboratories Ltd. Shivshakti Estate, Marol, Andheri (E), Mumbai - 59.

Situations/JLL-JEEVA/89/2002 TAM